Altogether six meetings were held. The inaugural address was delivered by Mr. P. S. Krishnan B.Sc.; who spoke at length on 'Valmiki.' Other important items were a talk by the student president on 'Dramatic Literature' when Mr. Anantharamaseshan, M.A., presided, an essay in Sanskrit on 'Bharatham' read by Mr. Ramasubramanyan, IV U. C., a talk by Mr. Ananda Rao, IV U. C., on 'Epics in Sanskrit' and another interesting essay on 'Kalidasa' by R. Krishnan, I U. C., when Mr. T. V. Srikanta Sastry, M.A., presided and supplemented the topic with his learned comments on 'Kalidasa's works'.

R. NARAYANAN,
R. KRISHNAN,
Secretaries.

Report of the Science Association
1952—'53

THE Science Association began on the 12th of August 1952 with an inaugural address by Mr. Krishnan, B.Sc., who gave an interesting lecture on 'Atom'. Mr. Subbier M.A., L.T., presided over the meeting and added something more to the lecture. The Second Ordinary meeting was held on 20-8-1952 in which Mr. Kalyanasundaram, II U.C., read a paper on 'the fixation of Atmospheric Nitrogen.' Mr. S. Srinivasan, B.Sc., presided over the meeting. The third ordinary meeting was held on 7-11-52 in which Mr. Albert Fernando read a paper on 'Glass Manufacture.' Mr. Dawson Fernando, B.Sc., presided. The fourth meeting was held on 20-1-53 in which Mr. Rajendram, B.A., B.Sc., (Hons.) gave a very interesting lecture on Snakes. The meeting was well attended and the lecture was appreciated by the students and staff. The fifth ordinary meeting was held on 30-1-53 in which Mr. Jeyaraman, I U.C., read a paper on War Germs and pointed out how to destroy the harmful ones.

The last meeting was the Valedictory address given by Mr. S. Balasubramanian, B.Sc., (Hons.) an old boy of the College, now a professor of Chemistry in M. D. T. Hindu College, Tirunelveli. He spoke on Catalysis and Catalytic agents. Rev. Fr. S. Kapali, S.J., presided. Thus the Association closed for the year 1952-53.

D. ALBERT, II U.C.
R. GOVINDAN, II U.C.
Secretaries.

History and Economics Association Report 1952—'53

THE unusual enthusiasm evinced by the economics students of this institution, encouraged by Fr. Principal and Prof. Thyagarajan brought into existence a History and Economics Association towards the end of the First Term.

Mr. A. V. Subramania Iyer, a leading journalist of this district on the 27th of August 1952 delivered the inaugural on "The Economics of the New Age". Rev. Fr. K. A. Soosai, S.J., Principal presided. On the 5th of November an ordinary meeting was held with Mr. G. Devasahayam, IV U.C., in the chair. Mr. Caesar Antony, III U.C. spoke on "Protection in Industrial Development."

On the 29th of November Prof. M. V. Subramanian, M.A., L.T. of St. John's College, Palamcottah, delivered a lecture on "Thoughts on World Events." His address was full of his characteristic humour and analogies. It was a time, when the whole World had set their anxious eyes on the American Presidential Elections, and naturally the speaker gave the topic the due respect it commanded. In his 120 minutes' speech he surveyed the economic and political conditions prevalent in different parts of the World and suggested how the position could be improved. He dealt with, in all severity, the attitude of the 'Iron curtain' countries towards World Peace, and warned civilisation against the Communist invasion. "Eradication of illiteracy, and improvement in the economic conditions of the people are the only methods to combat Communism successfully", he said. Prof. V. Thyagarajan, M.A., L.T., Vice-President of the association, gave a beautiful finish to the evenings function in his presidential remarks.

The New Year has started well with an extra-ordinary meeting, when on the 20th January 1953, Mr. B. R. Ranganathachariar, Correspondent, Indian Express, and the Vice-President of the Districts journalist association, gave a talk on "Newspaper and the public." Rev. Fr. J. G. Sundaram, S.J., kindly presided over the function.

The activities of the year are not ended as yet. Three more meetings have been scheduled for the rest of the term, of which one will be a debate.

JACOB KOSHY, III U.C.
ANANDA RAO, IV U.C.
Secretaries.

Kerala Samajam Report
1952—'53

THE Kerala Samajam, with Rev. Fr. K. A. Soosai, S.J. and Vidwan Mr. K. V. Chacko as president and Vice-president respectively, did splendid work during the Year 1952—53.

Mr. T. P. Mathew, lecturer in Malayalam, St. John's College, Palamcottah delivered the inaugural address on "The Kerela Culture". Vidwan Mr. K. V. Chacko presided.

The second meeting was a parliamentary debate held on 13—8—'52. Mr. Purushothaman Elayath, B.A., acted as observer. Mr. J. Cyprian, III U.C. moved the proposition: "Progressive literature is detrimental to the betterment of human Society," and Mr. P. M. Louis, II U.C. opposed it. The opposition was carried.

The third ordinary meeting was held on 20—8—'52 with Mr. Jacobkoshy, III U.C. in the chair. Mr. Karunakaran Nair, I U.C. spoke on "Short Stories".

Our lecturer Mr. K. V. Chacko, Vidwan presided over the fourth meeting. Mr. K. P. Mathew, III U.C. Spoke on "Changampuzha and his literary works".

The next meeting was presided over by Mr. J. Cyprian, III U.C. and Mr. Cyril Harison, II U.C. spoke on "The Cinema is more harmful than beneficial". The sixth ordinary meeting was held under the presidentship of Rev. Fr. K. John, S.J. Mr. Hameed, III U.C. spoke on "The problem of linguistic provinces".

Mr. J. Simon, IV U.C. presided over the seventh ordinary meeting and Mr. J. Cyprian, III U. C. spoke on "Modern Malayalam literature".

K. BENNACHAN, IV U.C.
P. T. JOHN, II U.C.
Secretaries.

EBB AND FLOW

July 4, 1952: The Secretary of the Staff Club, Mr. A. Arulappan gets up a Tea Party to greet the new Principal. Mr. P. Sudalaimuthu is the host. In the toast, Mr. David Michael tenders the love and loyalty of the Staff to Fr. K. A. Soosai, S.J., assuring him of their unstinted co-operation. Father Principal humorously responded that he was indeed, "a young body with an old head," ever solicitous about the Staff and Students of St. Xavier's.

July 8: At 9-30 A.M. Father Principal says the Mass of the Holy Ghost in the College Chapel; all Catholic Students and Staff attend. "The Veni Creator" sweetly sung by our choir sends a thrill of inspiration to all. In the bilingual sermon, Father Principal explains the gifts of the Holy Ghost invoking the four pertaining to the intellect to be imparted to all assembled.

July 16: Mr. K. Subramanian, Assistant Collector, inaugurates the Literary and Debating Society. He seems to be a model ladder of ambition to our young men.

July 20: Hosannah is sung by the Xavarians and local parishioners to our Lord in the Eucharist. Flags and festoons, tastefully decorated Pandals and soul-stirring prayers and songs mark our celebrations of the Corpus Christi Procession.

July 25: Our new Principal is at home to his staff. Messrs. S. Selvanayagam and S. Mudiappan thank him.

July 31: The Feast of St. Ignatius of Loyola is right royally celebrated. It begins with a Solemn High Mass. The good shepherd of the Britto Hostel, Fr. Vincent Miranda, S.J., kindly invites the Catholic Staff to a garden party of the Catholic Students. Eating and drinking are accompanied by speech-making and singing. Messrs. E. K. Joseph and G. Devasahayam of the Britto Hostel appreciate the invaluable services of the sons of Loyola. Mr. A. Arulappan thanks the organizers.

August 4: At 3 P.M. Rev. Fr. D'Souza, S.J., is given a civic reception by the Municipal Council, Palamcottah. The Chairman, Mr. P. S. Subramania Pillai, presents the civic address being an old pupil of his and an alumnus of St. Xavier's.

At 5 P.M. Fr. D'Souza addresses the L. and D. Society of our College on the "U.N.O." His torrential eloquence and clarity of thought produce a great effect on our students. In spite of short notice, the elite of the town gather at 5 P.M. on August 5 to listen to his lecture on "World Order." The Boarding House Hall is packed. A correct judge of international affairs, Fr. D'Souza holds the audience spell-bound for 75 minutes. Mr. K. S. Venkataraman, I.C.S., our popular Judge, in his presidential speech remarks that the lecture of the day was one of the best he has heard in India or abroad. The venerable old T. S. Radhakrishna Ayyar proposes a vote of thanks.

August 6: Our Catholic Students begin their Retreat.

August 27: Mr. A. V. Subramania Ayyar, Journalist, delivers the inaugural address

on "The Economics of the New Age." He deplores that India is a land of infant mortality. One wishes this category does not include the new-born Associations!

September 6: The creation of the Madura Province is publicly celebrated. The Catholic laity of the town organize the function. Mr. David Michael of the Arts College and Mr. S. Swaminathan of the B.T. College speak in English and Tamil about the work and history of the Madura Mission out of which, the Province of Madura has sprung up. The local Convent Schools supply musical performances. The gratitude of the Catholic public to the Jesuit Fathers is expressed through an address and a purse presented to the heads of the Society in the town—Rev. Fr. M. X. Ferdinand, S.J., Mission Superior and Rev. Fr. J. Santiago, S.J., Rector. In the unavoidable absense of the former from the District, Rev. Fr. Rector accepts both. With a clear understanding of the significance of the event, Rev. Fr. Rector exhorts the Catholic parents to offer their children to Religious Orders.

September 12: Michaelmas Holidays begin.

October 3: Our Students and Staff, refreshed after a change, commence their work for the second term.

October 17, 18 & 19: The Fourth Centenary of St. Francis Xavier's Death and the Centenary of St. Thomas are celebrated in a fitting manner. They begin on the 17th with a Dialogue Mass by Rev. Fr. Rector. The Centenary Flag is hoisted by Rev. Fr. A. Kulandaisamy, S.J., Superior, St. Mary's, Madurai, who also preaches in the evening. The leading laymen of the town take part in a debate, 'Whether missionary work in India must be done through direct social action or schools and colleges.' Mr. X. I. Cruz, District Supply Officer and an Old Boy presides. An impressive Candle Light Procession with the relic of St. Francis Xavier is also held. On the 19th, the Pontifical High mass is sung by the Rt. Rev. F. T. Roche, S.J., Bishop of Tuticorin. A grand Academy is got up in honour of the celebrations. His Lordship presides.

October 30: Our Annual Sports are conducted with the usual enthusiasm. Mr. T. T. P. Abdulla, D.S.P., presides. In the evening, the Science Block is opened by Mr. S. Gavindarajulu, Bar-at-Law, Director of Public Instruction, Madras. He also presides over the College Day celebrations. The Principal, presents the Annual Report, a record of success during the academic year. Mr. Govindarajulu in his address praises the good work and noble services of the Jesuits in the State of Madras for the cause of education. The Students put on boards "Bell", a farce.

November 3: The news of the passing of Fr. A. Gnanapragasam is received with great grief. A condolence meeting is held in the Boarding House Hall. Messrs. S. Selvanayagam and V. Srinivasa Iyengar speak on the late father. A condolence resolution is passed. As a mark of honour to the memory of the good old Father, St. Xavier's First Rector, the college and school are closed.

November 22: Our Old Boys' Association is alive and kicking. A very Old Boy, Mr. Jonathan David proposes the Toast to the Alma Mater at the Tea Party which is the first item in its Annual Celebration. The public meeting is presided over by Mr. M. Sargunam, Assistant Secretary to Food and Agriculture, Madras. After the eloquent speeches of

Mr. Senthilnayagam, local Tahsildar and of Mr. Vadivalagianambia Pillai, a former Vice-President, the portrait of Fr. Gnanapragasam is unveiled by the President. Father Principal welcomed the gathering. Mr. R. R. Subramanian, Secretary, presents the annual report. Mr. Kumaragurubaran proposed a vote of thanks. An interesting event is the Tamil drama staged by the staff under the able direction of Mr. V. Thiagarajan.

December 18: The college breaks up for Xmas.

January 8, 1953: The college reopens.

February 2: Feast of the purification is a day of much rejoicing. Rev. Fr. K. A. Soosai, S.J., Principal, and Rev. Fr. Vincent Miranda, S.J., General Prefect, take their last vows. This memorable event is celebrated by the Catholic Staff and students. An address is presented by the Catholic staff, and students combine this occasion with their annual Academy of their multi-religious activities—the sodality, the Catholic Univercity Federation, the Catholic Truth Association, the knights of the Blessed Sacrament and the Laymen's philosophy course. In very touching terms, the two Fathers reply to the felicitations.

The college staff club has a Tea Party to honour Rev. Fr. Principal and Father General Prefect. Mr. K. V. Chacko is the host. Explaining in lucid terms and the meaning of the Last Vows, Rev. Fr. Rector gives a bird's eye view of the formation of a Jesuit-Novitiate 2 years, Juniorate 2 years, Philosophy 3 years, Regency 3 years, Theology 4 years and Tertianship 1 year. The Last Vow marks the end of the formation period and betokens the irrevocable incorporation into the ranks of the Society. Mr. V. Thiagarajan on behalf of the Staff congratulated the Fathers on the attainment of their high goal.

S. D. M.

IN MEMORIAM

The Late Rev. Father A. Gnanapragasam, S.J.



1869 — 1952

AN APPRECIATION

THIS academic year is significant in the annals of St. Xavier's College in this sense that it has seen the demise of Rev. Fr. A. Gnanapragasam, S.J., her first Rector. He was, however, associated with the institution not only as Rector for 6 years, but also as Principal of the College for five and as Headmaster and Assistant Headmaster for more than twenty years. Many are the Xaverians who can never forget their old Headmaster or their old Principal who had once moved with them in his peculiarly attractive, informal way. I say 'informal' because in all the nine years of my close acquaintance with him as my Headmaster and Principal, I have never seen him exercising his authority as if he was conscious of his position. No doubt, once in a week, as Headmaster, he used to visit every class to read the progress report of the boys for that week and deal a little sternly with those who were habitually negligent. But it was only a cloak put on for the moment. When once he had passed through that 'ordeal', he was his original self and the smile was again on his face. He always talked mildly even when issuing orders. But his efficiency as an administrator never suffered because his wishes were always willingly complied with.

His was a very affectionate heart and those who moved with him could not be blind to it for long. His goodness and sincerity were understood so well that none of his old boys ever got offended if he was addressed by him in the same familiar manner as he was addressed when he was a student, though now he was a big officer or a father of many children or sometimes even a grandfather! The following words of Mr. Vadivalagianambia Pillai, a retired Inspector of Excise and one of the old students of Fr. Gnanapragasam, can be quoted as an instance in point. "After twenty-eight years I happened to meet our Rev. Fr. Gnanapragasam in this College where my sons were reading. I wished him 'Good Evening' and kept mum for a minute. He accosted me 'என்னடா வடிவழகியநம்பி சவுக்கியமா?' My sons who were with me became a little puzzled and a bit offended too. Afterwards I told them that out of affection he used to speak

CONNEMARA PUBLIC LIBRARY
25 AUG 1955
MADRAS

Rev. Fr. Gnanapragasam, S. J.
1869—1952

like that to those whom he liked best and that they were his endearing terms."

Could such a Father remain without doing something or other for promoting the convenience of the boys under his care? Certainly not. It was he, for example, who gave the High School boys the benefit of a spacious and well-ventilated building. He brought great relief both to the boarders and to the Fathers by building the ground-floor of the present Fathers' Lodge. When the Fathers moved to their new quarters, the boarders certainly found themselves more comfortably accommodated.

No wonder Father Gnanapragasam was famous for his charity also. He could never bear the sight of a poor beggar nor listen unmoved to a tale of woe. The right-drawer of his table was full of cigarette tins containing coins of various denominations and one or two bundles of 5 and 10 rupee notes also could be seen deep inside. And, with what a delight he used to look at this treasury of his and with what a far greater delight, did he make use of it whenever anybody approached him with a petition for help! On more than one occasion, I myself was the person who took a five or even a ten rupee note from him to the person standing outside his room after the latter had moved his heart with an account of sufferings and misfortunes, fictitious or otherwise!

Now, what was the secret of this great treasury of his when he belonged to an order which makes its members take the vow of poverty? It lay in his making a capital use of a permission given to individual Fathers to accept private contributions for charity. He used to ask students who had benefited by his kind scholarships to remember him after they had been well established in life and send him whatever they could to help him in his work of charity. And, they remembered his wish so well that his treasury was always full.

But soon hard times came. The depression started in the 2nd half of the second decade of this century. The money-orders to him became fewer in number and brought also smaller sums. But his heart had not grown smaller proportionately. He could not bear the sight of a practically empty drawer. More unbearable still was the sight of the growing number of the poor who came to him for charity. One cannot forget the words which came out of his kind and childlike soul when he found himself in this sorry plight. They were: "It is high time for me, Selvam, to go away from this place. I cannot remain here and occupy this position and, at the same time, drive away these people without giving them anything. Some unknown corner is the best place hereafter."

It was not long before he realised his wish. He left us in 1932. But though he was 200 miles away, his heart was always with us and with St. Xavier's. I used to see him whenever I went to Trichi, and everytime he used to ask me about the welfare of everyone he knew in Palamcottah. On those occasions I was often

bewildered by his extraordinary memory which enabled him to remember the names of almost all his old boys and even their children.

Such a great soul is now gone from our midst. But I am quite sure that his spirit will be hovering over St. Xavier's for ever praying for it and blessing it, so that she continues with greater and greater success to produce in ever increasing numbers not only worthy citizens of our Mother-land but also honest and untiring workers in the vineyard of Our Lord.

S. SELVANAYAGAM, M.A., L.T.

இயற்கையே! சிறந்த ஆசிரியர்!!

என்னையுமறியாமலே என் கால்கள் சோலையைநோக்கி நடந்தன. மரம், செடி, கொடிகள், மலர்கள் என்னை வரவேற்றன. இயற்கையின் எழிலை வியந்துகொண்டே சோலையை அடைந்தேன். ஒரு மரத்தின் கிளையில் தன் துணையுடன் ஆண் புருவொன்று இருக்கக் கண்டேன். அவற்றைப் பார்த்து "ஏன் இருவரும் இப்படி இருக்கிறீர்கள்" என்று நான் கேட்டாற் போல் அவைகளுக்குத் தோன்றியது போலும்! "காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தவே இப்படி இருக்கிறோம்" என பெண் புரு கூறியது. ஆண் புரு அதை அப்படியே ஆமோதித்தது. 'இயற்கை பெற்ற செல்வங்களே அப்படியா' எனக் கூறிக் கொண்டே நடந்தேன்.

பூஞ்சோலை மலர்களிலுள்ள தேனை தேனீக்கள் சேகரித்து தம் கூடுநோக்கி சென்றுகொண்டும் திரும்பிவந்துகொண்டும் இருந்தன. அவைகளின் செயலை அண்ணாந்து கவனித்ததை அவை அறிந்தனபோலும்! "ஏன் எங்கள் செய்கையைக்கண்டு வியப்படைகிறீர்? இல்லங்கள்தோறும் சென்று துறவிகள் யாசிப்பதைப்போல நாங்களும் மலரில்லங்கள்சென்று யாசிக்கிறோம்" என விடை பகர்ந்தது ஒரு தேனீ. தேனீயின் இப்பதில் எனக்கு தேனைவிட தித்திப்பாகவே இருந்தது. மேலும் விந்தைக்குரியவற்றை அறியவேண்டும் என்ற ஆவலால் நடக்கலானேன்.

மயில் தன் தோகையை விரித்து நடனமாட, குயில் இன்னிசைக்கீதம் இசைக்க, சம்பங்கோழி தாளம்போட, சூரியன் தன் வெண்ணிற வொளியை வீச, குரங்கு மரத்தின்மீது உட்கார்ந்து நடனக்காட்சியிற் கண் வைத்தபடியே இருந்தது. என்னைக் கண்டதும் குரங்கு கீழே இறங்கி வந்தது. நான் மயில், குயில், சம்பங்கோழி, கதிரவன் கதிர் முதலியவற்றையே கூர்ந்து நோக்கினேன். அதற்குள் குரங்கு என்னருகில் வந்து ஏதோ தெரியாதவருக்கு தெரிந்தவர் விளக்குவது போல என்னைப்பார்த்து பேசத்தொடங்கியது. "ஐயா தாங்கள் பார்ப்பது எங்களுடைய நடனக் கச்சேரியை. இதோ இந்தச் சோலைதான் எங்கள் சலனப்பட உற்பத்திச்சாலை (Studio) நான்தான் டைரக்டர். குயில் எங்கள் கோகிலகான இசைவாணி. மயில் எங்கள் மதிப்பிற்குரிய நடனகலா தேவி. சம்பங்கோழி எங்கள் சங்கீத சிரோன்மணி. கதிரவன் எங்கள் 'கேமராமேன்'. இயற்கையழகு என்னும் படப்பிடிப்புக்காக இப்போது நடனக் கச்சேரி ஒத்திகை நடைபெற்றது" எனக் கூறியது. வியப்பும் உவகையும் போட்டி போட்டுக்கொண்டு வந்தன. இயற்கை சலனப்பட உற்பத்திச்சாலையை பெருமிதமாக எண்ணிக்கொண்டு நடந்தேன்.

காகங்கள் 'கா கா' என ஆரவாரம் செய்தபடியே கூட்டமாக ஓரிடத்தில் கூடின. அங்கு சிறு அளவாகக் கிடைத்த உணவை பகிர்ந்து யாவும் உண்ணத்தொடங்கின. நான் அதற்குள் அக்கூட்டத்தின் அருகில்

சென்றடைந்தேன். யாவும் ஒன்ருக உணவைக் கொத்தித் தின்றன. அசையாதவாறு அவைகளையே நான் நோக்கினேன். "ஐயா தாங்கள் பார்ப்பது எங்களுடைய உண்டி விருந்தையாகும். நாங்கள் மனிதர்கள் மாதிரி பசித்தவர்களைப்பாராது புசிக்க மாட்டோம். கிடைத்ததை எல்லோரும் ஒற்றுமையாகவே புசிப்போம். எங்களுக்குள் ஏற்றத் தாழ்வு, தீண்டாமை கிடையாது. ஒற்றுமையே எங்கள் மதம்" என ஒரு காகம் கரைந்து எனக்குக் கூறியது. காகம் கூறிய யாவும் உண்மையே என எண்ணிக்கொண்டு மேலும் நடக்கலானேன்.

கிளிகள் கூட்டமாக வந்து ஓரிடத்திலுள்ள தானியக்கதிர்கள் அருகில் கூடின. ஒவ்வொன்ருக ஏதோ கபடமற்ற சொற்களை வீசின. நான் அருகில் சென்றேன். பஞ்சவர்ணக் கிளிகள் சிறிது உயரமான இடத்தில் அமர்ந்திருந்தன. பச்சைக் கிளிகள் சிறிது தாழ்வான இடத்தில் அமர்ந்து இருந்தன. பஞ்சவர்ணக் கிளிகள் ஒவ்வொன்ருக ஏதோ கனிமொழிகளைப் பேசின. என்னைப் பார்த்து ஒரு கிளி ஓடிவந்தது. என் நிலையைப் புரிந்துகொண்டு பேசத் தொடங்கியது. "ஐயா, தாங்கள் பார்ப்பது கிளிகள் மாநாடாகும். உங்கள் பெண்கள் மாநாடு போன்ற மாநாடு. பெண்களார் உரிமைக்காக மாநாடு கூட்டுவதுபோல் நாங்களும் மாநாடு கூட்டியுள்ளோம். மாநாட்டுக்கு பஞ்சவர்ண அம்மையார்கள் (கிளிகள்) தலைமைதாங்க சொற்பொழிவு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆண்களை எங்கள் மாநாட்டிற்கு அனுமதிப்பது வழக்கமில்லை. எனவே தாங்கள் போகலாம்" என அக்கிளி கனிமொழி பேசியது. 'நல்ல மாநாடு' என அலுத்துக்கொண்டே நடந்தேன்.

தூக்கணங்குருவியொன்று மெல்லிய இழைபோன்று உள்ள ஓலைத்துரும்பால் கூடு கட்டிக்கொண்டிருந்தது. கூடு பார்ப்பதற்கு வெகு நேர்த்தியாகவும 'நம்மால் இது முடியுமா' என நாம் வியக்கும் அளவுக்கு அமைந்திருந்தது. அக்குருவி அமைக்கும் கூட்டைப் பார்த்துக்கொண்டே நின்றேன். என்னைப் பார்த்ததும் தூக்கணங் குருவி சிரித்தது. "என்ன விழிக்கிறீர்? நான் என் கலையாக இக் கூட்டைக் கட்டுகிறேன். உம் இனத்தவவரால் இக் கூட்டை அமைக்கமுடியாது. அவ்வளவு நுட்பமாக அமைக்கிறேன். உங்கள் கட்டடக் கலையைப்போல் மேம்பாடாக அமைக்கிறேன். ஆனால் சோமநாதபுரம் கோயிலை அழித்த கஜினி மகமதுபோல் என் கட்டடத்தையும் குரங்கு அழிக்காமல் இருக்க வேண்டும்" எனக்கூறியபடியே தூக்கணங் குருவி கூட்டை அமைத்துக்கொண்டிருந்தது. நான் மேலும் நடக்கலானேன்.

சிறு குளம் ஒன்று ஆங்கிருந்ததை அறிந்து சென்றேன். குளக்கரையோரமுள்ள தாழை மரத்திலுள்ள பூவிலிருந்து மகரந்தப்பொடி அருகே தண்ணீரிலுள்ள செந்தாமரைப்பூவில் விழுந்தது. வெண்தாமரை அதனைக் கவனித்தவாறே இருந்தது. நானும் அதன் அருகே சென்றேன். "பார் மனிதா பார். என் மனைவியை இயற்கைப் படக்காட்சிபார்க்க நீ உன் மனைவியை செயற்கை படக்காட்சி பார்க்க அழைப்பதுபோல் அழைத்தேன். உன் மனைவிபோல் இவளும் இன்னும் பவுடர் பூசிக்கொண்டுவர நேரமாகிறது என வெண்தாமரை, செந்தாமரையைச் சுட்டிக் காட்டியவாறே கூறியது. என்னையறியாதே சிரித்துக்கொண்டே குளக்கரையில் நடந்தேன்.

தனக்கு நிகர் தான் என்ற எண்ணத்தோடு அன்னம் ஒன்று நடை அழகுற போட்டுக்

கொண்டு சென்றது. "ஐயா வெண் தாமரைகள் செய்யும் அட்டகாசத்தைப் பாருங்கள். தண்ணீர் கொண்டுவர செல்லும் பெண்ணைப்பார்த்து கேலிபுரியும் சில காலிகள்போல் என்னைப்பார்த்து இந்த வெண் தாமரைகள் 'அன்ன நடையைப் பார்' எனக் கேலிபுரிகின்றன. என் தோழி செந்தாமரை இதனாலேதான் வெட்கமும் கோபமும் அடைய முகம் சிவந்து கர்ணப் படுகிறாள் என்றது. அன்னத்தின் ஆவலாதியைக் கேட்க அதிசயமான மகிழ்ச்சி பொங்க நடக்கலானேன்.

கவரிமான் ஒன்று குளக்கரையருகே இறந்து கிடந்தது. ஏன் இறந்தது என அறியும்பொருட்டு அருகே சென்றேன். அருகேயுள்ள ஒரு மான் என்னை 'கருணை புரிக' எனக் கூறுவதுபோல் நோக்கியது. "பார் மனிதா! என் துணை இறந்துவிட்டது. தன் மயிர் நீங்கவே பொறுது இறந்துவிட்டது. மானம் உடையது என் துணை. உங்கள் மனிதரில் சிலரைப்போல மானமிழந்தும் வாழாது என் துணை. எனவே மானத்தோடு உயிர்விட்டது" என அதன் அருகே நின்ற மான் கூறியது. மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர் நீப்பர் மானம்வரின் என்ற வள்ளுவன் வாக்கை நினைந்துகொண்டே நடக்கலானேன்.

அரவம் ஒன்று என் எதிரே ஊர்ந்து வந்தது. அச்சத்தோடு பின்வாங்க எத்தனித்தேன். "ஏ மனிதா! என்னிடத்தில் விடம் இருப்பதற்காகத்தானே அஞ்சுகிறாய்? என்னிடத்தில் விடம் பல்லளவில் இருக்கிறது. ஆனால் உன் மனித துட்டர்களுக்கு அங்கம் முழுதும் விடமாமே. அவர்களைக் கண்டால் உயிரையே விட்டுவிடுவாயோ?" என்று கேட்டவாறே நகர்ந்தது அரவம்.

குளத்தின் மடைத்தலையில் ஓர் கொக்கு வாடிய முகத்துடன் இருந்தது. என்னைக் கண்டதும் நிமிர்ந்து நோக்கியது. "மனிதா என்னை அறிவிலாதவன் என்று நினைக்காதே. பெரிய மீனுக்காக காத்திருக்கிறேன். அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணி கடக்கக் கருதவும் வெண்டாமப்பா" என்று அறிவுரை பகர்ந்தது. கொக்கின் அறிவுரையைக் கேட்டவாறே நடக்கலானேன்.

"அபயம்! அபயம்!! காப்பாற்றுங்கள்" என சத்தம் வந்தது. ஓட்டமாக ஓடி சத்தம் வந்த திசையை அடைந்தேன். தவளையை ஒரு பாம்பு பிடித்துக்கொண்டது. தவளைதான் மேற்கண்டவாறு கத்தியது. "மனிதா! தன் வாயாலே கெடும் பேதையைப்போல் நானாகவே என் வாயால் கத்த இப்பாம்பு எனை பிடித்துக்கொண்டது. நான் கத்தாமல்மட்டும் இருந்திருப்பேன் ஆனால் எனக்கு இக்கதி வராது" என்று தவளை கூறியது. நான் தவளைக்காக இரங்கி பாம்பினிடமிருந்து தவளையை விடுவிக்க முயன்றேன். "நில் மனிதா! நீ என் விஷயத்தில் தலையிடாதே. உன் வர்க்கத்தில் எளியவனை வலியவன் இம்மாதிரிதான் விழுங்குகிறான். நானும் அதேபோல் செய்கிறேன். முதலில் தவளையைக் காப்பாற்றுவதைவிட தவளை நிலையிலுள்ள எளியவர்களைக் காப்பாற்று" எனப் பாம்பு பகர்ந்தது.

மீண்டும் நடக்கலானேன். தவளையும் பாம்பும் கூறிய வார்த்தைகளை நினைந்துகொண்டே சென்றேன். திடீரென என் முன் பச்சோந்தியொன்று தோன்றியது. அதனை வெறுத்து நோக்கினேன். "ஏ மனிதா என்னை ஏன் வெறுத்துப் பார்க்கிறாய்? நான் பலநிறம் காட்டும் பச்சோந்தி என்பதற்காக நீ வெறுக்கிறாய் என்பதை நானறிவேன். நிலையான நிறம் முக்கியமா? நான் பலநிறம் காட்டுவது அவ்வளவு இழிவு

அல்ல. உன் இனத்தில் அரசியல் தலைவர்கள், கட்சிப்பிரியர்கள், காலிகள், கூலிகள் நேரத்திற்கு நேரம், இடத்திற்கு இடம் கொள்கைகளை மாற்றி சுயநலத்துடன் வாழ்கிறார்கள். அதுவல்லவோ இழிவு. பல கொள்கைகளையும், பல எண்ணங்களையும், பல செய்கைகளையும் இடத்திற்கேற்ப அமைத்துவரும் உன் இன இழிஞர்களைப் பார்த்து வெறு. அவர்கள் பினபு திருந்தலாம். என்னைப் பார்த்து வெறுக்காதே" எனப் பச்சோந்தி பகர்ந்தது. பச்சோந்தி கூறியது சரிதான் எனக் கூறிக்கொண்டே நடக்கலானேன்.

வான்கோழியொன்று மயிலைப்போல் நடனம் ஆட முயன்று . தோல்விகண்டது. நான் அதைப் பார்த்துச் சிரித்தேன். அதற்காக வான்கோழி கோபத்தோடு என்னை உற்றுநோக்கியது. "கல்லாதான் கற்ற கவி இதனைப்போன்றதுதான் என அறிவிக்கும்பொருட்டே இவ்வாறு ஆடினேன்" என வான்கோழி கூறியது.

வான்கோழியின் கூற்றை நினைந்துகொண்டே சுற்றுமுற்றும் நோக்கினேன். ஒரு கனி தெரிந்தது. அவசரமாக அக்கனியைப் புசிக்க ஆரம்பித்தேன். 'அடேயப்பா என்ன கசப்பு!' எனக் கூறிக்கொண்டே பழத்தை வீசி எறிந்தேன். "மனிதா! எட்டிப்பழம் இனிக்குமா? கதலியாவது பழுக்காவிட்டாலும் அதனுடைய காயாகிலும் நீ உண்ணலாம். ஆனால் எட்டிக் காய் காயானாலும் பழமானாலும் உதவாது. நான் உன் இனத்திலுள்ள கயவர்கள்மாதிரியல்லவா இருக்கிறேன்" என எட்டிமரம் கூறி பரிகசித்தது.

> முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
> கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
> காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்
> தாயினும் ஆமோ அறை (நன்னெறி)

என்ற பாடல் அப்போது என் செவியில் ஒலித்தது.

நடந்த களைப்புதீர ஓர் மரத்தடியில் அமர்ந்தேன். அந்த மரம் கிளைகளையும் தழைகளையும்கொண்டு அழகாக விளங்கியது. மரத்தின் அடியில் படுத்தவாறே "நான் மரம்" என்று கூறினேன். உடனே பரிகாச சிரிப்பொலி கேட்டது. சுற்றுமுற்றும் நோக்கினேன். மரம் பேசத் தொடங்கியது. "மனிதா! கவையாகி கொம்பாகி காட்டகத்தே நிற்கும் நான் நன்மரமல்லேன். சபைநடுவே நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்" எனக் கூறி மேலும் சிரித்தது. எனக்கு வெகு வியப்பாய் போய்விட்டது.

அடிவானத்தில் பூரணச் சந்திரன் தோன்றினான். அவன் ஒளியால் என் உள்ளம் மகிழ்வெய்தியது. அதனிடத்தில் காணும் இருளைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. 'உலக இருளை நீக்குகின்ற சந்திரனே உன் இருளை நீக்கமுடியவில்லையா' எனக் கூறினேன். அருகில் யாரோ பாடிக்கொண்டு வரும் சப்தம் கேட்டது.

> "தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்கு றூஉம்
> வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
> கறையிருளை நீக்கக் கருதா துலகில்
> நிறையிருளை நீக்குமேல் நின்று"

என்று துறவியொருவர் பாடிக்கொண்டு வந்தார். அவரை அன்பாக வரவேற்று உட்காரும்படிக் கூறினேன். அவரிடம் நான் உலாவும்போது கண்டவற்றைக் கூறினேன். அவர் மகிழ்ந்து "குழந்தாய்! நீ இன்று கண்டு, கேட்டு அறிந்தது அனுபவப் படிப்பு. நம்முன்னோர்கள் யாவற்றையும் அனுபவப்படிப்பால் அறிந்து அறிஞர்களாக வாழ்ந்து நமக்கும் வழிகாட்டிகளாக

விளங்கினர்கள். அதனால் அவர்கள் நீடூழி காலம் சிறப்பாக வாழ்ந்தனர். இன்று நீ படிக்கும் கல்லூரிப் படிப்பால்—புத்தகப் படிப்பால் முன்னோர்கள்மாதிரி விளங்க முடியாது. அனுபவப்படிப்பே சிறந்தது. இவ்வுலகமே சிறந்த நீதிநூல், அதினிற் காணும் பல்வேறு பொருள்களே தேர்ந்த ஆசிரியர்கள்" எனக் கூறினர். 'ஆகா! இயற்கையே நீயே சிறந்த நூல்! சிறந்த ஆசிரியர்' எனக் கூறி மகிழ்ந்தேன்.

ச. செல்லப்பாண்டியன்,
இரண்டாம் வகுப்பு



மாணவர் கடமை

ஒரு நாட்டின் நல்வாழ்வும் வீழ்வும் அந் நாட்டு மாணவர்களிடத்திலிருந்தே ஏற்படுகின்றன என்பது வையகம் அறிந்த வாய்மையாகும். மாணவர்கள் தமது வாழ்க்கையையும் தம் நாட்டையும் வளப் படுத்த வேண்டின் அவர்கள் தமக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்து முடித்தல் வேண்டும்.

மாணவர்களது தலையாய கடன் தமது பெற்றோரைப் பேணலாகும். மாணவர்கள் தம் நல்லொழுக்க நற்செய்கைகளால் "இவனைப் பெறுவதற்கு இவனது பெற்றோர்கள் எத்துணை தவத்தினைச் செய்தனரோ" என உலகம் உவகை கொள்ளு மாறு நடந்துகொள்ளவேண்டும். இதனை,

> "மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தை
> என்னோற்றான் கொல் எனுஞ்சொல்"

என முக்கால வல்லுனரான வள்ளுவனார் கூறி இருப்பது நோக்கற் பாற்று.

தம் மக்களது ஒழுக்க நெறியும், உயர் பண்பாடும் அறிவு வளர்ச்சியும்தான் பெற்றோர்களுக்கு மனமகிழ்ச்சியை அளிக்கும் என்பதை தெய்வப்புலவர்,

> "ஈன்ற பொழுதில் பெரிதுவக்குந் தன்மகனைச்
> சான்றோன் எனக் கேட்டதாய்"

எனும் குறுகிய அடிகளில் நிறைந்த பொருளோடு எடுத்துரைக்கின்றார். தம்மீது எல்லையற்ற அன்பினைச் சொரிகின்ற தாய் தந்தையர்களது சொற்களைத் தெய்வ வாக்கினும் மேலாகக் கருதி அவர்கள் விழைந்தனவற்றைக் குறைவின்றி செய்துமுடித்த லன்றோ அறிவுடை நன்மக்கள் செயல்.

> 'தக்கார் தகவிலரென்பதவரவர்
> எச்சத்தாற் காணப்படும்'

என்ற பொய்யாமொழியின் இலக்கணத் திற்கு இலக்கியமாக, தம் பெற்றோர்களின் நற்பெயருக்கு இழுக்கு நேராவண்ணம் நடந்துகொள்பவரே நன்மக்களாவர்.

மாணவர்கள் யாவரிடத்தும் அன்புடைய வர்களாக இருத்தல் வேண்டும்.

> "அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
> வற்றல் மரம் தளிர்த்தற்று!"

எனவே வருங்கால வாழ்வை வரையறுக்கும் வாலிபர்கள் தம் வாழ்நாளை இனிய பூஞ் சோலையாக அமைக்க அன்புடைமையைச் சீரிய வழியாகக் கோடலே முறையாகும்.

இராமனது முடிசூடும் செய்தியை ஊரறிய முரசறைவித்தபின் கைகேயி தயரதனை சொல்லொணாத் துன்பத்திற்குள்ளாக்கி இராமனை எய்தி,

> "ஆழிசூழ் உலகமெலாம் பரதனே ஆள நீ போய்
> தாழ் இருஞ் சடைகள் தாங்கி தாங்கருந்தவமேற் கொண்டு
> பூழி வெம் கானம் நண்ணி புண்ணிய நதிகள் ஆடி
> ஏழி ரண் டாண்டின் வாவென் றேவினன் அரசன்..."

என்று கூற மறுத்துரை எதுவும் பகராமல்

> மன்னவன் பணியன்றாகில்
> நும்பணி மறுப்பனோ? என்
> பின்னவன் பெற்ற செல்வம்
> அடியனேன் பெற்றதன்றோ
> என் இனி உறுதி யப்பால்?

CONNEMARA PUBLIC LIBRARY
25 AUG 1955
MADRAS

"A SNARE OF PERFUME"
Sketch by
A. Renganathan, II U.C.

CONNEMARA PUBLIC LIBRARY
25 AUG 1955
MADRAS



J. Mariasingarayan, II U.C.

இப்பணி தலைமேல் கொண்டேன்
மின் ஒளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்.

என்றுரைத்த இராமனது பெற்றோர் பணிவும் உடன் பிறப்பன்பும் இளம் மாணவ உள்ளங்களில் சிலையில் எழுத்தென் பதிய வேண்டாவோ?

மாணவர்கள் நல்லொழுக்கத்தின் பிறப்பிடமாகவும் அறிவின் உறைவிடமாகவும் விளங்கவேண்டும்.

"நாட்டின் இளைஞர்களிடத்தேதான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன், வஞ்சனை அறியா இளம் வாலிபர்கள் நாட்டின் விலையேறிய செல்வங்கள். நொடிப் பொழுதில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக்கு இரையாகி அச்செல்வங்கள் அழிந்துவிடக் கூடா"தென்றும் "மாணவ மாணவிகள் பள்ளிகளில் பயிலுங்காலையில் ஒழுங்கைக் கற்றுக்கொள்ளாவிடில் அவர்களது கல்விக்காகச் செலவிட்ட பொருள் நாட்டின் பொருளியலுக்கே ஒரு பெரும் இழிவாகும்" என்றும் உலகப் பெரியார் காந்தியடிகள் அறிவுறுத்தி இருப்பதை மாணவர்கள் தம் மனக்கண்முன் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

மாணவர்கள் தாம் பயிலுங்காலையில், தமது பாடப் பகுதிகளோடு சிறந்த அறிஞர்கள் எழுதிய நூற்களையும் செயற்கரிய செய்த பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் சிறந்த காவியங்களையும் அறிவியல், பொருளியல் அரசியல் குறித்த நூற்களையும் கற்றுணர வேண்டும். இற்றைநாளில் வெளிவருகின்ற பல புத்தகங்களும் பத்திரிகைகளும் மாணவர்களின் அறிவை அறியாமைக்கு அடிமைப்படுத்துவதோடு அவர்களது பண்பையும் பாழாக்கத் துணை நிற்கின்றன. இத்தகைய இழிந்த தர வெளியீடுகளால் இளம் மாணவர்கள் ஒழுக்க நெறியினின்றும் வழுகிவிட ஏதுவாகின்றதன்றோ? உயிரினுஞ் சிறந்த ஒழுக்காற்றினின்றும் மாணவர்கள் பிறழ்ந்தால் அவர்களது வருங்காலமும் அவர்கள் தம் பொன்னாட்டின் புகழும் பெருமையும் என்னவாகும்! மாணவர்கள் தம் நிலையிலிருந்து இழிந்து ஒழுகுதல் மாண்புமிக்க மாணவ இனத்திற்கே இழுக்கு என்பதை மறுப்பார் யார்?

தாம் கற்கும் நாட்களில் மாணவர்கள் தமது அறிவு வளர்ச்சியையே பெருநோக்காகக் கொள்ளவேண்டும். தாம் கற்பன செவியுறுவனவற்றுள் நல்லன நாடலே நன்மாணாக்கர் இயல்பாகும்.

'சென்றவிடத்தால் செலவிடாதீதொரீஇ
நன்றின் பாலுய்ப்பதறிவு'

என்ற பொய்யாமொழி மாணவர்களது சிந்தனைக்கு நல்விருந்தாக அமைகின்றதன்றோ!

கல்வி கற்கும்காலத்தே மாணவர்களது நோக்கம் அரசியலில் தீவிரமாக ஈடுபடின் அவர்களது அறிவு வளர்ச்சியும் சிந்தனை சக்தியும் குன்றிவிட ஏதுவாகும். எனவே மாணவர்கள் அரசியல் வலைகளில் விழாதபடி தம்மைக் காத்துக்கொண்டு அறிவைப் பெருக்கிக்கொள்வதில் நாட்டங்கொள்ளல் நலம் பயப்பதாகும்.

கல்வியின் பயன் கடவுளை அறிதல் என்பதை மறந்து வாழும் மக்களுக்கு நல்வழி காட்ட மாணவர்கள் கடவுட் சிந்தையுள்ளவர்களாகத் திகழாவிடில் அவர்கள் பெற்ற கல்வியால் பயன் என்ன?

கற்றவன் ஒருகுளம் ஆனால் அறிவு நிரம்பப்பெற்றவன் ஓர் வற்றா ஊற்று என்பதனை மாணவர்கள் தம் மனத்துக்கண் நிறுத்தித் தம் அறிவைப் பெருக்கிக்கொள்வதில் ஆவலுடையராய் விளங்கவேண்டும்.

மாணவர்கள் நன்ருக சிந்தனைசெய்து தெளிந்த அறிவோடு எக்காரியத்திலும் ஈடுபடுதல் நலம் பயப்பதாகும். பலதரப்பட்ட பண்புகளை உடைய மக்களது வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் உய்த்துணர்ந்து, எல்லோரிடத்தும் அன்புடன் பழகியொழுகும் பான்மையை மாணவர்கள் பெறவேண்டும்.

'உலகத்தோடு ஒட்டஒழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவில்லா தார்!

நாட்டிற்கு வருங்கால வாழ்வை வகுக்கும் மாணவர்கள் நல்லறிவாளர்களின் பயன் தரும் பனுவல்களைப் பயின்று, சிந்தனு சக்தியையும் முற்போக்குக் கொள்கைகளையும் தன்னகத்தேகொண்டு, அன்புடமையையும் நல்லொழுக்கத்தையும் அணியெனப் பூண்டு, ஒற்றுமை உணர்ச்சியுடன் தம் கடமைகளைக் குறைவின்றி செய்தால் அந்நாட்டில் எல்லா வளங்களும் பெருகுவதோடு மாணவ சமூகம் தனக்குரிய மங்காப் புகழையும் குன்ருப் பெருமையையும் எய்தும்.

வணக்கம்

கு. சிவதாணு,
இடைக்கலை இரண்டாம் வகுப்பு.



கல்லூரி வாழ்த்து

தண்மையார் பலவளமும் பெருக்கி யோடுந்
தண்பொருநை யாறுதனை உரிமை கொண்ட
வெண்ணெல்லுஞ் செந்நெல்லும் விளைந்து மக்கள்
வெண்ணிலா போல்விளங்கி இன்பந் துய்க்கும்
வருநெல்லைத் திருவெனவே கொண்டு வாழும்
திருநெல்வேலி யெனும்பெருமா வட்டந் தன்னில்
திருவெனவே கல்வியோங்கும் பாளையம் பதியில்
உருவுடனே சிறப்பெய்தும் சேசு சபையார்
கலக்கமின்றி விளக்கமோடு நடாத்து கின்ற
துலக்கமுறு சேவியர்நற் கல்வி நிலையம்
துளக்கமற பண்புடனே கல்வி யறிவை
விலக்கமின்றி எல்லோர்க்கும் வாரி யீந்து
விளக்கமோடு வீறுபெற்று என்றும் நன்றே
வளம்பெற்று வன்மையுள்ள இளைஞர் தம்மை
உளந்தனிலே மெய்ப்பொருளாம் கடவுள் உண்மை
களிப்புடனே பதியவைத்து மிளிர்க வாழி

R. பெருமாள் ராஜ்,

இரண்டாம் வகுப்பு.

இயற்கை எழிலும் செயற்கை எழிலும்

பெங்களூர் :—மைசூர் அரசின் அழகு செறிந்த நகர் அதுவே. அங்குத் தொழிற் சாலை பல காணப்படுகின்றன. நாங்கள் முதலிற் பார்த்து மகிழ்ந்தது அந்நகரின் விமான நிலையத்தையே. பெங்களூரின் விமான நிலையம் மிகப் பெரிது. நூற்றுக் கணக்கான விமானங்கள் நிற்பதற்கேதுவாகு மளவுக்கு, அத்துணைப் பெரிது. அதன்கண் சிறு விமானங்கள் முதல் பெரிய "டகோடா" விமானங்கள் வரை பலவகை நிற்கின்றன. அவ்வானவூர்திகளுள், குறிப்பிடத்தக்கது, வானவூர்தி செலுத்தப் பழகும் மாணவர் களுக்கென பிரத்தியேகமாகச் செய்யப் பெற்றிருக்கும் சிறு விமானமே. பின்பு Radio Activity எனும் கருவியையும், கால நிலையையறியும் கருவியையும், விமானம் அபாயத்துட்படும்போது எச்சரிக்கை செய் யும் கருவியையும் கண்டோம். விமான நிலையத்திலேயே உள்ள விமானத் தொழிற் சாலையில் விமானங்கள் செய்கின்றனர். அவ்விமான தளத்தைப் பார்த்த நேர முழு வதிலும், நம் இந்திய விமான வீரர்களின் ஈடு இணையற்ற வீரச் செயல்களும், பனி மிகுந்த காஷ்மீரில் அவ்வீரர்கள் நடாத்திய வீரப் போரைப்பற்றிய நினைவுமே நிறைந்து நின்றன.

அன்று மாலை "இந்திய நாட்டின் பூலோக சுவர்க்கம்" என வருணிக்கப்பெற்ற லால் தோட்டம் (Lal Bagh) சென்றோம். சற்றேறக்குறைய நான்கு கல் சுற்றளவும், பரப்புங்கொண்ட அம் மலர் வனம், கண்ணிற்கும், கருத்திற்கும் விருந்தாய் மணிமேகலையில்

"மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய
யாப்புடைத்தாக வறிந்தோ ரெய்தா
அருளும் அன்பும் ஆருயி ரோம்பும்
ஒரு பெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மரம் பூக்கும்,"

எனக் கூறப்பெறும் உவவனத்தையும்,

"வெங்கதிர் செம்மையின் விரிசிறையிழந்த
சம்பாதியிருந்த சம்பாதி வன"த்தையும்

நினைப்பூட்டா நின்றது. பச்சைப் பசும் புற்களுக்கிடையே, அவ்வரசின் பழைய திவானது பெயரைத் தாங்கிய நூல்நிலையம் கம்பீரமாய் எழுந்து நிற்கின்றது. அதன் எதிரே உள்ள சாலையைத்தான் அவ்வரசி லேயே தலைசிறந்த சாலையெனக் குறிப்பிடு கின்றனர். இருமருங்கிலும் சவுக்கு மரங் கள் ஓங்கி வளர்ந்த அச்சாலை, சிமென்று போடப்பெற்று, இருபுறமும் ஒளிக் குமிழ்கள் பொருத்தப்பெற்ற, வெள்ளை யான இரும்புக் கம்பங்கள் நிறுத்தப்பெற்று நேராய் இருகல் தொலைவு சென்று, சாலை அழகிற்கோர் உதாரணமாய் பழங்கால அரசர்கள் பவனிவரும் இராச பாட்டையை நினைப்பூட்டுகிறது. அச்சிங்காரத் தோட் டத்தினுள், உல்லாசப் பொழுது போக்கு நிலையமும், விளையாட்டு அரங்கமும், இன் சுவை உண்டி விடுதியும் சிறந்து விளங்கு கின்றன. அதைப் பார்க்கும்போது உண் டாதம் மகிழ்ச்சிப் பெருக்கை அளவிடக் கூடுங்கொல்! இயற்சோதரியின் அன் பொழுகும் இன்முகத்தை, நற்பெரும் பேற்றை, மாநிலத்தின் சிங்காரத் தோட் டத்தை, எழில்மிகு இயற்கையின் மணி மகுடத்தைக் காண்டதனால் என் மனம்,

மகிழ்ச்சிப் பெருக்கால் விம்மிதமுற்றது. நாண்குமணி நேரம் அதன் அழகைப் பருகியும், வெளியே போகுங்கால் தாயினைப் பிரியும் சேய்போல வருத்தமுற்றேன்.

அடுத்ததாக நாங்கள் கண்டது "கப்பன் தோட்டம்" (Cubbon Park) எனும் இயற்கையின் சிங்கார விடுதியை. அங்கே மைசூர் அரசியலாரின் அலுவலகங்கள் பல உள்ளன. அழகில் அதுவும் லால் தோட்டத்தை அடுத்ததே. பசுந் தோட்டங்களிடைய ஒளி பெற விளங்கா நிற்கும் பழமையான திவான்களது சிலா வடிவமும், அரசியலாரின் அலுவலகக் கட்டிட உயர்வும், சுற்றுப்புறச் செழுமையும் உள்ளத்தைக் குளிர்விக்கின்றன. அரசியலாரின் கட்டிடங்களைச் சுற்றிலும் சிலைகள் அமைந்து நிற்பது அழகிற்கு அழகு செய்தாற்போலவும், அணி செய்தாற்போலவும் இருந்தது. மாலை நேரத்தில் மன அமைதிக்கென்றும், ஓய்வு நேரத்தை உல்லாசமாகக் கழிக்கவும் மக்கள் ஆங்குச் செல்கின்றனர்.

அதனுள் அமைந்துள்ள பொருட்காட்சி சாலை சென்று, முன்னம் வாழ்ந்தனவும், தற்போது வாழ்கின்றன என நம்பப்படுவனவுமாகிய பல இராக்கதப் பிராணிகளின் எலும்புக் கூடுகளையும் வரிவடிவங்களையும் கண்டோம். பலவகைக் கவசங்கள், கேடயங்கள், சிலா வடிவங்கள், சிதைந்த சிலைகள், சிதைந்த சித்திரங்கள் இவற்றையும் கண்டோம். பலவகையான, இராக்கத வடிவையுடைய கடல் மீன்களை பதனம்செய்தும் இவண் வைத்துள்ளனர். மற்றும் பொருட்காட்சிசாலைகளில் பொதுவாகக் காணப்பெறும் அதிசயப் பொருள்களையும் கண்டோம்.

மைசூர் :—மைசூர் நகர் பெங்களூரை விட பரப்பிலும், அழகிலும் குறைந்ததே. ஆனால் அதற்கு அழகு செய்வன பழைய சரித்திரகாலச் சின்னங்களே. மைசூரில் பிரசித்தமாகக் குறிப்பிடப்பெறுவது அதன் அரண்மனையே. நம்மைப் பூர்வகாலத்திற்கு இழுத்துச் சென்றுவிடுகின்றன அவ்வரண்மனையின் தோற்றமும் தோட்டங்களும். அரண்மனையின் உப்பரிகைகள் வானத்தைத் தொட முயல்வதுபோன்று எழுந்து நிற்கின்றன. அதன் உப்பரிகைகள், இந்தியக் கட்டிடக் கலைக்கே ஓர் திலகம்போல் விளங்கா நின்று, தன் சித்திர நேர்த்தியாலும், கட்டிடச் சிறப்பின் உயர்வாலும், பார்ப்போரைக் கற்பனை உலகிற்கு இட்டுச் செல்கின்றன. மாளிகையினுள் நுழையும் வரை இவ்வுணர்ச்சி. மாளிகையினுள் நுழைந்த பிறகோ ஒரே அழகுத்திரள்தான். அவ்வழகுத் திரளை அள்ளி, அள்ளி வீசா நிற்கின்றன, அம்மாளிகையின் கூடங்களும் சுவர்களும். முதலிற் காணப் பெறுவது மாளிகையின் தலை வாயில் வானளாவ நிமிர்ந்து நிற்குமதை, வர்ண விளக்குகளால் அழகுக்கோர் அழகு செய்திருக்கின்றனர். இரவில் அது மின்னிட்டு ஒளிர்வது காண்பதற்கரிய காட்சி.

மாளிகையின் பிரதான வாயிலைக் கடந்தபின் உட்புற வாயிலுக்கு இட்டுச் செல்கின்றனர் வழிகாட்டுவார். அவ்வுட்புறத்திற்றான் எத்தன்மையதாய சித்திர வேலைப்பாடுகள்! வளைவுகள்!! அம்பாரி போன்ற மாடங்கள்!!! அவ்விடங்களைக் காப்பதற்கென்றே பணியாளர் பலர் நிறைந்து நிற்கின்றனர். சித்திரங்களும், சிலைகளும் நிறைந்த அவ்வழகிய கூடத்தைக் கடந்தபின், மயன் தன் கைத்திறத்தாற் செய்ததுபோன்ற ஓர் கூடத்தை அடைகிறோம். அவ்விடத்திற்றான் நான் கண்டும் கேட்டுமிராத காட்சியைப் பார்க்க நேர்ந்தது. வழிகாட்டி, அவ்வறைக்கு இட்டுச்சென்ற பின், தாகசாந்தி செய்துகொள்ளத் திரும்

பினுன். அதுவரை அவனையே கவனித்து வந்த நான் தற்செயலாக என் கண்ணைத் திருப்பி, அறையின் ஓர்புறத்தை நோக்கினேன். ஆங்கோர் புலி பயங்கரமாகக் கண்ணை உருட்டி விழித்தது! கம்பியின் பின் அடைபடாத அக் காட்டு விலங்கைக் கண்ணெடுத்துப் பார்க்க அஞ்சிய நான் திகிலுடன் வேறோர்புறம் நோக்க, அங்கோர் புலி நான்கு கால்களும் உந்த, உடம்பை முறுக்கி, இரத்த வெறியுடனும் கோரப் பல்லுடனும், நிமிர்ந்து, நாக்கைத் தொங்கவிட்டு வாயில் கடுநீர் சுரக்க பாயும் நிலையில் நின்றது!! அச்சம் நெஞ்சை அடைக்க, "இந்த வம்பில் ஏனடா மாட்டிக்கொண்டோம்?" என மற்றோர்புறமாக ஓடித் தப்பலாமெனப் பார்த்தால், சிறுத்தை யொன்று பதறந்தரும் பார்வையோடு நிற்கிறது. அடுத்த புறமோ யானையொன்று துதிக்கையைத் தூக்கியவாறு நிற்கின்றது!!! மற்றோர் புறமோ கரடி ஒன்று வைத்தகண் வாங்காமல் என்னையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தது. கிலியின் மிகுதியால் வெளுறிய முகத்தோடு, வழிகாட்டியை நோக்கி "நான் அரண்மனையைப் பார்க்க வந்தேனு, அல்லது காட்டு மிருகங்களிடையே மாட்டிக்கொள்ள வந்தேனு?" எனக் கேட்க வாயெடுத்தேன். அதற்குள் என் வெளுறிய முகத்தைக் கண்டு அவர் சிரித்த சிரிப்பு என் கலக்கத்தை இன்னும் அதிகப்படுத்தியது. பின் அவர் பாயும் புலியருகிற்சென்று தட்டிக் கொடுத்ததும்தான் தெரிந்தது அது உண்மைப் புலியென்றென்று. மற்றப் புலிகளும் கரடியும் அவ்வாறே. வழிகாட்டுவோன் அதைப்பற்றிக் கூறிய கதை மிக வேடிக்கையாகவிருந்தது. அப்போதிருக்கும் அரசப் பிரமுகரும், அவர் மூதாதைகளும் வேட்டையிற் பிரியம் மிகுந்தவர்களென்றும், அவர்கள் தம் வேட்டையிற் கொன்ற விலங்குகளே இவையென்றும், அவ்வெற்றியை என்றென்றும் நினைவூட்டும்வண்ணம், சிறந்த வேலை செய்வோனிடம் சேர்ப்பித்து, அவற்றுள் புஞ்சைப் புகுத்திப் பாயும் புலிபோன்றும், இரத்த தாகம்கொண்ட புலிபோன்றும் செய்து வைத்திருக்கிறுர்களெனவும் தெரிந்தது. அவற்றின் இயற்கைத்தன்மை (Naturalness) மிகப் புதுமை வாய்ந்தது. அதுவும் பாயும் புலியை, வெறி சொட்டும் கண்களோடும், கிழிக்கக் கங்கணம்கட்டுவது போன்றுள்ள பற்களையும், அது பாய்வது போன்றுள்ள நிலையினையும் கண்டு ஆச்சரியமுருதவரே இல்லை. நேரிற் சென்று பார்ப்பவர்க்கே அவ்வேலைத்திறத்தின் பெருமை விளங்கும்.

அவ்வற்புதப் பொருள்கள் நிறைந்த அம் மண்டபத்தை விட்டுச் சென்றிடில், அதற்கடுத்தாற்போற் காணப்பெறும் விசாலமான இடமே அரசர் முன்னம் தர்பார் நடத்திய இடமாம். நீளமான இடத்தையும், அழகிய வேலைப்பாட்டையும் கொண்ட இது அரண்மனை உப்பரிகையின் ஓரத்தில், பிரதான வாயிலையும் வீதியையும் எதிர் நோக்கியவாறு உள்ளது. அதனின்றும் பார்த்தால் அரண்மனையின் அழகிய வெளிப்புறம் தெரிகிறது. இருபுறமும் பசும் புற்றரைகள் செறிந்து, நடுவே ஊற்றுக்கள் சுழல்வது மனதிற்கினிய காட்சியாய் உள்ளது.

இம்மாடத்தின்கண் உலகப் புகழ்பெற்ற இரவிவர்மாவின் ஓவியங்கள் பல வைக்கப் பெற்றிருக்கின்றன. நாமகளும், இலக்குமியும், மும்முகரும், ஆறுமுகரும், சிவனும், திருமாலும், இரவிவர்மாவின் தூரிகைச் சிறப்பினுல் ஒளிபெற்று, அழகு நிரம்பி நிற்கின்றனர். கலைத்திறன் நிறையப்பெற்று அவை இந்தியச் சித்திரக் கலைக்கோர் சீரிய உதாரணமாய் விளங்குகின்றன.

அரண்மனையின் அழகிய காட்சிகளுள்

ஒன்று அதன் சொர்ணப்பல்லக்கே. அது முழுதும் கலப்பில்லாத் தங்கத்தாற் செய்யப் பெற்றது. அரசர் ஆண்டுக்கொருமுறை நகர்வலம் வரும்போது அஃது பயன்படுத்தப் பெறுகிறதாம்.

மைசூர் மன்னரின் மணிமகுட விழாவை யும், மைசூரின் பல யுத்தங்களையும் குறிக் கும் சித்திரங்கள் பல சுவரை அழகுப்படுத்து கின்றன. அவற்றின் கலைத்திறன், எழில் முதலியன புகழுதற் பாலனவாகவே உள்ளன. மைசூரின் அரசர் அனைவரின் சரிதமும், ஹைதர் அலி, திப்புசுல்தான் அடங்க அதிற் காணப்படுகின்றன. பின்னர் நாங்கள் ஓர் குறுகிய கூடத்தினுள் நுழைந் தோம். அதனுள், அரசர் மலர்வுடன் ஆசனத்தில் அமர்ந்திருந்ததைக் கண்ட வுடன், என் கைகள் என்னையறியாமலே அஞ்சலி செய்தன. அருகில் உள்ள வழி காட்டி நகைத்தபின்தான் எனக்கு உண்மை புலனாயிற்று. அரசர் உயிருடன் இருப்பதே போன்று, உயிர்த்தன்மையுடன் பதுமை செய்து வைத்திருக்கின்றனர். அதற்கு ஆவன செய்து, வர்ணப்பூச்சு முதலியவை சரியான முறையில் செய்யப்பெற்றிருப்ப தால் பார்ப்பவர் எவருக்கும் அது இராஜப் பிரமுகரே எனும் மயக்கம் உண்டாகுகிறது.

பின்னர் ஓர் அழகிய இடத்தை அடைந் தோம். அதுவே தற்போது தர்பார் நடத்து மிடமெனக் கூறினர். அதன் சுவர்களெங் கும், தூண்களெங்கும் தங்கப் பூச்சுப் பூசப் பெற்று காலை இளவெயிலில் பளபளவென மின்னுகின்றது. பின்னர் அரண்மனைக் கெனத் தனியாக உள்ள தனிப் பொருட் காட்சிசாலைக்குச் சென்றோம். ஆங்கு அரசர் கள் கையாண்ட கத்தி, ஈட்டி, கேடயம் முதலியவற்றைக் காட்சிப் பொருளாக வைத்திருக்கின்றனர்.

பழங்கால அரசர்களது போர்க்கருவிகள், அதியற்புதமான வேலைப்பாட்டுடன் விந்தை யாக விளங்குகின்றன. அவற்றுள் முக்கிய மாக நாங்கள் மிகக் கவனமாக உற்றுப் பார்க்குமளவிற்கு விளங்கியது, ஹைதர் அலியினுடையதும், திப்புசுல்தானுடையது மான வியத்தற்குரிய வேலைப்பாடமைந்த வாட்களே. அவ்வாட்கள் அழுத்தமான எஃகினாற் செய்யப்பெற்று, புதுமையான கைவினை கொண்ட பிடியுடையனவாய் விளங்குகின்றன. சரித்திரப் பிரசித்தமான சிவாஜி அபுசல்கான் போரில், சிவாஜி எவ் வாயுதத்தினால் அபுசல்கானைக் கொன்றாரோ அப்புலி நகத்தையும் பார்த்தோம். வளைந்து, கூர்மையாக, விளங்கும், அங்கங்கள் ஓர் பிடியிற் பொருத்தப்பெற்றிருக்கின்றன.

மைசூரினின்றும் ஸ்ரீரங்கப்பட்டணம் போகும் பாதை எழில்மிகும் பல காட்சி களைத் தன்னகத்தே கொண்டுளது. ஆனால் சாலை குறிப்பிடத்தக்க தரமானதாக இல்லை. ஸ்ரீரங்கப்பட்டணத்தின் கண் மைசூர் அரசை ஆண்ட மகமதிய வமிசத்தவராய, ஹைதர் அலி, திப்புசுல்தான் இவர்களது கல்லறை கள் காணப்பெறுகின்றன. திப்புசுல்தான், அவர் தாயார், ஹைதர் அலி மூவரும் ஒரே இடத்திற் புதைக்கப்பெற்று அவ்விடம் பளிங்கு மேடையால் மூடப்பெற்றுள்ளது. அதன்மேற்பட்டுச் சல்லா மூடப்பெற்று, வாசனைத்திரவியங்களால் அவ்விடத்தின் இயல்பே புனிதமாகக் காண்கிறது. அழகிய உருண்டையான ஸ்தூபத்தையுடைய இது முகம்மதிய பாணியிற் கட்டப்பெற்று, அம் மத மக்களது பள்ளிவாசலாகவும் விளங்கு கின்றது. சுற்றிலும் அழகிய செடி கொடி கள் வளர்க்கப்பெற்றுள்ள அம்மசூதியின் கதவுகளும் அழகிய தந்தவேலைப்பாடுடை யனவாக விளங்குகின்றன. இம்மசூதி நுழைவாயிலிருந்து மசூதி வாயில் வரையில் வானளாவ உயர்ந்துள்ள யூகலிப்டஸ் மரங் களாற் சூழப்பெற்று ஏதோவோர் கற்பனைக்

கெட்டாக் காவியத்தினுள் நுழைவது போன்ற உணர்ச்சியைப் பெறுகிறோம்.

ஸ்ரீரங்கப்பட்டணத்தின் சரித்திரப் புகழ் பெற்ற கோட்டை இப்போது அழிந்து கிடக்கிறது. அழிந்த அகழியும், தானுமாய்க் கிடக்கும் அக்கோட்டை, மாற்றானுக்குக் கூற்றுவனாய் நின்று போர்புரிந்த நம்பண்டை அரசரது வீரத்தை நினைக்கும் தேசப்பற்றுக் கொண்ட எவருக்கும் கண்ணீரை வருவிக்கு மென்பது திண்ணம். சிதைந்த அக் கோட்டையின் சின்னங்கள் பலகல் தொலைவு வரை காணப்படுகின்றன.

பின்பு திப்பு சுல்தானும், அவன் தந்தை ஹைதரும் வீற்றிருந்து அரசாண்ட பழைய அரண்மனையைக் கண்டோம். இப்பழைய அரண்மனையும், ஏனைய அரண்மனைகளைப் போன்றே யூகலிப்டஸ் மரங்கள் சூழப் பெற்று எழில் கொண்டிலங்குகிறது. இது முகமதியபாணியிற் கட்டப்பெற்றுள்ளது; சுவர்களெங்கும் சித்திரங்கள் தீட்டப் பெற்று முகம்மதியச் சித்திரக் கலைக்கோர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றது.

நாங்கள் பின்னர், மைசூர் அரசின் ஓர் புறத்துள்ள, கண்ணம்பாடிக்குச் சென்றோம். அவ்வணைக்கட்டு, இரவில் தீபாலங் காரத்துடன் விளங்கும் போது அற்புதமாக விருக்கிறது. அதன்பின்னர் கண்ணம் பாடியின் அருகிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற, அழகின் உறைவிடமாம், பிருந்தா வனத்தைக் கண்டோம். இரவில் பலவர்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்ற இது, மயனின் மாளிகையோ வெனவும், அழகின் உறைவிடமோ வெனவும், கைதேர்ந்த ஓவியன் எழுதி வைத்த சித்திரமோ எனவும் நம்மை மயங்கவைத்து, திகைப்புக் கடலில் ஆழ்த்துகின்றது. அஃது நமக்கு

வானவரல்லது

பாடு வண்டிமிரா பன்மரம் யாவையும்
வாடா மாமலர் மாலைகள் தூக்கலிற்
கைசெய் பாசத்துப் பூதங் காக்குமென்
றய்யானத் திடைபுணர்ந்தோர் செல்லார்

எனும் சாத்தனார் வாக்கை நினைப்பூட்டுகிறது.

நாங்கள் கடைசியாகக் கண்டது சிவ சமுத்திரம் நீர்வீழ்ச்சி. (கோலார் காண்பதற்கு அனுமதி கிடைப்பது, கடினமாயினமை பற்றி நாங்கள் கோலார் செல்லவில்லை) அப்பெரிய நீர்வீழ்ச்சியைப் பார்க்கும் எவருக்கும், அதனுடைய உயர்வு பற்றிய எண்ணம் தோன்றா மலிராது. மலையின் பின்னால் மலை! அம் மலையின் பின்னால் மற்றோர் மலை!! அதன் பின்னால் மலை!!! அதனின்றும் சிவபெருமானது சிரசினின்றும், கங்கை இறங்கி வந்தது போன்று, காவேரி அன்னை இறங்கி வருகின்றாள். நீர்வீழ்ச்சி ஓவெனும் பேரோசையோடு முப் பெரும் பிரிவுகளாய் விழுகிறது. அதினின்றும் எழும் தூவானப் படலம் அவ்விடமே தெரியாதவாறு ஒரே மேகப்படலமாய் நிற்கிறது. செடிகளும் கொடிகளும் செறிந்து விளங்கு மவ்விடத்தில் மீன்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவ்விடத்தின் தனி எழிலில் ஈடுபட்ட எவரும், மகிழ்ச்சியின் எல்லையைக் கடந்தாராவர். அவ்வாறிருக்க எம்மவரின் அக முக மலர்ச்சிக்குக் கேட்பானேன்?

P. ராஜகோபாலன்,
இரண்டாம் வகுப்பு.

CONNEMARA LIBRARY
25 AUG 1955
MADRAS



CONNEMARA PUBLIC LIBRARY
25 AUG 1955
MADRAS



RURAL HAPPINESS

S. Narayana Pillay, II U.C.

படக் காட்சி

விஞ்ஞானம் உலகத்திற்கு உவந்தளித்திருக்கும் பொருள்கள் உரைக்க வொண்ணுதன. அவற்றுள் இன்று படக்காட்சி தனிப் பெரும் சிறப்பெய்தியுள்ள தெனச் செப்பவும் வேண்டுமோ? ஒரு நாட்டின் கலை, பண்பாடு இவைகளைப் படக்காட்சியைக்கொண்டு ஓரளவு நிர்ணயிக்கலாம். படக்காட்சியைப் பார்த்துப் பரவசக் படுங்கால் இதைக் கண்டுபிடித்துக் களிப்புடன் ஈந்த எடிசனை நாம் மறக்க இயலுமோ? எப்பொருளை எடுப்பினும் அப்பொருளில் நல்லனவும், அல்லாதனவும் ஒன்றிக்கிடப்பது இயல்பன்ருே! அங்ஙனமாயின் படக்காட்சி இவ்விதிக்கு எங்ஙனம் விலக்காயிருத்தல் சாலும்? தீயின் ஒளியினுதவியால் திருக்குறளையும் திருப்பலாம், இருட்டிலே திருட்டு வேலையும் நடத்தலாம். அஃதேபோன்று படக்காட்சியைக் கொண்டு இப்பாரிலுள்ளோருக்குப் பயன் படுவனவற்றையும் பரப்பலாம், படுகுழிக்கும் பாதை வகுக்கலாம்! எனவே காய்தலுவத்தலகற்றி படக்காட்சி பயக்கும் நற்பலன்களையும், அதனுலுண்டாகும் ஊறுகளையும் ஆராய முயல்வோம்.

முதற்கண், படக்காட்சி சிறந்த கலை என்பதை எல்லோரும் ஏற்பர். கலை மனிதனுக்குக் களிப்புண்டாக்குவதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட கருவி என்பது எம் கருத்து. கலை என்ற முறையிலே, படக்காட்சி பார்ப்பவர்க்கு உவகை யூட்டுகிறது. நாள் முழுவதும் உடல் வருந்தி உழைக்கும் தொழிலாளி தன் பொழுதை மாலையில் மகிழ்ச்சிகரமாகக் கழிக்கக் கருதுகிருன். படக்காட்சியை நோக்கி அவன் பாதம் விரைகிறது. அவண் அடையும் ஆனந்தம் அறையுந்தரத்ததோ? அன்று. அன்று. தொழிலாளி மட்டுமல்லன் பொதுவாக பொதுமக்களிற் பெரும் பகுதியினர் படக்காட்சியைக் கண்டு களிப்பும் அமைதியும் அடைகின்றனர்.

மகிழ்ச்சிக்கும் மன அமைதிக்குமட்டு மன்று, படக்காட்சி பயன்படுவது, உயரிய உண்மைகளையும் உணர்த்தவல்லது. உதாரணமாக, நாட்டுப்பற்றை மக்களிடையே மலரச் செய்யலாம், படக்காட்சியின் துணைகொண்டு. சிறந்த சினிமாப்படம், எம்மை எவராண்டாலென்ன வென்றெண்ணியலையும் 'ஏனோதானோ'க்களையும், நாட்டின் வாட்டம் ஓட்ட உழைக்காவிடினும் ஊறு உண்டாக்கிக்கொண்டலையும் 'உதவாக்கரை'களையும் ஓரளவு திருத்த உதவுமன்ருே!

அறியாமையிலே அமிழ்ந்திருக்கும் நம் நாட்டாருக்குக் கல்வியும், கருத்தும் கற்றுத் தரும் பணியிலே பாடுபடும் படக்காட்சி எத்துணை பயனுடைத்து! அரசாங்கத்தார் நற்பணியில் நாட்டங்காட்டித் திட்டம் தீட்டிச் சட்டம் இயற்றுவரேயாயின், படக்காட்சி அதற்குப் பக்கபலமாக இருப்பின் உண்டாகும் பயனைப் பகர்தலும் வேண்டுமோ? சான்ருக, நமது சென்னைமாநிலத்திலே மதுவிலக்குச் சட்டம் நடைமுறைக்குக் கொணரப்பட்டபோழ்து, அதற்கு ஆதரவளித்துப் பிரசாரமாற்றும் பெரும் பணியினை மேற்கொண்ட 'நல்ல தம்பி'யை நாம் அதற்குள்ளாகவா மறக்க முடியும்? இவையெல்லாம் உற்று நோக்குங்கால் படக்காட்சியால் உண்டாகும்

நன்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரற்பாலன.

படிக்கத் தெரியாதவர், படிக்க வேண்டுமென்ற நினைப்பிருந்தும் நேரமில்லாதோர் படக்காட்சிக்குச் சென்று செய்திகளைச் செவிக்குணவாகவும், காட்சிகளைக் கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தாகவும் விருப்போடு கொள்ளலாமன்றோ? 'கற்றிலனாயினுங் கேட்க அஃதொருவற் கொற்கத்தின் ஊற்றாந் துணை' எனப் பொய்யாமொழி புகன்றுள்ளது ஈண்டு எவ்வளவு பொருத்தமுடைத்து! நாட்டு நடவடிக்கைகளும், உலக நிகழ்ச்சிகளும் செய்திப் படங்களில் காணப்பெறுவதால் மக்களடையும் பயனை மறுக்கவோ, அன்றி, மறைக்கவோ முடியுமோ?

அஞ்ஞானத்தில் அமிழ்ந்திருக்கும் மக்களை விஞ்ஞானத்தின் பால் திருப்பித்திருத்த படக்காட்சி சிறந்த கருவி. மேலும் இன்று உலக நாடுகளிடையே ஒற்றுமை யுணர்ச்சி உண்டாக்கி உவகையுற படக்காட்சி மிகவும் பயன்படுகின்றது. ஒரு நாட்டின் கலை, பண்பாடு இவற்றை வேற்று நாட்டார் எளிதிற் புரிந்துகொள்ள படக்காட்சி சிறந்த சாதனம். உதாரணமாக, உலகச் சிறப்பிற்குரிய 'தாசு மகாலை' இத்தாரணியிலுள்ளோரெல்லாம் படக்காட்சியினுதவியாற் கண்டு களிக்கலாமன்றோ; 'பாரிஸ்' நகரைப் பாரிலுள்ளோரெல்லாம் பார்த்துப் பரவசமடையலாமன்றோ! 'ஷேக்ஸ்பியரின்' நாடகங்களைப் படக்காட்சியில் காணப்பெற்று மாணவர் பெறும் பயனையும் மகிழ்ச்சியையும் மொழிதலும் வேண்டுமோ? படக்காட்சி இவைபோன்ற நல்ல நன்மைகள் நல்குவதால் நீடு வாழ்கவென நவில்வோமாக.

இனி படக்காட்சியால் விளையும் தீமைகளைச் சிறிது சிந்திப்போம். சினிமாவின் சீர்கேட்டைப்பற்றிச் சிந்திக்குங்கால் புரட்சிக் கவிஞர் கழறியதுதான் நம் கவனத்தைக் கவருகிறது.

'என்தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்;
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக!
ஒன்றேனும் தமிழர் நடை யுடை பாவனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர் உள்ளதில்லை!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதா யில்லை!
ஒன்றேனும் உயர்நோக்கம் அமைந்ததுவா யில்லை!
ஒன்றேனும் உடர் நடிகர் வாய்ந்ததுவா யில்லை!
ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதா யில்லை!'

இன்றையப் படக்காட்சியின் நிலையை நினைக்குங்கால் உள்ளபடியே நெஞ்சு பொறுக்குதில்லை! மனிதனின் கீழ்த்தர உணர்ச்சியை இந்நாள் வெளிவரும் படக்காட்சி கிளறி விடுவதாயிருக்கிறது. திரையிலே ஆரணங்குகள் அரை நிர்வாண ஆடை அணிந்து ஆடுவது சர்வ சாதாரணமாகி விட்டது! வருங்கால நாட்டை உருவாக்க வேண்டிய வல்லுநர்களாம் இன்றைய வாலிபர்கள் இவ்விதப் படக்காட்சியைப் பார்த்துக் கெட்டொழிகின்றனரே, அந்தோ! கண்ணகி வழிவந்த தமிழ்ப் பெண்மணிகளின் கற்பிற்கே படக்காட்சி கறுப்புப் பூசிக் களிநடனம் புரிகின்றதே! கற்பு திரையிலே கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாவதை யுன்னுங்கால் உள்ளம் நோகிறது. உணர்ச்சி மேலிடுகிறது. ஒழித்தே விடுவோமா படக்காட்சியை, என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

இன்றுள்ள படக்காட்சிகளிற் பெரும்பாலானவற்றை உற்று நோக்குங்கால், பணத்திற்காகப் பண்பாடு பாழாக்கப்படுவதைப் பார்க்கலாம். மக்கள் விழைகின்றரென்பதற்காகக் கீழ்த்தரக் காட்சிகளைக் காட்டி காசு சேர்க்கின்றனரே சில படமுதலாளிகள்! ஐயகோ! இவர் பொருளுக்காக இப் புன்மை புரிகின்றனர்; ஆனால் இப் புனமையை புவியிலுள்ளோர் எல்லோரும்

அன்றோ பார்ப்பர்! வேற்று நாட்டார் உற்று நோக்குவரேயாயின் என்ன உன்னுவர் இவ்வுயர் நாட்டின் பண்பாட்டைப்பற்றி? பணத்திற்காகப் படக்காட்சி தயாரிக்கப் பட்டிருக்கிறதென்பதை அவர் அறிவாரா? இந்நாட்டின் பண்பாடே இழி நிலையிலுள்ளது என்றுதானே எண்ணுவர்! இந்நாட்டின் கலையின் நிலையே சீர் குலைந்துள்ளது என்றுதானே செப்புவர்? மக்களின் மனமே, மாண்பே மாசுடைத்து என்றுதானே மொழிவர்?

பல கொள்கை, குணமுடையோர் படக்காட்சி பார்க்கப் போகின்றனர். ஆனால் இன்றையப் படக்காட்சிகளுட் சில 'கட்சிப் பூசல்' களை வளர்ப்பதற்கும், கருத்து வேறுபாடுகளைக் கிளறுவதற்கும் பயன்படுகின்றன. போலிக் கொள்கைகள் புலமையுடன் புகுத்தப்படுகின்றன; நச்சுக் கருத்துக்கள் நயவஞ்சகமாய் நல்கப்படுகின்றன. இவை பாமரருக்கோ-அன்றி, படித்தவருக்கோ தீமையே தரும் என்பது வெள்ளிடைமலையன்றோ?

படக்காட்சியின் கதை அமைப்பிற்கும், வசனத்திற்கும் பொறுப்புடையோரிற் சிலர் மொழியில் ஆழ்ந்த அறிவற்றவராதலின் மொழியின் நிலை இழிந்து அழியவே ஆரம்பிக்கிறது. நகைச்சுவைக்காக மொழி நசுக்கப்படுகிறது. பொதுவாக மொழியின் தரமே குறைந்து குறுகலாகிறது.

படக்காட்சியில் பலதரப்பட்ட பாத்திரங்களைச் சந்திக்கிறோம்; பல நிகழ்ச்சிகளை நோக்குகிறோம்! திறமையோடு திருட்டு நடத்தப்படுகிறது, திரையில்! சட்டங்கள் சம்பிரதாயமாக மீறப்படுகின்றன! கொலை கூரிய அறிவோடு செய்யப்படுகிறது! பாகு மொழிகளால் பாவையர் மயக்கப்பட்டு பரிதவிக்க விடப்படுகின்றனர்!! இவைகளெல்லாம் படக்காட்சியில் விரிவாகவும், விளக்கத்தோடும், விறுவிறுப்போடும் காட்டப்படுவதால் பார்ப்பவர் நிலை தவறுவதற்கு ஏதுவாகிறது. பொதுவாக, மனிதனது மனம் தீயவைகளைத் தெரிந்து ஒழுகுவதில் தான் தீவிரமாக ஈடுபடுகிறது. எனவே நெறிதவற, முறைபிறழ வழியேற்படுகிறது. இவையெல்லாம் எண்ணுங்கால் 'கவிஞர் பாரதிதாசனின்' பண்ணிற்குப் பக்க மேளமிசைப்போமா என்று கூட எண்ணுகிறது, ஏழை நெஞ்சம்!

'படக்கலைதான் வாராதா என நினைத்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,
படக்கலையாம் சனிபொழிந்தால் போதுமென எண்ணும்!

படக்காட்சி வாழ்வின் பல கோணங்களிலுள்ளோரையும் பாதிக்கிறது. உழைப்பாளி உள அமைதிக்காகவும், உவகை உய்யவும் படக்காட்சி காணச்செல்கிறான். பணக்காரர் பொழுதுபோக்கிற்காகவும் ஓய்வின்பமுறவும் போகின்றனர்; மாணவர்கள் மன மகிழ்ச்சிக்காகவும், அறிவும் வளர்ச்சிக்காகவும் அவண் விரைகின்றனர்; படக்காட்சி பார்த்து மகிழ்வதில் மாதர்களும் ஆண்களுடன் போட்டியிடுகின்றனர்! எனவே இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த படக்காட்சி எல்லோர்க்கும் பொதுவாகவும் போற்றத்தக்கதாகவுமிருத்தல் இன்றியமையாததன்றோ? சமுதாயச் சீர் கேடுகளைக் களையும், மக்களிடையே அறியாமையை அகற்றி அறிவொளி வீசச்செய்யும், விஞ்ஞானத்தின் விந்தைகளாலேற்படும் விளைவுகளை விளக்கும், உலக உத்தமர்களின் வாழ்வின் உயர் நெறியை, உண்மையை உணர்த்தும், இலக்கியச் செல்வத்தின் இன்பங்களை இயம்பும் படக்காட்சிகள் உயர் நோக்குடன் வெளிவரல் வேண்டுமென்பதே யாவரும் விரும்புவதாயின் நம் விழைவு நிறைவுபெறும் என்று நம்பலாம்!

படக்காட்சியின் நிலை குலைந்துள்ளது; அதனால் தீமைகள் சில ஏற்படுகின்றன

வென்பதற்காகப் படக்காட்சி பார்க்காதே, அஃது அழிந்துபடட்டும் என்றெல்லாம் அறைவது ஆகாது, இல்லம் பழுதாக விருப்பின், அதன் பழுதைப் போக்க நம் பொழுதைச் செலவிடுவோமேயன்றி, இல்லத்தையே இடித்துத் தள்ளிவிடமாட்டோம். நோயாளிக்கு மருந்து கொடுப்போமேயன்றி அவனை மாய்த்திடும் மார்க்கம் காணமாட்டோம். எனவே, அரசாங்கத்தார் படக்காட்சியின் தீயவைகளைத் தெரிந்து தள்ளி ஆக்கவேலைகளில் ஊக்கங்காட்டி உழைப்பரேயாயின் படக்காட்சியால் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை ஏற்படுவது திண்ணம். இப்பணிக்குச் செல்வர்களும் சேர்ந்துழைத்தல் சாலச்சிறந்தது.

‘பயன் விளைக்கும் விதத்தினிலே பல செல்வர் கூடி
இடக்ககற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்
படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்
படமெடுத்தாடும்; தமிழர் பங்கமெலாம் போமோ’

—**பாரதிதாசன்**

எஸ். ஹமீது,
இடைக்கலை, இரண்டாம் வகுப்பு 3-ம் பிரிவு.

இசைத் தமிழ்

தமிழ் இயல், இசை, நாடகம், எனும் மூவகைத்தாய் தொன்றுதொட்டே வழங்குகின்றது. உலகவழக்கு, செய்யுள் வழக்கு எனும் இருவகையினும் இயங்கும் செய்யுள்—வசன நூற்கள் தொகுதி இயற்றமிழாம். இயற்றமிழ் பண்ணோடு கலந்து தாளத்தோடு நடைபெறின் இசைத் தமிழாம். கூத்தோடு சேர்ந்திலங்கும் இயல் இசைத் தமிழ் நாடகத் தமிழெனவும் பண்டை இலக்கியங்கள் பகருகின்றன.

பண்டைத் தமிழகத்தில் இசை முன்னணியிலிருந்தது. இசைபற்றி பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், பஞ்ச மரபு எனும் நூற்கள் அக்காலத்திலிருந்தன. இவை அழிந்துபட்டமையின் அவற்றில் இசைபற்றிக் குறிப்பிட்டவை, அறிதல் இயலாததாயிற்று. எனினும் இலக்கிய வாயிலாக தமிழ் இசையின் தன்மையை ஒருவாறு அறியலாம்.

தமிழ் இசை, பண்களெனவும், திறங்களென்றும் பகுக்கப்பட்டன. பண்கள் ஏழு இராகங்களைக் கொண்டன. வடமொழியில் இஃது மேள கர்த்தா என வழங்குகின்றது. இவை ஸ்வரங்கள் எனவும் வழங்கப்பெறும். தமிழ் இசை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஸ்வரங்களை உடைத்து. வண்டு, கிளி, குதிரை, யானை, குயில், தேனு, ஆடு இவ்வோசைகட்குவமை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவற்றின் எழுத்து. தேன், தயிர், நெய், ஏலம், வாழைக்கனி, மாதுளங்கனி தமிழ் இசைகளின் (பண்) சுவைக்குவமையாகும். தமிழ் இசையை அடிப்படையாகக்கொண்டு வடமொழியில் அவை ச (ஷட்ஜம்) ரி (ரிஷபம்) கா (காந்தாரம்) ம (மத்யமம்) ப (பஞ்சமம்) த (தைவதம்) நி (நிஷாதம்) எனக் கூறப்படுகின்றன.

பண்களிலிருந்து தோன்றுவன திறங்கள். பண்களிற்கு இனமாய் கூறப்படுவன திறங்கள். இதுவே பின்வருமாறு யாப்பிலக்கணத்தில் விளக்கப்பட்டுள்ளது.

> "பண்ணும் திறமும் போற் பாவு மினமுமாய்,
> வண்ண விகற்ப வகைமையால்—பண்ணின், திறம்
> விளரிக் கில்லது போற் செப்பலகவ, விசை மருட்கு
> மில்லை யினம்".

பெரும் பண்கள் ஐந்து. அவை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம். காலைக்குரிய பண் மருதம், மாலை வேளையில் படிப்பது செவ்வழி. விளரி இரங்கற் பண்ணாகும். எனவே பகற் பண்கள், சுவைப் பண்கள், வணங்கற்கேற்ற பண், இராப் பண், எனவும் இன்னோரன்ன பிறவுமான பல நுட்பமுறையில் பண்கள் பாகுபாடு செய்யப்பட்டிருந்தன எனத் தெரிய வருகின்றது. குறிப்பிட்ட வேளைகளில் குறிப்பிட்ட பண்ணையே பாடவேண்டும். இஃது தமிழரது அறிவு நுட்பத் திறனை உணரச் செய்யும். இவ்வித ஓர் கால ஆராய்ச்சியும், அதற்கேற்ற பண் ஆராய்ச்சியும் முற்றுப்பெற்று சிறப்புற்று விளங்கியது இசைத் தமிழில் என்பது குறித்தற்பாலது.

ஆரியர் ஆதிக்கத்தாலும், தமிழ் மன்னர் வீழ்ச்சியாலும் பண்டைத்தமிழ்ப் பண்கள் வளர்ச்சியின்றி, பயில்வாரற்று மங்கலுற்றன. வடநாட்டார் தமிழ் இராகங்களிற்கு புதுப்பெயர்கள் அளித்து, மாற்றங்கள் செய்து தமதாக்கிக்கொண்டனர்.

அக்காலத்திய சாதாரி எனுந் தமிழ்ப் பண் இக்கால சங்கீதத்தில் நீலாம்புரி எனவும், செம்பாலை என்ற பண் சங்கராபரணம் என

வும் கூறப்படுகின்றது. தமிழ் இசை முற்றிலும் இன்று மறைந்துவிடவில்லை. ஆலயங்களில் தேவாரம் படிக்கப்படுகின்றது. தேவாரத்தில் உள்ள பல பாடல்கள், தமிழ்ப் பண்களில் பாடப்படுகின்றன. 11,991-ற்கு அதிகமான இசை வகை இருந்த தமிழ் நாட்டில், இன்று 83 சுத்த தமிழிசை வகையே நிலவுகின்றன என்பது ஆராய்ச்சியாளர் கொண்ட முடிவு. பண்டைத்தமிழ் இசையை வளர்க்க வுன்னி, பல ஆராய்ச்சியாளர் இன்று முயன்றுவருதல் பாராட்டுதற்குரியதே.

தமிழிசைக் கருவிகள் ஐந்து. இவை தோற்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பனவாம். பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அத்தரி, முழுவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுனிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாளிகைப்பறை, துடி, பெரும்பறை என்பன தோற்கருவிகள். இவற்றின் பெயர் ஓசையினை ஒத்து இருத்தல் குறித்தற்பாலது. சல்லென்ற ஓசையினையுடையது சல்லிகை, மத்தின் ஓசையுடையது மத்தளம், குடுக்கையாக வளைக்கப்பட்டுள்ளதாதலின் குடுக்கையாயிற்று. வினைக்கிரியைகள் இடக்கையாற் ஆள்தலின் இடக்கை எனவாயது. கரடி ஓசையுடையது கரடிகை.

இத்தோற்கருவிகள் ஒவ்வொன்றும் பல பிரிவுகளைக்கொண்டிருந்தது எனின் தமிழரது இசைத்திறமைக்குப் பிறிதேதும் சான்று தேவையோ! நரம்பு வகையில் உட்பட்டது யாழ். யாழ் தமிழரின் சிறப்புக் கருவி. ழ எழுத்தின் வடிவத்தைக் கொண்டது. மகேஞ்சதாரோ கலைச் சின்னங்களில் யாழின் சித்திரம் காணக்கிடைத்தலின், அஃது தமிழர் நாகரீகமாக இருத்தல் வேண்டும் என ஆராய்ச்சியாளர் கருதற்கேதுவாகின்றது. யாழ் நான்கு வகைத்து. அவை ஆதி யாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என்பன. ஆயிரம் நரம்புகளுடையது ஆதி யாழ், இருபத்தொரு நரம்புகளுடையது பேரி யாழ், பத்தொன்பதைக் கொண்டது மகர யாழ், பதினுன்கினையுடையது சகோட யாழ், ஏழினை உடைத்தது செங்கோட்டி யாழ். யாழ்க் கருவிக்குரியோர் யாழ்ப்பாணர். பாணர் பண்ணிசைக்க விறலியர் நடனமாடினர் எனத் தெரியவருகின்றது. இக்காலத்தில் 1000 நரம்புகளைக்கொண்ட இசைக் கருவிகளோ, அவற்றை இசைக்கின்றவர்களோ இல்லை.

பண்டைத்தமிழ் நாடகங்களில் பாடப்பட்ட பாட்டு உரு. அகநாடகத்திற்கு கந்தவுருமுதல் பிரபந்த உரு ஈருக 28-ம், புறநாடகத்திற்கு தேவபாணி முதல் அரங்கொழி ஈருக 109-ம், இருந்தன்வென்று கூறப்படுகின்றது. கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் என்பன நாடக இசைக்கருவிகள். தமிழ் இசைக்கருவிகள் யாவுமே மூன்று பெரும் பிரிவுகளைக்கொண்டிருந்தன: தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி.

பண்டைத்தமிழ் இசைபற்றி சிலப்பதிகாரம் இனிது உரைக்கின்றது. அன்றைய தமிழ் இசை, அதிக மேம்பாடுடையது. அதுபோல் இசை இதுவரை யெழுந்ததில்லை, எழப்போவதில்லை என்பது தமிழ் நூல் வல்லுநர்கள்கொண்ட முடிவாகும். தமிழர்கள் அனைவரும், இதை எண்பிக்க, தமிழ் இசை ஆராய்ச்சியில் ஊக்கம் காண்பித்தல் வேண்டும்.

M. S. ஜேசுதாஸ் தங்கசாமி, M.A., B.T.
(பழைய மாணவன்)

அடி செய்யு முதவி

தாஜ்மஹால் தனி மனிதனுடைய வாழ்க்கையின் வனப்புக்கு அடையாளம். ஆனால் சங்ககிரி கோட்டை தனி மனிதனுடைய வீரத்தின் வடிவம்.

சங்ககிரி துர்க்கம் சேலம் ஜில்லாவில் ஈரோடு செல்லும் ரயில் பாதையில் சுமார் 25 மைல் தூரத்தில் உள்ள ஒரு சிறு ஊர். அவ்வூரில் ஒரு சிறு மலை உண்டு. அம் மலை மீது "ஹைதர் அலி"யினால் கட்டப்பட்ட ஒரு கோட்டை உளது. அக் கோட்டையைப் பற்றி ஒரு சிறு வரலாறு உண்டு.

கி. பி. 18-ம் நூற்றாண்டில் ஹைதர் அலி என்ற ஒரு மன்னன் மைசூரை ஆண்டு வந்தான். அவன் இந்தியாவிலும், மைசூரிலும் தன் ஆட்சியை நிறுவ ஆசைகொண்டு அடிக்கடி ஆங்கிலேயருடன் சண்டைகள் இட்டான்; ஒரு சமயம் அவன் தன் குடும்பம், நண்பர்கள், (சைனியம்) முதலியவர்களுடன் சங்ககிரி துர்க்கம் என்ற ஊரிலுள்ள தன் கோட்டையில் தங்கியிருந்தபோது ஆங்கிலேயர் அதுவே சமயமெனக் கருதி கோட்டையை முற்றுகையிட்டனர். வெகு நாட்கள் முற்றுகை நடைபெற்றது. அந்தச் சிறு கோட்டைக்குள் புகுவதற்கு ஒரு சிறு உளவுகூட கிடைக்கவில்லை.

கடைசியில் ஒரு தினம் கோட்டைக்குள் ரகசியமாக தயிர்கொண்டு சென்று கொடுத்துத் திரும்பிவரும் ஒரு "தயிர்க்காரி"யின் மூலமாக கோட்டைக்குள் புக வழி கண்டுகொண்டார்கள். அன்று கோட்டை முற்றுகை பலமாக இருந்தது. இரவு 9 மணிக்குமேல் இருக்கும். "ஹைதர் அலி" மகன் திப்புசுல்தான் தன் நண்பர்களுடன் குடித்துவிட்டு அந்தப்புரத்தில் கேளிக்கை விளையாட்டில் ஈடுபட்டிருந்தான். ஹைதர் அலி தன் உத்தியோகஸ்தர்களுடன் கோட்டை முற்றுகையைத் தடுப்பதற்கும், தாங்கள் தப்பிச் செல்வதற்கும் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள்.

அச்சமயம் "ஹைதர்" தன் மந்திரியை நோக்கி தன் மகன் "திப்பு" எங்கே என்று கேட்டார்? அவன் அந்தப்புரத்தில் கேளிக்கை விளையாட்டில் ஈடுபட்டிருப்பதாக பதில் வந்தது. ஹைதருக்கு கோபம் உச்சநிலையை அடைந்தது. இவ்வித ஆபத்தான சமயத்தில் பொறுப்பற்று தன் மகன் கேளிக்கை விளையாட்டில் ஈடுபட்டிருப்பது ஹைதருக்கு பிடிக்கவில்லை. உடனே தன் மகனைக் கொண்டுவரும்படி ஆளை அனுப்பினார். திப்புவும் வந்து சேர்ந்தான். வந்தவுடன் அவனைத் தன் கையில் இருந்த "கசை"யினால் நன்றாக அடித்துவிட்டார். திப்பு மூர்ச்சித்து விழுந்து தூக்கிச் செல்லப்பட்டான். மூர்ச்சை தெளிந்ததும் திப்பு தன் தவற்றை உணர்ந்தான். தன் மானத்தைக் காக்க சில நண்பர்களுடன் அன்று நடு இரவே குதிரைமேல் ஏறி ஒருவருக்கும் தெரியாமல் துணிகரமாக முற்றுகையைத் தாண்டி மைசூரை நோக்கிப் பயணமானான்.

மறுநாள் ஹைதர் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டு மைசூரை நோக்கி தப்பி ஓடினான். அச் சமயத்தில் தன் மகன் திப்பு காணாமல் சென்றதைப்பற்றி மனம் வருந்தினார். ஆனால் மைசூரில் அவனைச் சந்தித்ததும் ஆனந்தம்கொண்டு அவனைக் கட்டித் தழுவி தன் செய்கைக்கு வருந்தினார். ஆனால் திப்பு சுல்தான் "இந்திய சரித்திர ஏடுகளிலே தான் "மைசூர்ப்புலி" என்று பெயர் வாங்கியதற்கு அன்று தன் தகப்பனார் கொடுத்த "கசையடியே காரணம்" என்று பிற்காலத்தில் சொல்லிக்கொண்டதாக சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

N. K. பத்மநாபன், இரண்டாம் வகுப்பு

எவன் ?

வானளிக்கு நல்லருளை பொருளாக்கி
வையமுண்ண அளித்திடுவோன் எவனோகாண் ?
கானளிக்கு கனிகிழங்கு புதையலதை
காசினிக்கு காட்டுவிப்போன் எவனோகாண் ?
குணமென்னும் குன்றேறி நின்றார்க்கும்
கொல்பசியை குறைத்திடுவோன் எவனோ காண் ?
கணமென்னும் பொழுதினில் உலகுமாற்றும்
கடவுளர்க்கும் படைப்பிப்போன் எவனோகாண் ?
மண்ணுள்ளே பொன்வெட்ட சுரங்கத்தில்
மண்வெட்டி போடுபவனும் எவனோகாண் ?
கண்ணள்ளும் பட்டாடை யணிந்துலவ
கரம்பெல்லாம் பஞ்செழுதல் எவனோகாண் ?
ஊர்சுற்றும் பசுமையதை பரக்கவைத்து
உலவுதென்றல் குளிரவைப்போன் எவனோகாண் ?
ஊர்சுற்றும் பாணர்க்கும் படியளந்து
உயர்கலைகள் வளர்த்திடுவோன் எவனோகாண் ?
கொண்டைமணம் கொளப்பெறவே கொடுங்காட்டை
கொன்றுமலர் நகவைப்போன் எவனோகாண் ?
கெண்டையினம் வளர்குளத்தில் புனல்நிரம்ப
கேட்காமல் உதவிசெய்வோன் எவனோகாண் ?
கொழுவொன்றும் இரும்பாலே செய்யச்சொல்லி
கொல்லனுக்கும் தொழில்கொடுப்போன் எவனோகாண் ?
பழுதொன்று செப்பனிட மரத்தச்சன்
பட்டறைக்கும் தொழில்கொடுப்போன் எவனோகாண் ?
பாவேந்தர் சீர்நாவுக் காளாக்க
பாரதனை புதுப்பித்தோன் எவனோகாண் ?
மூவேந்தர் வாழ்நாளில் அன்னவர்க்கு
முடிபுனைந்த பெருவேந்தன் உழவன்காண் ?

மா. சங்கர், இடைக்கலை, முதல் வகுப்பு

கடமை

மந்த மாருத மாலைப் பொழுது. கழனி சென்ற காளைகள் வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருக்கும் நேரம். அந்த அந்திப் போதிலே அலுவலக வேலை செய்து களைத்துப்போன என் மனத்திற்கு ஓய்வை நாடி எங்கள் பதியின் கண்ணுள்ள சிங்காரச் சோலைக்குச் சென்றேன். குயிலின் இனிய பாடலிலே, கொஞ்சும் கிள்ளைகளின் பேச்சிலே, கோல மயில்களின் சாயலிலே மெய் மறந்து அவ்விள மரக்காவின் கண்ணிருந்த ஒரு தவிசின் மீதமர்ந்தேன்.

"ஐயா"! என்ற சொல் என் மோன நிலையைக் கலைத்தது. திடுக்கிட்டு என் பக்கலிலே உற்று நோக்கினேன். நடுத்தர வயதுள்ள ஒரு மனிதன் என் அருகில் அமர்ந்திருந்தான். மாநிறம். சாதாரண உயரம். அவனது அழகிய முகம் கரடு முருடான மீசை, தாடியால் அழகு குறைந்து தோன்றியது.

"ஐயா! எனக்கொரு ஐயம். அவ்வையத்தை உம்மால் நீக்க முடியுமா?" என்று கேட்டான்.

"தங்கள் ஐயத்தைக் கூருமலே, தீர்க்க முடியுமா என்று கேட்டால் எப்படி முடியும்? தங்கள் ஐயத்தைக் கூறுங்கள். என்னுல் முடியுமா என்று பார்க்கிறேன்" என்றேன்.

"கடமைக் கயிற்றில் கட்டுண்டு அதன் நிமித்தம் தந்தையை மகன் சுட்டுவீழ்த்த வேண்டிய நிலை ஏற்பட்டால், அச் செய்கை செய்த அத் தலை மகனை நீவிர் எவ்வாறு அழைப்பீர்? அவனைத் தந்தையைக் கொன்ற பழிகாரன், பாதகன், வெறியன், இரத்தப் பசியுள்ளவன் என்று அழைப்பீரா? அல்லது தன் உயிரே போகக்கூடிய நிலை ஏற்படினும் தன் கடமையினின்றும் வழுவாத நேர்மையாளன், உயர்ந்தோன், சான்ருேன் என்று அழைப்பீரா?"

"வையக் கண்கொண்டு உற்றுநோக்கி உய்த்துணரும்போது அச் செயல் பழியின் பாற் சேராது. ஆனுல் தனிப்பட்ட நோக்கோடு பார்க்குங்கால் பாமர மக்கள் அப் பெருமகன் செயலைத் தூற்றுவார்கள். நிற்க "ஐயா! நீவிர் கூறும் இளைஞனின் செயலை ஆராயுங்கால் அவனது வாழ்வுபற்றிய முழு விவரத்தையும் அறிய என் மனம் அவாவுகின்றது. தங்களுக்கு அவனைப்பற்றிய முழு விவரமும் தெரியுமா, தெரியுமாஞல் தங்களால் எனக்குக் கூறமுடியுமா?" என்று வினவினேன்.

"யான் அவனுடைய வரலாற்றைக் கூறும் நோக்குடனேதானே தங்கள் பக்கலில் வந்தமர்ந்தேன்," என்று கூறிவிட்டு அவ் விளைஞனின் வரலாற்றைக் கூறத் தொடங்கிஞன்.

கரிகண்ட குன்றத்தூர் என்ற மாவட்டத்திலே, கல்லிடைநல்லூர் என்ற சிற்றூர் உண்டு. கல்லிடைநல்லூர் என்ற பெயரிலிருந்தே அப்பதியின் அமைப்பு, பெயர்க் காரணம் நமக்கு ஒருவாறு விளங்கும். கல்லிடைநல்லூர் கார்வலம் வரும் உயர்ந் தோங்கும் மலைகளிடை அமைந்த கண்டோர் காதல்கொள்ளும் ஒரு அழகிய பதியாகும். வானம் பெய்யினும் பொய்யினும் வற்ருத வளமுடைய ஓர் ஊராகும். ஏனெனில் ஆண்டு நெடுவரைதோறுமிழிதருகின்ற பேரருவிகளிருக்கின்றன. அவற்றின் உதவியால், மக்கள் தாளாற்றி, வியன்புலன்

களிலே தினை விளைக்கின்றனர். அதனுல் குன்று வாழ்வு நடத்துகின்றனர். இவ்வாறு கரடுமுரடான அந்த மலைச் சாரல்களிலே, இச் சிற்றூர் மக்களுக்குத் தண்ணளி சுரந்து பொருட் செல்வமும், பல்வளம் பொருந்திய ஏனைச் செல்வமும் நல்கியதால் கல்லிடை நல்லூர் என்றழைக்கப்பட்டது.

இக் கல்லிடை நல்லூரிலே கந்தப்பர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் தான் அப் பதியின் நாட்டாண்மைக்காரர். அவர்களுடைய மூதாதையர்களெல்லாம் நாட்டாண்மைக்காரர்கள். அவ் வூருக்கே மிகப் பொறுப்பு மிக்கவர். அவருடைய வார்த்தைக்கு மறு வார்த்தை கிடையாது.

கந்தப்பருடைய குடும்பம் சாதாரண குடும்பம்தான். கந்தப்பருக்கு ஒரு மகனும், ஒரு மகளுமிருந்தனர். கந்தப்பர் ஐம்பதாவ தாண்டை எட்டிப் பிடித்துக்கொண்டிருந் தார். அவருடைய மகன் செவ்வேள் மூவெட்டாண்டகவையான்.

செவ்வேளுக்குத் தாய் மாமன் ஒருவரிருந் தார். அவருக்குப் பொற்றெடி என்றொரு மகளிருந்தாள். பொற்றெடி இருபதாவ தாண்டை அடைந்துகொண்டிருந்தாள்.

கந்தப்பர் தம் அருமை மகனுக்கு மணம் முடிக்க வெண்ணினுர். கந்தப்பருக்கும், செவ்வேளினுடைய தாய் மாமனுக்கும் நிலத் தகராறு காரணமாகப் பகை மூண்டிருந்தது. எனவே கந்தப்பர் அங்கே பெண் கேட்கத் துணியவில்லை. ஆனல் செவ்வேளோ தான் பொற்றெடியைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லை என்று பிடிவாதஞ் செய் தான். இதன் காரணமாகத் தந்தைக்கும், மகனுக்கும் மன மாறுபாடு, ஏற்பட்டு, கை கலக்கும் நிலைமைக்கும் வந்துவிட்டது.

இச் சமயத்திலே அப்பதியிலே கேட்டோர் வியப்பும், திகைப்பும்கொள்ளும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அப் பதயிலே தினை யறுவடை ஆனவுடன், மக்கள் தங்கள் குல தெய்வமாகிய முருகக் கடவுளுக்கு ஆண்டு தோறும் ஒரு பெரு விழாவை நடத்துவர். அவ்வாண்டும் மக்கள் தம் திருநாளைக் கொண்டாடத் தம் பதியினின்றும் புறப் பட்டு ஒருகல் தொலைவிலுள்ள "பைரவன் குன்று" என்ற குன்றுக்குச் சென்றனர். அங்கே தினை, மா தேன் முதலியவற்றைக் கலந்து உணவு சமைத்துத் தங்கள் குல தெய்வமாகிய கந்தழிக்குப் படைத்துவிட்டு, வலிமைமிக்க உடற்கட்டு வாய்ந்த இளைஞர் கள் குரவைக் கூத்தாடத் தொடங்கினர். மக்கள் சுற்றி நின்று விழித்துக் கண்ணிமை யாமல் பார்த்துக்கொண்டிருந்தனர். அப் பொழுது திடீரென்று "அவனைப் பிடியுங் கள் விடாதீர், விடாதீர்" என்ற குரல்கள் கேட்டன. உடனே மக்களனைவரும் திடுக் கிட்டுத் திரும்பி பார்த்தனர். சற்று தூரத் திலே ஒரு முருட்டு மனிதன் ஓடிக்கொண் டிருந்தான். அவனைத் துரத்திக்கொண்டு பத்துப் பதினைந்து இராணுவ வீரர்கள் வந்துகொண்டிருந்தனர். இதனைப் பார்த்த வுடன், அம் முருட்டு மனிதனைப் பிடிக்க முதலில் செவ்வேள் தான் ஓடினுன். வெறி கொண்டவன்போல் ஓடினுன். சற்று நேரத் திலே அம் மனிதனைச் செவ்வேள் நெருங்கி விட்டான். உடனே அம் மனிதன் தான் இடையிலே சொருகியிருந்த கட்டாரியை உருவினுன்.

மறு நிமிடம் செவ்வேளை நோக்கிப் பாய்ந் தான். திடீரென்று அவன் ஐயோவென்று தரையிற் சாய்ந்தான். செவ்வேளினுடைய நண்பன் வேலன் எறிந்த கல் அம் முருட்டு மனிதனைப் பதம் பார்த்திருந்தது. செவ் வேளும் ஏனையோரும் அம் மனிதனைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். இராணுவ வீரர்கள் வந்து அம் முருட்டு மனிதனைப் பிடித்துக்கொண்டார்கள். செவ்வேளும்,

ஏனையோரும் இராணுவ வீரர்களிடமிருந்து அம் மனிதன் ஒரு பிரபல கொள்ளைக்காரத் தலைவன் என்பதையும் அவனைப் பிடிக்கத் தாங்கள் பல மாதங்களாக முயன்றுகொண்டிருந்தனர் என்பதையும் தெரிந்துகொண்டனர். பின் இராணுவ வீரர்கள் செவ்வேளையும் மற்றுஞ் சில பெரியோர்களையும் தங்கள் பரங்கியத் தலைவனுன உஸ்ஸிடம் அழைத்துச் சென்றனர்.

பரங்கியத் தளகர்த்தனை செவ்வேளும் ஏனையோரும் அணுகியதும், அவர்களுடன் வந்த இராணுவ வீரர்களில் ஒருவன் ஆங்கில மொழியில் அத் தளகர்த்தனிடம் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். பின் செவ்வேளைச் சுட்டிக் காண்பித்தான். செவ்வேளைக் கண்டதும் அத் தளகர்த்தனுடைய கண்கள் வியப்பால் விரிவடைந்தன. அவனுடைய கட்டமைந்த தேகத்தைக் கண்டு வியந்தானே என்னவோ தெரியாது. ஆயினும் அத் தளகர்த்தன் செவ்வேளை நன்றிக் கண்களோடு நோக்கினுன். பின் அவ்வாங்கில மொழி பேசிய வீரனிடம், அத் தளகர்த்தன் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். பின் அவ்வீரன் செவ்வேளைமட்டும் தனியாக அழைத்து, அத் தளகர்த்தனின் கருத்தை இரகசியமாகத் தெரிவித்தான். செவ்வேள் தான் எண்ணிக் கூறுவதாக பகர்ந்துவிட்டு அவனும் இதரரும் தம் பதியை நோக்கித் திரும்பினர்.

மறுநாள் காலை கல்லிடைநல்லூரே அல்லோகலப்பட்டது. அங்கே செவ்வேள் இரவோடு இரவாய் மறைந்த செய்தியைப் பற்றியும், அவன்து தந்தை, சகோதரியின் ஆரு துயரைப்பற்றியுமே பேச்சாகவிருந்தது. நாட்கள் பல உருண்டோடின. ஒரு நாள் செவ்வேளிடமிருந்து ஒரு முடங்கல் வந்திருந்தது. அதில் அவன் தான் இராணுவத்தில் சேர்ந்திருப்பதாகவும், தான் வீட்டை விட்டுச் சென்றதற்குக் காரணம் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றமேவென்றும் குறிப்பிட்டிருந்தான்.

அப்பொழுது இரண்டாவது உலகப் போர் நடந்துகொண்டிருந்தது. செவ்வேள் சேர்ந்திருந்த படைப் பகுதியினர் பெல்காமில் படைவீடு தங்கியிருந்தனர். அப் படைவீட்டைச் சுற்றிலும் மிகக் கடுமையான் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவு நேரங்களில் நான்கு மணிக்கொருதரம் வீரர்கள் மாறி மாறி காவல் புரிந்துகொண்டேயிருந்தனர்.

ஒருநாள் நள்ளிரவு. அன்று சூழ்ந்திருந்த காரிருளும், கார்மேகங்களும் இரவின் பயங்கரத்தை அதிகப்படுத்தியதோடல்லாமல் ஏதோ ஒரு துக்ககரமான சூழ்நிலையைத் தோற்றுவித்துக்கொண்டிருந்தன. திடீர் திடீரென்றுத் தோன்றி மறையும் மின்னல் நெருங்கிக்கொண்டு வரும் ஏதோ ஓர் பேரபாயத்தை அறிவிப்பதுபோலிருந்தது.

அத்தகைய அப் பயங்கர இரவிலே மணி சுமார் இரண்டு இருக்கும். அப்பொழுது செவ்வேள் படை முகாமின் ஒரு பகுதியைக் காத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பளிச்சென்று மின்னல் மின்னியது. அம் மின்னலின் ஒளியிலே செவ்வேள் சற்று தூரத்திலே ஓர் உருவத்தைக் கண்டான். அவ்வுருவம் தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தது. அவ்வுருவத்தைக் கண்டவுடன், செவ்வேளுக்குத் தன் தந்தையின் ஞாபகம்தான் வந்தது. ஒருகணம் தயங்கி நின்ருன். செவ்வேளினுடைய "நீ விரோதியா, நண்பனு?" என்ற குரல் அவ்விரவின் அமைதியைப் பிளந்துகொண்டு சென்றது. அவ்வுருவத்திடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. இரண்டுமுறை கேட்டாய் விட்டது. மூன்ரும் முறை மறுகணம் 'டுமீல்' என்ற சத்தம் 'ஐயோ' என்ற

அலறல். பின் வேதனையைத் தாங்காமல் அரற்றிக்கொண்டிருக்கும் குரலின் ஒலி. செவ்வேள் அவ்வுருவம் விழுந்த இடத்தை நோக்கி ஓடினான். அதற்குள் இராணுவ முகாமில் அபாயச் சங்கு அலறியது. மறு நிமிடம் யாண்டும் 'பளிச் பளிச்'சென்று மின்னிக்கொண்டு விளக்குகள் தோன்றின. யாவரும் செவ்வேள் இருந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் விளக்குகள் செவ்வேள் இருந்த இடத்தை வந்தடைந்தன. விளக்குகளின் ஒளியிலே செவ்வேள் அவ்வுருவத்தை உற்றுநோக்கினான். மறுகணமும் 'அப்பா' என்றலறி தரையிற் குருதி தேங்கிக்கிடக்க அக்குருதியிற் புரண்டுகொண்டிருக்கும் உருவத்தின்மேல் வீழ்ந்தான். 'அப்பா! அப்பா!' என்றலறினான். திடீரென்று ஒன்றுந் தோன்றாமல் பேசாமலிருந்தான். பயந்த கண்களோடு அவ்வுருவத்தைப் பார்த்தான். பின் இரத்தத்தைக் கண்டவுடன் வெறிகொண்ட கண்களோடு தன்னைச் சுற்றி நின்றவர்களை நோக்கினான். உடனே 'ஹா ஹா' என்று ஒரு பயங்கரச் சிரிப்புச் சிரித்தான். தலைமயிரைத் தன் கைகளால் பிய்த்துக் கொண்டான். இவ்வாறு சிறிது நேரம் செய்துகொண்டிருந்தான்.

பின் அவ்வுருவத்தின் முகத்தைத் தன் இரு கரங்களாலும் இறுகத் தழுவிக்கொண்டு "அப்பா" நீங்கள் ஏன் நம் பதியினின்றும் புறப்பட்டு, இப் பயங்கரக் காரிருள் சூழ்ந்த இவ்விரவிலே வந்தீர்கள். இக் கொலைகாரனின் கரங்கட்கு இரையாகவோ! வஞ்சம் சூழ்ந்த இவ்வையத்தில் என்னைப் போன்ற கொடியவர்கள் இருக்கும்போது தங்களைப்போன்ற நல்லவர்கள் வெளிப்பட்டு உலவலாமா? என்று புலம்பினான், இன்னும் பயித்தியக்காரன்போல் ஏதேதோ உளறினான்.

சற்று நேரத்தில் அவ்வுருவம் சற்று அசைந்துகொடுத்து, கையைத் தூக்கி அமைதியாயிருக்கும்படி சைகை செய்தது. உடனே செவ்வேள் மௌனமாய் இருந்தான். சற்று நேரத்தில் அவ்வுருவம் ஈனக் குரலில் பேசத் தொடங்கியது. "அன்புடை புதல்வ, நினது முடங்கலைக் கண்டது முதல் எனது மனம் அலையிடைப்பட்ட துரும்பு போல் துடித்தது. நினது மன முறிவுக்குக் காரணம் நான்தான் என்று மனச்சான்று குத்திக் குத்தி சித்திரவதை செய்தது. இறுதியிலே யான் என் மானம், மரியாதை, கௌரவம் இவற்றையெல்லாம் கைவிட்டு விட்டு நினது மாமனின் இல் நோக்கி விரைந்தேன். யாங்கள் இருவரும் உடன்பாடு கண்டோம். முடிவில் நினக்கும் பொற்றொடிக்கும் வதுவை செய்ய நிச்சயித்தோம். இம் மகிழ்வதற்குரிய செய்தியைத் தெரிவிக்க யான் ஈண்டு விரைந்தேன். இப் பதியின்கண் வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. பின் யார்யாரிடமோ கேட்டு நீ இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டேன். வைகறைப்போதிலேதான் ஈண்டு வர வேண்டுமென்று எண்ணினேன். ஆனால் என் உள்ளம் கேட்கிறதா? இந்த நள்ளிரவிலேயே நின்னைக் கண்டு அம் மகிழ்விற்குரிய நற் செய்தியைக் கூறவேண்டுமென்று ஆவல்மிக யான் நின்னிடத்தை நோக்கி விரைந்தேன். எனக்கு இப் படைவீட்டின் சட்டதிட்டங்கள் தெரியாததால் யான் மகிழ்வு வெறிகொண்டு ஈண்டு விரைந்து வந்தேன். இறுதியிலே இக்கதிக்கு ஆளானேன்" என்று கூறி பெருமூச்சு வாங்கினார்.

இந்நிகழ்ச்சி நடந்த இருநாட்களுக்குப்பின் செவ்வேளுக்கு தன் பதிக்குச் செல்ல உத்திரவு கிடைத்தது. செவ்வேளுக்கு இப்பொழுது ஒரே ஆதரவு அவனுடைய சகோதரிதான். தன் சகோதரியை காணப் போகிறோம் என்ற ஒரே ஆவலின்பேரில்

தான் தன் பதியைநோக்கி விரைந்தான். தன் பதிக்குச்சென்றதும் தனது வீட்டை நோக்கி விரைந்தான். வழியிலே இளைஞர் கள் கேலியாகக் கூறிய வசைமொழிகளையும் செவிகொடுத்துக் கேட்கவில்லை. வீட்டிற் குள் நுழைந்தான். அங்கே ஒருவரையும் காணவில்லை. தன் சகோதரியை ஒருமுறை அழைத்தான். இருமுறை அழைத்தான். மும்முறை அழைத்தான். பதிலில்லை. விரைந்து வெளிநோக்கி வந்தான். அருகி லிருந்து வீட்டுக்காரரிடம் தன் தங்கையைப் பற்றிக் கேட்டான். அவர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு பதில் சொல்ல வில்லை. பின் பன்முறை திருப்பி திருப்பிக் கேட்கவே அவர் கோபத்துடன் செவ்வேளைப் பார்த்து "நீயும் உனது சகோதரியும் நாட்டாண்மைக்காரர் கந்தப்பருக்கு பிறக்க வேண்டிய மக்களா? எமகாதகர்கள் போலல்லவா வந்து வாய்த்திருக்குகின்றீர் கள். நீ உனது அப்பாவின் உயிரை வாங்கினாய். உனது சகோதரி உனது அப்பாவின் மானத்தை வாங்கிவிட்டாள்" என்று கூறினார்.

செவ்வேளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தன் வீட்டினுள் மறுபடியும் நுழைந்தான். தன் கண்களை அகல விரித்து நாலுபக்கமும் பார்த்தான். அப்பொழுது ஒரு மூலையில் ஒரு காகிதத்துண்டு தெரிந்தது. ஓடிச் சென்று எடுத்து அக்கடிதத்தை வாசித்துப் பார்த்தான். அது அவனுடைய சகோதரி எழுதிய கடிதம். அதில் அவள் தன் தந்தை யின் மரணத்தின் காரணமாகத்தான் அனாதையாகி விட்டதாகவும், தான் இவ் வையத்தில் வாழ விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தாள்.

இப்பொழுது செவ்வேளுக்கு இவ் வையமே ஒரு பொருட்டாகத் தோன்ற வில்லை. வெறிபிடித்தவன்போல் ஓடினான். முடிவிலே ஊருக்கு வெகு தொலைவிலுள்ள ஒரு குளக்கரைக்கு வந்தான். அவனை இப் பொழுது தற்கொலை எண்ணம் ஆட்கொண்டு விட்டது. ஆனால் அவனுள்ளத்திலே ஒரு பெரும் போராட்டம் நடந்து கொண்டி ருந்தது. அவன் மனச்சான்று அவன் செய்யப் புகும் செயலை இடித்துரைத்துக் கொண் டிருந்தது. முடிவிலே அவன் மனச்சான்று வெற்றி பெற்றது. எல்லாம் வல்ல முழு முதற் பொருளைப் பணிந்து தன் முகங் கை கால்களை அலம்ப நீரில் இறங்கிய பொழுது அவன் முன்னே அவன் சகோதரியின் உடல் நீரிலிருந்து திடீரென வெளித் தோன்றியது. உடனே செவ்வேள் 'ஓவெனக்' கதறியழுது அப்பிணத்தைக் கரைசேர்த்து அதன் மேல் வீழ்ந்து அழுது அரற்றினான். பின் அச் சடலத்தை அடக்கம் செய்தான். இப் பொழுது செவ்வேளை விருப்பு வெறுப்பற்ற ஒரு துறவு மனப்பான்மை ஆட்கொண்டது. அதிலிருந்து செவ்வேள் பைத்தியக்காரன் போல் அலைந்துகொண்டிருந்தான். தான் செல்லும் ஒவ்வோரிடத்திலும், தன் பாவக் கறைபடிந்த சோகக்கதையை அங்குள்ள மக்களிடம் கூறி, அவர்களது அபிப்பிரா யத்தைக் கேட்டுக்கொண்டே திரிகின்றான் என்று கூறினதும் எனக்கு உடனே என் பக்கலில் அமர்ந்திருக்கும் மனிதன் செவ் வேள் என்று தெரிந்துவிட்டது.

அவன்பால் எனக்கு இரக்கமும் பச்சாத் தாபமும் பிறந்தது. நான் அவனை நோக்கி "உனது கதை பாவக்கறை படிந்ததன்று. உனது வரலாற்றிலே வீரத்தின் சாயல், நேர்மையின் அடிச்சுவடு, நெறியின் முத் திரை படிந்திருக்கின்றது," என்று கூறி னேன். அப்பொழுது அவனது கண்கள் இரண்டு முத்துப்போன்ற துளிகளை உதிர்த் தன. மலர்ந்த முகத்துடன் விடை பெற்றுச் சென்றான். எனது உதடுகள் கடமையில் தவறாத தலைமகன் என்று முணுமுணுத் தன.

கோ. வேணு கோபால்சாமி, இடைக்கலை இரண்டாம் வகுப்பு.

"இளகிய மனம்"

இராமனுக்குப் பட்டாபிஷேகம். மக்கள் விரும்பும் அரசன் மகுடம் புனையப்போகிறான் என்றால் கேட்கவா வேண்டும், மக்கள் கூட்டத்திற்கு. அக்கம் பக்கத்து கிராம மக்களும் அயோத்தியாபுரி மக்களுமாய் தலைநகரில் திரண்டு நின்றனர். இங்ஙனமிருந்த கூட்டத்தை கவியரசன் கம்பன் விருத்தம் ஒன்றில் வர்ணிக்கிறான்.

வேந்தரே பெரிதென்பாரும் வீரரே பெரிதென்பாரும்
மாந்தரே பெரிதென்பாரும் மகளிரே பெரிதென்பாரும்
போந்ததே பெரிதென்பாரும் புகுவதே பெரிதென்பாரும்
தேர்ந்ததே தேரினல்லால் யாவரே தெரியக்கண்டார்.

அப்பப்பா! கணக்கிட முடியாத கூட்டமாம். மன்னவர் கூட்டமே பெரிதென்பாராம் சிலர். வீரர் குழுவே பெரிதென்பாராம் சிலர். மற்றும் சிலர் மற்ற மாந்தர் கூட்டமே பெரிதென்பாராம். சிலர் மங்கையர் கூட்டமே பெரிதென்பாராம். ஆனால் சம்பன் சொல்கிறான் இவை யாவும் சரியல்ல. அவரவர்க்குத் தெரிந்த ஒரு பகுதியைவைத்தே கூறினர். கூட்டம் முழுமையும் கண்டிலர் எனக் குறிப்பில் உணர்த்துகிறான். அப்படி அளவிட முடியாது இருந்ததாம். ஆனால் இந்த அரும் பெரும் கூட்டமெல்லாம் அன்று புலியூர்த் தேர்விழாவில் கூடிய கூட்டத்திற்கு நிகராகுமா என்பது சந்தேகம்.

கூட்டில் மொய்த்திருக்கும் தேனிக்கள் போல் தேங்கி நின்றது ஜன சமுத்திரம். புலியூர்ப் பெருமான் பொற்றேரில் பவனி செல்லும் கண்கொள்ளாக் காட்சியை காணத் துடிக்கும் பக்தகோடிகள் ஒருபுறம். ஆண்டவனைக் காணும் ஆவலில் தான் கூட்டத்தில் படும் அல்லல்களையும் கவனியாது ஆனந்தப் பரவசமாய் நிற்கும் ஔவைப் பாட்டிகள் ஒருபுறம். மின்னும் மேகலை, தங்க ஒளிகாட்ட, வண்ணப் பின்னல் தரையில் புரள பேசும் பொற்சித்திரமாய் உலவும் பூவையர் கூட்டம் ஒருபுறம். திருமதியின் கட்டளையினால் 'ரிபன்' கடைக்குத் தாவப் போகும் தன் பணத்திற்காக இரங்கி கண் கலங்கி குடும்பத்துடன் செல்லும் குடும்பத்தர்கள் கூட்டமும் கண்கொள்ளாக் காட்சியாகத்தானிருந்தது. சுருங்கக் கூறின் தோட்டி முதல் தொண்டைமான்வரை எல்லா வகுப்பினரும் அங்கே குழுமியிருந்தனர்.

பொங்கு மாகடலில் பேரிரைச்சல் நாணும் படியாக 'ஓ' வென்ற பேரொலி ஒலித்துக் கொண்டிருந்தது. தங்கள் பருத்திக் கொட்டையைத்தான் பிரபல சினிமா நட்சத்திரம் 'ஒய்யாரி' யின் எருமைமாடு சாப்பிடுகிறது என்று அழுத்தம் திருத்தமாய் வாதாடி கறாராக வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் ஒலி! புன்னகை தவள பொன்னகை விலைபேசும் மங்கையரின் ஒலி! சினிமாச் சங்கீதத்தை சித்ரவதை செய்தும் யாசகம் கேட்கும் 'சங்கீத வித்வான்களின்' ஒலி! மற்றும் இளம் யுவர்களின் அதிர்வேட்டு, ஆசி வெடிகளின் ஒலி! இப்படி எத்தனையோ ஒலிகள். மொத்தத்தில் திருவிழா மிகக் கோலாகலமாக இருந்தது. இந்தக் கூட்டத்தில் எங்கும் எக்களிப்பும் குதூகலமுமாக இருக்க, என் உள்ளம் ரத்தத்தை வடித்துக்கொண்டிருந்தது. ஜன. சமுத்திரத்தின் எங்கோ ஒரு மூலையில் நான் கசிந்

துருகும் உள்ளத்துடன் நின்றுகொண்டிருந்தேன். என் உள்ளத்தில் ஒரே குமைச்சல். என் மனச்சாட்சி என்னைக் காறி உமிழ்ந்தது. 'நீ ஒரு பித்தலாட்டக்காரன் வஞ்சகன்'—என்று என்னைச் சுற்றியுள்ள மாந்தர், மரம் செடி கொடியாவும் கேட்பது போன்ற மயக்கம் என் உள்ளத்தில்.

இத்தனைக்கும் நான் செய்தது இதுதான். சற்றுநேரத்திற்கு முன் ஒரு சிறுவனிடம் வியாபாரம் செய்துவிட்டு ஒரு செல்லாத முழு ரூபாய் நாணயத்தை அவனிடம் கொடுத்து வந்துவிட்டேன்.

'பெரியோன் என்ற போலித் திரையினுள் நீ எந்தப் பாதகச் செயலும் செய்யலாம். உன்னை நம்பி, உன் பகட்டுத் தோற்றத்தில் ஏமாந்துபோன ஒரு சிறுவனை, நெஞ்சில் கொஞ்சமும் இரக்கமின்றி கூசாமல் ஏமாற்றிவிட்டாயே. நீயும் மனிதன் தானு? செல்லாக் காசை வெள்ளிப் பணமாக்கிவிட்டோமென மனமகிழ்ந்தாயே. ஆனால் உன் கடைந்தெடுத்த வஞ்சகச் செயலின் பின்னணியில் உருவாகப்போகும் சோக நாடகத்தை நினைத்துக்கூடப் பார்த்தாயா? எளிதில் ஏமாற்றிவிட்டாய் அந்த ஏழு வயது சிறுவனை. அவ்வளவு எளிதா அவன் தன் முதலாளியிடமிருந்து தப்புவது? நாளை அவன் வேலையற்று ஊரோரம் பிச்சை எடுத்தால் அதுதான் நீ சமூகத்திற்கும் செய்யும் உதவியா? 'ஆண்டவன்' நாமம் கூறி 'அவன் செயல்களை' அலசுகிருயே நாலுபேர் மத்தியில். நீ ஆண்டவன் போதனைகளிலிருந்து படித்தது இதுதானு? ஊரறிய உலவும் கொள்ளைக்காரர்கள், உன் போல் பிறர் கண்ணில் மண்ணைத் தூவி பேடித்தனமாய் ஏமாற்றும் உலுத்தர்களை விட சிறந்தவர்களே. நீ மனிதனுகயிருந்தால், மனிதத் தன்மையின் ஒரு வித்து உன் இதயத்திலே இருந்தால் ஓடு அந்தப் பையனிடம்! அவன் பொருளை அவனிடம் கொடுத்துவிடு' என்று விரட்டியது என் மனச்சாட்சி. என் உள்ளத்தில் ஒரே போராட்டமாக இருந்தது. என் உள்ளம் திக்குமுக்காடிக்கொண்டிருந்தது. கண்களின் ஓரங்களில் கண்ணீர் ததும்பியது. அந்தக் கண்ணீர்த் திரையிலே அந்த அறியாப் பாலகன் முதலாளி கையில் அடிபடுவது, பின்னர் வேலையற்றுத் திரிவது, பிச்சையெடுப்பது போன்ற காட்சிகள் புரண்டு புரண்டு ஓடின. என் தலையில் யாரோ நெருப்பைக் கசக்கிப் பிழிவதுபோலிருந்தது. என் உள்ளம் உந்தித்தள்ள ஓடினேன். அந்தச் சிறுவனின் கடைக்கே ஓடினேன். அங்கே நான் கண்ட காட்சி! அந்தக் கடை அங்கே இல்லை. இரண்டு, மூன்று பேர்கள் அங்கே நின்று இனிமையாக பேசிக்கொண்டிருந்தார்கள். ஏமாற்றம் நிறைந்த முகத்துடன் அங்கே சிறிது தாமதித்தேன். அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைச் சற்று உற்றுக் கவனித்தேன்.

'சே-சே என்ன இருந்தாலும் அவன் அந்தப் பையனை இப்படி அடிக்கக் கூடாதையா?' என்ருர் ஒருவர்.

'ஏன் அவன் மகனைத்தானே அவன் அடித்தான்' என்ருர் மற்றவர்.

'மகன் என்ருலும் மாடா, இப்படி அடிக்க!'

'அப்படியில்லே. ஒரு ரூபாய் காசு அல்லவா. இன்றைக்குப் பூராவும் சம்பாதிச்சாலும் அந்த ஒரு ரூபாய்தானே அவனுக்கு லாபம். அதை ஏமாந்து விட்டுட்டா......' என்ருர் அடுத்தவர்.

'அதை விடுங்காணும். அந்தப்பையனை ஒரு தடியன் இரக்கமில்லாமல் ஏமாத்தியிருக்கான் பாரும் பிச்சைக்கார பசங்கள். உலகம் கெட்டுப்போச்சு. ஒருவன் கிட்ட

ஒரு கடவுள் பக்தி உண்டா. இரக்கம் உண்டா !' என்று அலுத்துக்கொண்டார் ஒரு கிழவர்.

இத்தனையும் கேட்ட எனக்கு ஒருவாறாக விஷயம் புரிந்துகொண்டது. ஆயினும் மேலும் நடந்ததை அறியும் அவாவுடன் மற்றவர்களிடம் நடந்ததென்ன என்று வினவினேன்.

'ஒண்ணுமில்லே சார். எவனோ ஒரு ஏமாற்றுக்காரன் ஒரு செல்லாக்காசை இதிலே கொஞ்சம் முன்னாலே கடைவைத்துக்கொண்டிருந்த சிறு பையனிடம் கொடுத்து சாமான்களை அடித்துக்கொண்டு போயிட்டான். பையனின் தகப்பன், அவன் தான் கடைக்காரன், வந்து பயலை நல்லா வெளுத்துக் கட்டிவிட்டான். பாவம். சின்னப்பையன் என்னமாதிரி கதறினான் தெரியுமா! கல்மனம் கூடக் கரைஞ்சிடும். படுபாவி பசங்கள்; ஹூம். இப்படி ஏமாற்றுவதற்கு ஒரு கூட்டமே அலைகிறதே சார். இன்னொரு விஷயம் கேளுங்கள். அந்தக் கடைக்காரன் அந்தக் காசை, தான் எடுத்துக்கொண்டுபோனால் தன்னையும் அது மற்றவர்களை ஏமாற்றத்தூண்டும் என்ற பெருந்தன்மையுடன், அதோ அதை வீசி எறிந்துவிட்டு தன் கடையைக் கட்டிக்கொண்டு போய்விட்டான். முரடனாயிருந்தாலும் யோக்கியன்' என்றுசொல்லி ஒருவர் ஒரு திசையைக்காட்டினார். அங்கே என் செல்லா நாணயம், அவமானச் சின்னம், நிலவில் தோன்றும் கிரகங்களைப்போல் தன் மங்கிய ஒளியைக்காட்டிச்சிரித்தது.

அது என்னைப்பார்த்து, 'நீயும் இப்பொழுது என்னைப்போல ஒரு செல்லாக்காசு தான்' என்று சொல்லுவதுபோல் இருந்தது எனக்கு. என் கண்கள் இரண்டு சொட்டுக் கண்ணீரை உமிழ்ந்தன. அவைகட்கு என் மேல் இருந்த அருவருப்பைக்காட்டிக் கொண்டன.

பக்கத்திலிருந்தவர்கள் 'சார், உங்களுக்கு ரொம்ப இளகிய மனம்' என்றார்கள்.

ஆ. சேதுராமலிங்கம்,
கல்லூரி முதல் வகுப்பு.

முன்னிரவு வேளை

மந்த மாருதம் மகிழ்வுடன் வீச
அந்திப் பொழுது ஆனந்த மூட்ட
மரத்தி லடைய மனதி லெண்ணிச்
சிறகு விரித்துச் சேர்ந்து வந்த
பறவை யாவும் பலபல வொலித்து
உறங்கா நிற்கு முயரிய மரத்தில் ;
அந்திப் பொழுது ஆனந்த மூட்ட
செந்தா மரைமலர் சினந்து குவிய
வண்டுத் தொகுதி வருந்தி எழுந்து
தண்டுத் தாமரை தன்னைத் தவிர்த்து
வேறு மலரை வேண்டிப் பறக்கும்.
ஆறுகளெல்லாம் அழகுநுரை பொங்கி
அரித்து வந்த அத்தனை பொருளையும்
செறியக் கரையுறச் சேர்த்துக் கூட்டும் ;
ஆக்க ளெல்லாம் அழகிய கன்றை
நீக்கி வந்து நெட்டுயிர்த் திருந்தமை
ஒழியக் கருதி ஓடிக் கன்றிடம்
பொழிந்து பாலைப் பருகக் கொடுக்கும் ;
அடிசி லருந்திய அலுத்த கணவன்
கடினம் தீர்க்கக் கட்டிலி லமர்ந்து
அடைவாய்ப் புகழ்ந்து தனியின்பம் காணும் ;
ஆண்டவன் கோவிலி லசையும் மணிகள்
தீண்டக் காதைக் கடவுள் அன்பர்
ஓடிக் கோவில் உள்ளே புகுந்து
பாடிப் பரமனைப் பரவித் துதிப்பர் ;
முன்னிரவு வேளை முல்லைப் பூங்காவில்
தன்னந் தனியே வண்டு சிரித்ததேன் !

ம. ராசமணி
இடைக்கலை, முதல் வகுப்பு



‘முப்பாலின் முன்னேடி’

சென்ற ஆண்டு டிசம்பர்த் திங்கள் 20, 21, 22 ஆகிய மூன்று தினங்கள் இந்திய கத்தோலிக்கு சரித்திர ஏடுகளிலேயே கண்டிராத மூன்று தினங்கள். சென்னையம் பதியிலே இன்பத் தமிழ் கொழிக்கும் கன்னி முனைமுதல் சமயத்தின் உயர்வுபோல் விளங்கும் இமயம் விரிந்த நிலப்பரப்பிலே கல்லூரிக் கலை பயிலும் காளையர்களும் கன்னியர்களும் மாநாடு நடத்திய மாபெரும் தினங்கள். அத்தினங்கள் நிகழ்ச்சிகள் அவனியின் அவதி அகற்ற அமலனைய் அவதரித்த அன்பின் அரசர் சேசுவின் அரசாட்சியை அகில இந்தியாவிலும் பரப்ப இளம் உள்ளங்களில் எழுச்சி செய்தன. வாழ்வில் வீழ்ந்து தாழ்ந்துகிடக்கும் தாய் நாட்டை இன்பக் கோட்டையாக்க ஆவலைக் கிளப்பியன. இறுதி நாள் 22-ம் நாளன்று வழு இல்லாத வளநாட்டின் வளவர்கள் அங்கண் வானத்தில் அழகிய திங்கட் செல்வன் அணிநிலா விரிக்க மெய்சிலிர்க்கும் இளங்காற்று இன்பநாற்றம் வீச கிறீஸ்துவின் திருத்தொண்டர் தாமஸின் ஆலயத்திற்குப் பவனி சென்றனர். அவரது திருமேனி அடக்கிய கல்லறை சுற்றிநின்று அவனை ஏற்றிப் போற்றினர்.

அன்று இரவு உலகம் புரந்த உத்தமனின் உயர் உரையை தென்னகத்திற்களித்த தாமஸின் நினைவிலேயே இலயித்துவிட்டேன். அவர் விதைத்த நல் கருத்துக்கள் தமிழ்நாட்டில் எவ்வாறு பதிந்தன என்ற எண்ணத்தில் ஆழ்ந்துவிட்டேன். என் மனம் ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் நின்றது. “சென்னை இன்றுபோல் அன்று இல்லை; மைலாப்பூர் ஒரு சிறு குக்கிராமமாம். ஆழக்கடலில் தாழக்கிடக்கும் முத்துக் குளிக்கும் பரதவர் கடற்கரை ஓரத்தில் வதிகின்றனர். கடற்கரையொட்டி கலங்கரை விளக்கம்போல் ஓர் கல்லறை. மண்ணவரின் மாசகற்ற மாண்ட விண்ணவனின் தண்ணளிபெற்ற புண்ணியர் தாமஸின் உடல் அடங்கிய கல்லறை. அக்கல்லறை அருகே ஓர் தமிழ்ப் பெரியார். கம்பீரத் தோற்றம். கருணைமுகம், சிந்தனை விழிகள் காந்தப் புன்னகை...அவர் கல்விக் கடலை கரைகண்டவர். தீஞ்சுவை கெழுமிய விழுமிய செந்தமிழ்ப் பாக்கள் பாடுவதில் வல்லவர். கன்னல்மொழி கன்னித் தமிழுக்கு ஒப்பற்ற முப்பால் அளித்த திருவள்ளுவ நாயனுர். ஆவி அகன்ற உடலை நெருப்பால் நீராக்கும் பண்படைத்த தமிழகத்தில் கல்லறையைக்கண்டு வியப்புறுகிறுர். திரைகடல் ஓடித் திரவியம் தேடும் தீரர்களை வினவுகிறுர்.

தங்கம் விளைந்த புகழ்தாங்கிய தமிழகத்திற்கு வங்கத்தில் வந்த புனிதர் தாமஸின் வரலாறு அறிகிறுர். பற்றற்றுன் பற்றினைப் பற்றி உலகைப் பற்று நீக்கிய கிறித்துவின் சீடரான அவர் நற்றமிழ் நாட்டில் ஞான விதை விதைத்ததை உணர்கிறுர். அவர் தமிழகத்திற்கு அறிவின் ஒளி அளித்தார். வாழ்க்கையில் விரக்தி அடையும் ஈரர்களுக்கு இரட்சகரை அளித்தார்...அதன் பரிசு மரணம்...வீரத்தை உயிர்ப் பண்பாகக் கொண்ட தமிழன் அறிவின் தூதருக்கு அளித்த நன்றி ஈட்டிக் காயம்...தாமஸ் ஒரு

தியாகி...யாருக்காக? திருமறை அருளிய இறைவனுக்காக! நிகரில்லாச் செல்வன் அந்த முதல்வனுக்காக!

திருவள்ளுவர் கிறித்து மதத்தை ஓர்கிருர். இறைவன் அனிலம் என்ற நிலையி லிருந்து அவனி படைத்ததை அறிந்திருர். அனிலத்தின் கரந்த உயிர் ஆண்டவன். எவ்வுயிருக்கும் உயிராம் அம்முதல்வனை யன்றி வாழ்க்கையில் அகர வரிசை இல்லை என்பதை

'அகர முதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு'

எனக் குறளாக்குகிருர். 'கர்த்தருக்குப் பயப் படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்ருர் சாலமோன் ஞானி. இதையே கிறித்துவும் கற்றறிந்த யூதேயா மதவாதிகளை 'தேவ னைத் தேடுங்கள்' என்று அருளினர். மனுக் குலம் அணுக்குண்டு யுகத்தில் எல்லாம் வல்ல அவனை மறந்த நிலைக்கு அறிவுச்சூடு அளிக்கும் வகையில்,

'கற்றதனு லய பயனென் கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்'

என்ற உயர்ந்த அநுபவப் பொருளை வெளி யிடுகிருர். வாழ்வின் நெறியையே பரிசுத்த கிறித்துவின் வாக்கின் ஆக்கத்திற்கொப்ப ஒன்றேகால் அடிகளில் நான்முகனர் சுருக்கி விடுகிருர்.

பாவிகளைப் பாவக் கறையினின்று அகற்ற பொற்புடை நற்கதி அளிக்க சற்குணராகி கிறித்து மாடடைக் குடிலில் மானிடராய்ப் பிறந்தார். வளர்ந்தார் உல கூத்தின் ஒளியாய் உயர்ந்தே. அவ் வொளியை உலகத்தை நித்திய இருளி லிருந்து பிரகாசிக்கச்செய்த அவ்வொளியை அணைக்க உன்மத்தர்கள் விழைந்தனர். மெய்மறைற் தந்த தூயனின்மேல் பொய்க் குற்றம் சாட்டினர். கழியால் அடித்தனர், காறி உமிழ்ந்தனர். வாழ்க்கை அலையின் உச்சநிலையான சிலுவைமரத்தில் இருப் பாணிகொண்டு அறைந்தனர். அவரை ஒறுத்த உன்மத்தர்கள் பெற்ற இன்பந்தான் என்னே? ஒருநாள் இன்பம். அவ்வின்பம் நீர்க்குமிழி. பகலவன் கண்ட பனி...ஆனல் அவற்றையெல்லாம் பொறுத்த அவரோ உலகப் புகழின் உச்சியையே தொட்டுவிட் டார். அப்புகழ் வித்தகரின் நூல் நயம்

மண்நீக்கிய பொன்கதையே வள்ளுவரும்...

'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்: பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்'

என்று மெருகிடுகிருர், இவ்வாறு இடர் விளைவித்த பகைவரை கிறித்து ஒறுத்தா ரல்லர்...கடிந்தாரல்லர்—மனங்கனிந்து மண மற்ற மறவரையும் மன்னித்தார்...இக் கல்யாண குணம் தொனிக்க

"தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வதிவர் பிழையை
மன்னியும் என்றெழிற் கனிவாய் மலர்ந்தார் நம் அருள்
வள்ளல்"

என கிருட்டிண பிள்ளையும் சொல்லோவி யம் தீட்டினர். நான்முகனரும் இதோ

"இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

என்று தண்டமிழ்ப்பா புனைகிருர்.

மேலும் திருவள்ளுவர் கிறித்துவின் வாக் கின் மாண்பை வாழ்வின் சிறப்பை ஆராய் கிருர். ஒழுக்கம் வாழ்க்கையின் பழக்கமாகி பழக்கும் வழக்கமாகி உயிர்ப் பண்பாக விளங்கவேண்டுமென்று யூதேயா நாட்டில் கிறித்து அறைந்தார். ஏன்? கிறித்து ஒழுக்கக் குன்றுதானே

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்ற குறளில் வாழ்க்கைநெறி அடங்கி இருக்கவில்லையா ?

'என்னைப் பின்பற்றுங்கள்...உலக பந்தம் நீக்கி' என்று உரைத்து 'குருத்துவத்தை உணர்த்திய கருத்தே திருவள்ளுவரது

" பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்ற குறளுக்குக் கருவாக அமைகிறது. பின் இல்லற வாழ்வு புல்லரின் புண் வாழ்வா ? இல்லை ; மன்றல் வாழ்வின் வாயிலான விவாகத்தை ஓர் வரப் பிரசாதமாக்கினார். அதை அறிந்துதான் திருவள்ளுவர்

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது "

என்று பாடுகிறார்போலும். இவ்வாறு நாமநீர் வேலி உலகிற்கு மாமழை மேல் சுரத்தல்போல் அழும் குழவிக்கும் அமுதாய்ப்பால் போன்று முப்பால் அருள் சுரக்கின்றது. இன்ன பலவாறு நினைந்த நான் கிறித்து முப்பாலின் முன்னோடி என்று முணுமுணுத்தேன்.

ஏன் கிறித்து முப்பாலின் முன்னோடியாக இருக்கக்கூடாதா ? கிறித்துவின் வாழ்வும் வள்ளுவர் வாக்கும் ஒத்திருக்கவில்லையா ? கிறித்துவின் சீலர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழகம் புகவில்லையா ? திருவள்ளுவர் ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்குமுன் மைலாப்பூரில் வதியவில்லையா ? இவைகள் கற்பனையா ? சரித்திரம் தரும் சான்று...அறிவு தரும் ஒளி...ஆராய்ச்சியின் விளைவு...பின் ஏன் கிறித்து முப்பாலின் முன்னோடியாக இருந்திருத்தல் கூடாது ?

எஸ். செல்வராஜ்,
இடைக்கலை இறுதி வகுப்பு.

"நடு நிசியில்...."

(சிறு கதை)

சந்தடி தூங்கிக்கொண்டிருந்தது. அறையெங்கும் மயான அமைதி, 'திக்கு' 'திக்கு' என்ற கடிகார ஒலியைத்தவிர அந்த அறையில் பைத்தியம் பிடித்தவன் போல் நின்றுகொண்டிருந்தான் சேகர். அசைந்துசென்று வெளியுலகைப்பார்த்தான், அமைதியுடன். எங்கும் இருள் மண்டிக் கிடந்தது அவன் உள்ளத்தைப்போல. நடமாடும் பிணமாய் வந்து நாற்காலியிலமர்ந்து மேசையின்மீது மலைபோல் குவிந்திருக்கும் புத்தகங்களைப் பார்த்து பெருமூச்செறிந்தான். காற்றில் 'கச்' 'முச்' வென்று ஒலித்த தாட்கள் அவனைப்பார்த்து, 'நாளை பரீட்சை' 'நாளை பரீட்சை' என்று கைகொட்டி நகைப்பதுபோலிருந்தது.

மறுநாள் பல்கலைக் கழகப் பரீட்சை. ஒரு புத்தகத்தை எடுத்து படிக்க முயன்றான். எதைப் படிக்க? எல்லாம் புதிதாகத்தானே இருக்கிறது! வரட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்தான். அதில் ஏமாற்றம் கலந்து கரைந்திருந்தது. அவன் மனம் அவனுடைய வாழ்க்கை அத்தியாயத்தில் சில ஏடுகளை புரட்டிப் பார்த்தது.

மூன்று மாதங்களுக்கு முன் அவனிருந்த நிலையையும் இன்று அவனிருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தது அவன் உள்ளம். மூன்றே மாதங்கள்! அப்பப்பா! இக்குறுகிய காலம் ஒருவனுடைய வாழ்க்கைப் போக்கை எப்படி அடியோடு மாற்றிவிட்டது!

தேர்வுப் பரீட்சையில் . அனுயாசமாக தேறிவிட்டோம் என்ற இறுமாப்பினாலோ, மற்றப்படி எதனாலேயோ, அவன் மனக் குதிரையை அதன் இச்சைப்படி விட்டுவிட்டான். சவாரி செய்பவன் வேண்டுமென்றே விரும்பி கடிவாளத்தை அவிழ்த்துவிட்டால் குதிரை போன திசையெங்கும் அவன் போகத்தானே செய்வான். குதிரையை கட்டுப்படுத்தும் நோக்கம்தான் அவனிடம் கிடையாதே! சேகரும் அப்படித்தான். அவன் மனம் விரும்பியதையெல்லாம் நல்லதெனக் கருதினான். எண்ணத்தை செயலாக்கவும் தவறவில்லை. படக்காட்சி சாலையே அவனது பசுமலர்ச் சோலை! 'ஆபாசம்' என அறிஞர் வெறுத்தொதுக்கிய புத்தகங்களே அவனது போற்றுதற்குரிய பொன் குவியல்கள்! பள்ளிப்பாடங்களில் மட்டுமே கவனம் செலுத்திய அவன் தீவிர அரசியல் வாதியாக மாறினான். தான் அரசியலில் ஈடுபடாவிடில் 'கவிழ்ந்து கிடக்கும் சமூகம்' தலைநிமிர முடியாது என்று அவன் எண்ணும் அளவிற்கு அவன் அரசியல் ஞானம் முன்னேறியிருந்தது. புனிதமான மாணவர் வாழ்க்கை அவனது மயக்கங்கொண்ட கண்களுக்கு அரசியல் நாடகமேடையாகத் தோன்றியது.

படக்காட்சி பார்த்தலையோ, அரசியலில் ஈடுபடுதலையோ ஒருவன் பொழுதுபோக்காக கொண்டிருத்தலில் அதிகத் தவறில்லை. ஆனால் இவற்றையே தன் வாழ்க்கை லட்சியங்களாக ஒருவன், அதிலும் திரைப்பட உலகமும் அரசியல் உலகமும், மாணவர் உலகத்திற்கு கீழ்ப்பட்டவை என எண்ண வேண்டிய ஒரு மாணவன், கருத ஆரம்பித்

தால் . . . . முடிவு? அதுதான் இன்று சேகர் நிற்கும் நிலை!

"நாளை பரீட்சை. ஒன்றும் படிக்கவில்லை. என்னசெய்வது?" என்பதே அவனது ஒரே பிரச்னை. எண்ணத்திலாழ்ந்தான், சேகர். சிந்தித்துக்கொண்டேயிருந்தான். கால ஓட்டத்தின் மத்தியிலே ஒரு (கு)யுக்தி தோன்றியது அவன் உள்ளத்தில்.

"ஆம் வேறு வழியில்லை. 'காப்பி'யடிக்க வேண்டியதுதான்"

"சேகர், நீயா இப்படி நினைப்பது? வேண்டாம். அன்ருெருவன் 'பார்த்தெழுதி அகப்பட்டுக்கொண்டதற்காக அவனைப் பற்றி, "இப்படி காப்பியடித்து தேறுவதை விட சாகலாம்" என்று கூறியநீயா இப்படி நினைப்பது? அந்த எண்ணத்தை விட்டுவிடு. அகப்பட்டுக்கொண்டால் வரும் கதியை நினைத்துப்பார்! 'நல்லவன்' என்று நல்லோர் முன் நீ யெடுத்த பெயரும் பாழ். நீ இதுகாறும் பயின்ற கல்வி பாழ். மலையனைய இடைஞ்சல்களையும் மண்ணுக மதித்து உன் கல்வியொன்றையே குறி கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் தன் மெய்வருத்தம் பாராது, தன் இரத்தத்தை வியர்வையாக நிலச்சில் பாய்ச்சிக் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு, உன்னை நன்னிலைப் படுத்த, கல்லூரியில் பயில வைத்திருக்கும் உன் அருமைத் தந்தை உன்மேல் உருவாக்கி யிருக்கும் ஆசைக் கோட்டைகளை நினைத்துப் பார்! நாள்தோறும் உன்னைக் கண்ணெனக் கருதி காத்துவரும் உன் அன்னைக்கு நீ வாங்கிக் கொடுக்கும் கவலையைக் கவனித்துப் பார்!" என்று அபாயச் சங்கு ஊதியது அவன் மனச்சாட்சி.

"அகப்பட்டுக் கொண்டால்தானே. நஷ்டத்தைப்பற்றி நினைத்தால் வியாபாரத்தில் இறங்கமுடியுமா?" என்று மனச் சாட்சியை மழுப்பியது மனதில் ஒளிந்து கிடக்கும் பைசாசவெறி.

"பிடிபடாது தேறிவிட்டால்.குற்றம் நம் நெஞ்சைவிட்டு ஓடிவிடுமா? அதுவுமன்றி வியாபாரத்திலிறங்குது வியாரியின் கடமை. 'காப்பி'யடிப்பது உன் கடனன்று. கயமைத்தனம்" என்று சாட்டையடி கொடுத்தது அவன் அந்தரான்மா........... இப்படி ஒரே புகைச்சல் அவன் உள்ளத்தில். இருதயம் குரு க்ஷேத்திரமாகியது. நீதிக்கும் அநீதிக்கும் அங்கு போராட்டம்! ஒரே குழப்பம்! ஏற்கனவே சாக்கடையாகவிருந்த அவன் மனதை இப்போராட்டம் கிளறி விட்டது.

"என்ன செய்யப்போகிருய்?" என்ற கேள்வியை அந்த அறையிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஏககாலத்தில் கேட்பதாக ஒரு கனவு அவன் மனதில்.

ஒன்றும் புரியாமல் படுக்கையில் போய் 'தொப்'பெனச் சாய்ந்தான். புரண்டு புரண்டு படுத்தான். தூக்கம் கொள்ள வில்லை. அவன் கண்கள் எதிரேயிருந்த அலமாரியில் பதிந்தன. அதில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த 'லவ்', 'கிஸ்' என்பனபோன்ற புத்தகங்கள் பல்லைக் காட்டிக்கொண்டிருந்தன. அவன் ஆவேசத்துடன் எழும்பி அப்புத்தகங்களை எடுத்து சாளரத்தின் வெளியே எறிந்தான். அதே வேகத்துடன் விளக்கையும் அணைத்துவிட்டு படுக்கையில் போய் விழுந்தான். சிறிது நேரம் அவன் படுக்கையில் புரண்டு பெருமூச்செறியும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

எங்கும் ஒரே இருள்! ஒரே அமைதி!!

மறுநாள் காலை மணி 9-55. பிணக்களை சொட்டும் முகத்துடன் பரீட்சை அறைக்குள் நுழைந்தான், சேகர், 'காப்பி'யடிக்கும்

கைவினைக்குரிய கருவிகளுடன் ஐந்து நிமிடங்கள் ஊர்ந்துசென்றன.

மணி 10. வினாத்தாட்கள் கொடுக்கப்பட்டன. எதிர்பார்த்த வினாக்கள் வந்திருந்தன. சுற்றுப்புரத்தைக் கவனித்துக்கொண்டான். மனத்திருப்தியுடன் குறிப்புத் தாட்களை எடுத்துப் பார்த்தான். அவ்வளவுதான்! இரண்டு முரட்டுக் கரங்கள் அவன் கையைப் பிடித்துத் தூக்கின. கூறமுடியாத கலவரத்துடனும் நடுக்கத்துடனும் திரும்பிப் பார்த்தான். எது நடக்கக்கூடாது என்று நினைத்தானோ அது நடந்துவிட்டது. ஆம். அவன் பிடிபட்டான். மேற்கொண்டு நடக்கவேண்டிய 'ஈமக்கடன்கள்' நடந்தேறின.

சாயங்கால நேரம். பிணமாய்ப் போய்க்கொண்டிருந்தான் சேகர் சாலை வழியே.

"அதோ போகிறானடா! பரம யோக்கியன். அன்று நான் கட்டுரைப் பயிற்சி வகுப்பில் கொஞ்சம் பக்கத்தில் பார்த்ததற்கு என்னைச் சாகச்சொன்ன சத்தியவந்தன்" என்ற புகழுரையைக் கேட்டுத் திரும்பினான் சேகர். எந்தப் பையனை அவன் பார்த்தெழுதியதற்காக 'சாகலாம்' என்று சேகர் வாழ்த்தினானோ அதே பையன்தான்!

"இவன் இந்தப் பருவத்தில் (Term) போன போக்கைப் பார்த்துவிட்டு ஏதாவது இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்தேன்" என்று ஒத்துப் பாடினான் அவன் தோழர்களில் ஒருவன்.

"இப்படிப்பட்ட மகனைத்தான் அப்பன் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டாடினான். சுத்த அற்பன்" என்றான் அடுத்தவன்.

இந்த ஒவ்வொரு சொல்லம்புகளினாலும் அவன் உள்ளம் வெதும்பி, கண்கள் நீரைக் கக்கின. கண்ணீர் அவன் கருவிழிகளுக்கும் வெளியுலகத்திற்குமிடையே பட்டுத் திரையைப்போல் தேங்கிநின்றது. திடீரென்று அத்திரையில் அவன் தந்தை உரு வெளித்தோற்றத்தில் நின்றுகொண்டிருந்தார். கருணைபொழிந்த அம்முகத்தில்தான் எவ்வளவு அவமானக் குறி!

"சேகர், நீ பிறந்ததுமுதல் என் உள்ளத்தின் விருப்புகளையும் உடல்நலத்தையும் துச்சமாக மதித்து என்னையே உனக்காக தியாகம் செய்தேனே. எதற்கு? நீ மாநிலத்தில் மாண்புற்று வாழவேண்டும்; மனிதனாகத் திகழவேண்டும் என்பதற்காகத்தானே! என் இன்பம், இலட்சியம் வாழ்வும் யாவும் உன் உன்னத வாழ்விலும் நல்லொழுக்கத்திலும்தானே அடங்கியிருந்தது. இன்று, உன்னை நன்னிலையில் காண ஏங்கிக்கிடந்த எனக்கு நீ தேடித் தந்த மதிப்பு இதுதானா?" என்றார் தந்தை அவன் மனக்கண்முன். கண்களைத் துடைத்துவிட்டுப் பார்த்தான். மற்றொரு உருவம். அவன் அன்னை!

"கண்ணே! உன்னைப் பாலூட்டிச் சீராட்டி பதவியுடன் வளர்த்த எனக்கு நீ தந்த மதிப்பைப் பார்! மகன் மனிதருள் மாணிக்கமாக விளங்கப் போகிறான் என்று மனப்பால் குடித்த மாதாவுக்கு நீ சம்பாதித்துத் தந்த பெருமையை எண்ணிப் பார்! தாரணியில் தனயன் 'சான்றோன், தன் மதிப்புடையோன்' என்று மற்றவர் கழக்பு கேட்டு மகிழத் துடித்த தாய்க்கு நீ தேடித் தந்த கௌரவத்தை உன்னிப்பார்!" என்றது அன்னையின் அன்புவழியும் சுந்தர முகம், தாங்கமுடியாத துயரத்தைச் சகித்துக்கொண்டே. இமைகொட்டி திறக்குமுன் இன்னொரு உருவம் குறுக்கிட்டது. அது அவன் உருவமேதான்!

"சேகர், நீ ஒரு ஆண்மகனா? ஆண்குலத்திற்கு நீயும் தகுதியுள்ளவன்தானா? கட

மையைச் செய்து களிப்புற்ற தமிழன் பரம்பரையில் தோன்றியவன்தானா நீயும்? 'கடமையில் கவனக் குறைவால் சிறிது தவறிவிட்டாலும்கூட கருத்தழிந்து இழிதொழில் புரிதலில் நாட்டம்கொள்ளான் தமிழன்' என்று ஏட்டிலே உன் முன்னோன் வரலாற்றைப் படித்தாயே, அந்த முனனோனுக்கு நீ 'பின்னோனா'க இருக்கவும் தகுதியுள்ளவன்தானா? 'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை, என்னோற்றான் கொல்லெனுஞ்சொல்' எனப் படித்தாயே. நீ உன் குரவருக்கு ஆற்றிய உதவி இதுதானா?" என்று சீறியது அவன் உள்ளம்.

இவ்வாறு கொல்லும் உணர்ச்சிகளால் நொந்து, மனங்கசிந்து 'அம்மா அப்பா' என்று தன்னையறியாமலே வாய்விட்டு அலறிவிட்டான்.

திடீரென்று கலக்கத்துடன் படுக்கையிலிருந்து எழும்பினான் சேகர். அவன் உடலெல்லாம் ஒரு இனம் புரியா நடுக்கம்! ஆடையெல்லாம் வியர்வையால் தெப்பமாக நனைந்திருந்தது. கலவரத்துடன் விளக்கை ஏற்றினான். சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் உட்கார்ந்துகொண்டிருந்தான். பின்னர் தாம், தான் இதுவரை கண்டது கனவு என்று புலப்படலாயிற்று.

சிறிது நேரம் பேயறைந்தவன்போல் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் பெரும் புயல்! நேரம் ஆக ஆகப்புயல் ஒருவாறு அடங்க ஆரம்பித்தது. வெளியிருந்து 'கம்' மென்று குளிர்ந்த காற்று அவன் முகத்தை வருடியது. கூம்பியிருந்த முகம் மலர்ந்தது. குழப்ப மென்ற திரை விலகி விட்டது. நீதியின் வெற்றி அந்த மாசு மறுவற்ற முகத்தில் சுடர் விட்டுக்கொண்டிருந்தது.

'நான் எக்காரணத்தையிட்டும் பார்த்து எழுத மாட்டேன்' என்ற வார்த்தைகளை அவன் வாய் முணுமுணுத்தது. சாளரத்தின் வழியே வெளியுலகைப் பார்த்தேன். சற்று நேரத்திற்குமுன் வீசிய புயல் அடங்கி இனிய தென்றல் நறுமணத்துடன் வீசியது. வானவெளியில் சந்திரன் தன்னை மறைத்துக்கொண்டிருந்த மேகக் கூட்டங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, களங்கமற்று, ஒளி வீசிக்கொண்டிருந்தான்!

ரா. பாஸ்கரன்,
மூன்றாம் வகுப்பு.

உலக அரசியலுடன் பின்னுண்டு கிடக்கும் சமாதானத்தைப்பற்றி ஒரு மாணவனால் எழுதமுடியுமா என அரசியல் அறிஞர்களுக்கு ஆச்சரியம் உண்டாகலாம். ஆனால் ஒவ்வொரு மாணவன் இதயத்திலும் சமாதானக் குரல் இயங்குகிறது என்பதை ஒருவரும் மறுக்கமாட்டார். இன்று உலகத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் சமாதானக் கீதம் இயங்குகிறது என்பதை எல்லோரும் ஏற்பர். ஆகவே உலக சமாதானத்திற்கும், மாணவர் உலகத்திற்கும் தொடர்புண்டு. வருங்கால நிரந்தர சமாதானத்தைப் பலப்படுத்த, மாணவர்களால்தான் முடியும். சமாதான கீதத்தை இனிப்பாடப்போவதும், அதற்காகப் போராடப்போவதும் மாணவ உலகமே. இன்றைய உலகப் பீதிகளைக் களைந்து, . மக்களுக்கு உறுதியான சமாதானத்தை கட்டப்போவதும் மாணவத் தோழர்களே. அவர்களுடன், மனிதகுலம் அனைத்தும் ஒன்றுசேர்ந்து, ஒருமுகமாகப் பாடுபட்டால் உலக சமாதானத்திற்கு கூடிய சீக்கிரத்தில் பலன் உண்டு. வருங்காலச் சந்ததிக்கு நாம் ஒரு நல்ல வழியை வகுத்துக் கொடுக்கவேண்டுமானால், முதலில் உலக சமாதானத்தைக் கட்டவேண்டும். சமாதானத்தின்மூலமே உலக அபிவிருத்தியைக் காணமுடியும்.

இரண்டு நாசகார யுத்தங்களிலிருந்து மீண்ட உலகம், இன்று, எந்நிலையில் செல்லுகிறது என்பதைக் காணும்பொழுது, உலக சமாதானப்பிரியர்களின் உள்ளம் வெதும்புகிறது; வருந்துகிறது. நாசத்தின் பலனை அனுபவித்த உலகம் ஏன் மேலும் நாசத்தை விரும்பிச் செல்லுகிறது? நாசகாரத்தின் உச்சநிலையை அறிந்த உலகம் ஏன் நாசகாரத்தின் தன்மையை இன்னும் உணராது இருக்கிறது? இவற்றை நாம் உணர

வைக்க முடியாதா? முடியும். எப்பொழுது? உலக மானிடவர்க்கம் தன் **மானிடத்தன்மையை** உணரும்பொழுது; அறியும்பொழுது.

நாகரீகத்தின் பெருமையையும், தன்மையையும் வானளாவப் பேசும் உலகம் ஏன் இன்று மனிதத் தன்மையை ஏற்க மறுக்கிறது? பகுத்தறிவு படைத்த மக்கள் இவ்விருபதாவது நூற்றுண்டில் இல்லேயா? அல்லது இந்நூற்றுண்டின் நாகரீகத்தின் லட்சணம்தான் என்ன? ஒருபுறத்தில் நாகரீகமாகப் பேசுவதும், மறுபுறத்தில் அநாகரிகர்களாக நடப்பதும்தான் இன்றைய நவநாகரீகமா? இதை எந்த மனிதவர்க்கமாவது நாகரீகம் என்று நம்புமா? இன்றைய உலகம், தான், அநேகத்துறைகளில் முன்னேறியிருப்பதாகப் பறைசாற்றுகிறது. ஆம். ஆனால் அம்முன்னேற்றம் எத்துறையில் செல்லுகிறது என்பதைக் காணும்பொழுது, உலக மக்கள் வெட்கித் தலைகுனியவேண்டியிருக்கிறது. இன்றைய ஒருநாட்டின் முன்னேற்றம் அதன் அண்டை நாட்டைப் பாதிப்பதாக இருக்கிறது. ஒரு நாடு முன்னேற அண்டை நாடுகள் ஏன் பாதிக்கப்படவேண்டும்? தன் நாட்டைப் பலப்படுத்த விரும்பும் மக்கள், அதுபோல் பக்கத்து நாடுகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றால், அதுவே உலகப் பண்பாடாகும். இல்லேயேல், அது உலகப் பண்பாட்டை அழித்து, தன்னுடைய சர்வாதிகார நாடகத்தை நடத்த, உலகத்தை, ஒரு நாடக மேடையாக அமைத்துக்கொள்ளுதலேயாகும். இப்படிப்பட்ட நாடுகள், உலக அரங்கில், நடமாடுவதால் உலக சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படுகிறது. சென்ற மகா யுத்தத்திற்குக் காரணம் யாது? ஒரு நாடு, தன்னுடைய இனத்தைப் பெரிதாகக் கருதி, உலக இனத்தை இழிவாகக் கருதி, தன்னுடைய முன்னேற்றத்திற்காக, உலகத்தையே இரையாக்க இரண்டாம் பெரும் போரை அவிழ்த்துவிட்டது. அதன் முடிவு உலக மக்களுக்கு நன்கு தெரியும். ஆனால் அவற்றை அவர்கள் உணருவதற்கு, தகுந்த பருவத்தை எய்தாமல் இருக்கிறார்கள்.

இன்று உலகத்தினிடையில் கேட்கும் குரலோ மூன்றுவது உலக மகா யுத்தம்! **மடிந்துகொண்டிருக்கும்** ஏகாதிபத்தியங்கள் தங்கள் கடைசி ஆயுதமாகிய உலகப் போரைக் கிளப்பி, மரணவாயிலிருந்து விடுவித்துக்கொள்ள முயல்கின்றன. உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் இன்று நடக்கும் உள்நாட்டுப்போர் **மக்கள்சக்திக்கும்,** ஏகாதிபத்தியத்திற்கும் நடக்கும் யுத்தமே. மக்கள் குரலாகிய, சமாதான வோசையை, பீரங்கி முழக்கத்தால் நசுக்க ஏகாதிபத்தியம் பகற்கனவு காண்கிறது. **மக்களாற்றலே** நசுக்க, தன்னுடைய முழுவன்மையையும் வெளிக்கிளப்பிப் போராடிவருகிறது, ஏகாதிபத்தியம். இன்றைய உலக சமாதானத்தை நிலைநிறுத்தப்போவது மக்கள் சமாதானக் குரலா? அல்லது ஏகாதிபத்தியப் பீரங்கி முழக்கமா?

உலகத்தில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டுமானால், இன்றைய ஏகாதிபத்தியங்கள் முதலில் மாய்ந்து மறையவேண்டும். ஏகாதிபத்திய வெறியைக் களைய, மக்கள் சக்தியெல்லாம் ஒன்றுசேர்ந்து போராடவேண்டும். அப்பொழுதுதான் அவற்றை நாம் வேருடன் களைய முடியும். ஏகாதிபத்தியங்கள் என்றும் உலக மக்களைச் **சுரண்டி** வாழ்வதையே தங்கள் தொழிலாகக்கொள்ளும் பிண்டங்கள். இத்தொழிலே, குடியரசு உலகம், என்றும், எப்பொழுதும், எதிர்த்துப் போராடியேதீரும். அன்று பாசிசமானது (Fascism) மக்களாற்றலேச், சாகடிக்க இரண்டு பெரும் போர்களைத் தொடுத்து மடிந்தது. இன்று ஏகாதிபத்தியமானது, குடியரசை முறியடிக்க முற்

பட்டுள்ளது. மக்கள் தமது பலத்தைச் சிதறடிக்காமல், ஒற்றுமையுடன் போராடினால் நிச்சயம், ஏகாதிபத்தியமும், பாசிசத்தைப்போல் மடிந்து மறையும். ஏகாதிபத்தியத்திற்குக் கல்லறை கட்டவேண்டியது, ஜனநாயகத்தின் கடமையாகும். இக் கடமை நிறைவேறினால் நிச்சயம் உலகில் சமாதானமும் நிலைபெறும்.

உலக மக்களாட்சியின் தாயகமாக, உலக நாகரிகத்தின் இருப்பிடமாக தன்னை ஒரு வல்லரசு கருதுகிறது. ஆனால் அங்கு நிலவும் நிலையைக் கண்டால், மனிதகுலம் அஞ்சவேண்டியிருக்கிறது. குடியரசை வாயளவில் விளம்பரம் செய்துகொண்டு, முறைகேட்டைப் புரிந்துகொண்டு வருகிறது. கறுப்பன் என்ற நாமத்தை, பலருக்குச் சூட்டி, அவர்களை மாக்களாக நடத்தி வருகிறது. அங்கு நிலவும் நவநாகரிகத்தின் திருவிளையாடல்தான் அந்த கொடுமைகள். அந்நாடு இன்றைய உலக அரசியல் வானில் கிளப்பிவிடும் பீதிப் புகைகளைக் கண்டால், அது நமக்கு வெடிகுண்டுப் புகையாக, அணுகுண்டுப் புகையாக, நீர்வாயு குண்டுப் புகையாக பதறுங் காட்சிகளை அளிக்கிறது. குடியரசின் பெயரால் தன்னரசுக் கொடூரங்களை நம்மீது அவிழ்த்து விடுகிறது; நாகரிகத்தின் பெயரால் நம்மை நசுக்கப் பேராசைப்படுகிறது. உதவியின் பெயரால் உலகத்தையே சுரண்டவேண்டும் என்று கனவு காண்கிறது. இவற்றிற்கு சந்தர்ப்பமும், சூழ்நிலையும் வழிசெய்கின்றன. இச் சதிகாரச் சந்தர்ப்பமும், சூழ்நிலையும் நீடித்தால் உலக சமாதானம் நீடிக்குமா?

இன்றைய அரசியல் வானில் நிகழும் சிறிய நிகழ்ச்சிகளும், உலக சமாதானத்தைப் பாதிப்பனவாக இருக்கின்றன. ஒரு சிறிய நாட்டின் மூலையில் கிளம்பும் சிறிய நெருப்பும், உலகப் பெருந் தீயாக (world conflagration) மாற இன்று வழியிருக்கிறது. நிகழ்ந்துகொண்டும் வருகிறது. ஆதலால் உலக சமாதானத்தைப் பேண விரும்பும் மக்கள், அவர்கள் நாட்டின் அரசியலை சரியாக, சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். அந்நாட்டு மக்களிடம் காணும் குறைபாடுகளை, வேறுபாடுகளை அடியோடு அகற்ற வேண்டும். அவ்வேறுபாடுகளைக் களைவதில் மக்கள் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றவேண்டும். செயலாற்றுவதில் மக்கள், தங்களுடைய மனிதாபிமானத்தைப் பரிமாறிக்கொள்ள முயலவேண்டும். அம் முயற்சி மக்களிடையே வேரூன்றினால், உலக சமாதானமும் பலமுறும். ஒவ்வொருவரிடமும், சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நம்பிக்கை எழவேண்டும். அந் நம்பிக்கை இருந்தால்தான், உலகவானில் சமாதானக்குரல் கேட்கும். இல்லையெனில் பேச்சளவில் சமாதானக் குரலும், செய்கையில் மூன்றாவது உலக யுத்த முழக்கமே முழங்கும்.

இன்றைய ஒவ்வொரு நாட்டையும் பாதிப்பது அந்நாட்டின் பொருளாதார அசியல் பிரசினைகளே. குறிப்பாக இன்றைய ஆசிய, ஆப்பிரிக்க மக்களின் பொருளாதாரத்தைக் காணும்பொழுது, அதுவே உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்குமோவென்று அஞ்ச வேண்டியிருக்கிறது. கோடிக்கணக்கான ஆசியமக்கள் வறுமையால் புழுக்கள்போல் துடித்து வாடுகிறார்கள். இன்று, உலகத்தில் பெரிய கண்டமாகிய ஆப்பிரிக்காவில், மக்களுக்கிடையில் நிலப் பசி உண்டாகியுள்ளது. அப் பசியை, இன்று அந்நாட்டில், ஆதிக்கம் செலுத்தும் வல்லரசுகள், துப்பாக்கிமூலம் தீர்த்துக்கொள்ள எண்ணுகின்றன. அம் மக்களின் வறுமைப் பசியை அகற்றப்போவதாகக் கூறிக்கொண்டு, இன்றைய ஏகாதி

பத்தியங்கள் அத் தேச மக்களுக்கு உணவிற்கும், உடைக்கும் பதிலாக, துப்பாக்கியையும் வெடிகுண்டையும் இறக்குமதிசெய்து, அம் மக்கள்மீது காலனி ஆதிக்கத்தை அதிகரிக்கப் போட்டிபோடுகின்றன. ஆனால் இவற்றிற்கு விழிப்படைந்த ஆசியா இடம் தராது. அரசியல், பொருளாதார சுதந்திர உணர்ச்சிகொண்ட ஆசியாவில் அவைகளுக்கு இடமில்லை. சமாதான ஆர்வம் கொண்ட ஆசியாவில் போராசைப் பித்துக் கொண்டவர்களுக்கு வேலையில்லை. இதை இன்றைய ஏகாதிபத்திய அரசுகள் உணர்ந்தால் உலக சமாதானத்திற்குப் பங்கமில்லை. சமாதானம் நீடிக்கும்.

இன்றைய சமாதானத்தை மேலும் அச்சுறுத்துவன இன்று உலகில் தலைவிரித்தாடும் இன, நிறவெறியாட்டங்கள். மனித வேறுபாடுகளற்ற சமுதாயத்தை அமைக்கப் போராடும் இந்நாளில் இதுபோன்ற காட்சிகள் காட்சியளிப்பது மனித குலத்திற்கே இழிவானதாகும். உலகில் பல பெரியோர் தோன்றி இவ்விழிவைத் துடைக்க தங்களுடைய வாழ்நாள்கள் முழுவதும் போராடினார்கள். போராடிக்கொண்டுமிருக்கிறார்கள். இந்த இழிவைத் துடைக்க இந்நாகரிக சமூகம் என்று, மனப்பூர்வமாகப் பாடுபடுகிறதோ அன்றே நாம் உலக சமாதானத்தைப்பற்றிக் கனவு காண்கலாம். இல்லையேல் ஒருபுறத்தில் **கறுப்புப் புகையும்**, மறுபுறத்தில் **வெள்ளைப் புகையும்** கிளம்பி உலகத்தின் கண்ணை மறைக்கக் கூடும்.

இன்றைய மனித இனத்தைக் காக்கும் பொருட்டு, ஆசிய மக்கள் போர்மேகங்களினிடையில் **சமாதானப் புறு**வைப் பறக்க விட்டிருக்கிறார்கள். இச் சமாதானப் புறு உலக சமாதானச் சங்கீதம் பாடி மகிழ்வித்து வருகிறது. இது சமாதானப் பிரியர்களுக்கு மன ஆறுதலும், ஊக்கமும் தருகிறது. ஆனால் அதே நேரத்தில் இச் சமாதானப் புறுவைச் சுற்றி மேற்கத்திய யுத்தவெறிக் கழுகுகள் வட்டமிட்டு வருகின்றன. இப் போர்வெறிக் கழுகுகளுக்கு, இச் சமாதான புறு இரையாகாமல் நாம் பாதுகாக்கவேண்டும். இல்லையேல் உலக வானில் சமாதான இன்னிசை கேட்கமுடியாது. ஆனால் நாம் போர் முழக்கத்தை, வெடிகுண்டு இடிகளுக்கு இடையில் கேட்கலாம். அவ்வெடிகளுக்கு எதிர்ப்பாக, தரையிலிருந்து எதிர் குண்டுகள் ஆகாயத்திற்குச் சென்று, சந்திர மண்டலத்தில் நிலவும் அமைதியைக் குலைக்கும் பயங்கர முழக்கத்தை கேட்கலாம். அவற்றின்மூலம் சந்திரமண்டலமும் யுத்தத்தில் இழுக்கப்படலாம். இவற்றிற்குமேல் நாம் அமைதியை வேண்டினால் அவற்றை இனி நரகலோகத்தில், நரக வேதனையில் அனுபவிக்கலாம். என்னே நம் நிலை!

இன்றைய மனிதன் பெற்றுள்ள அறிவைக்கொண்டு இவ் உலகத்தை முழுவதும் **பூஞ்சோலை**யாக, மாற்றி ஓர் **புத்துலகைச்** சமைக்கலாம். இவற்றிற்கு மனிதனிடம் திடமும், பலமும், அறிவும் ஒருங்கே அமைந்துள்ளன. தினமும் பல விஞ்ஞான முன்னேற்றத்தை இவ்வுலகின் கண் நடத்திக் காட்டுகிறான். விஞ்ஞானத்தில் அளவின்றி முன்னேறிய மானிடகுலம் அவற்றை மக்களின் தரத்தை உயர்த்த பயன்படுத்தினால் அதுவே உலக முன்னேற்றமாகும். ஆனால் இன்றைய விஞ்ஞான உலகம், ஏகாதிபத்திய வெறிகொண்டவர்களிடம் சிக்குண்டு தத்தளிக்கிறது. மானிட இனத்தை அழிக்க, அணுகுண்டும், நச்சுவாயு, நச்சுக் கிருமிகுண்டுபோன்ற அஞ்சத்தகும் ஆயுதங்களை உண்டாக்குவதில் இன்றைய விஞ்ஞானம் பயன்படுத்தப்படுகிறது. இவ் விஞ்ஞானம் இவ் வழியில்

சென்றால், உலகம சுடுகாடாக மாற வேண்டிய காலம் சீக்கிரம் வரும். இந் நாகரிக உலகத்தை விஞ்ஞானத்தைக் கொண்டா சுடுகாடாக்கவேண்டும்? விஞ்ஞானத்தின் முன்னேற்றமா இது? நாசகாரக் கருவிகளை தயாரிப்பதை, தடுக்க உலக மக்கள் போராடவேண்டும். இந் நாசகார விஞ்ஞானத்திற்கு மக்கள் வன்மை என்றும் பணியாது, பணியப்போவதுமில்லை. மக்களாற்றலை, பீரங்கியோ, வெடிகுண்டோ உடைத்துவிட முடியாது. இவற்றை நாம் வல்லரசுகளுக்கு உணர்த்தவேண்டும். வல்லரசுகளும் உணருமானால் உலகத்தில் போர் வெறி தலைதூக்காது.

வருங்கால அரசியலில் ஒளி வீசப்போகும் மாணவர்கள், உலக அமைதியை அடிப்படையாகக்கொண்டு அரசியலை அணுக வேண்டும். அரசியல் தனிபட்டவரது மூலதனமன்று. அது உலக மக்களது பொதுச்சொத்து. இன்றைய அரசியல் உலகத்தை சாதி, நிறவேற்றுமைகளும், ஏற்றத் தாழ்வு என்ற நோய்களும் பிடித்திருக்கின்றன. இவற்றிற்காக மக்கள் போராடியும் வருகிறார்கள்; வெற்றியும் அடைந்து வருகிறார்கள். சில நாட்டு மக்கள் தங்கள் நாட்டில் நிலவிய சாதி நிறவெறியையும், உயர்வு தாழ்வையும் அறவே அகற்றிக் கொண்டு வருகிறார்கள். இன்று அந்நாடுகளின் உள்நாட்டு அரசியல் சுத்தமாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்நாடுகளில் மாணவர்கள் பெரும் பங்கெடுத்துப் பணியாற்றினார்கள். மாணவர்களிடம் அதிக ஆற்றலிருக்கிறது. அவர்களால் அவர்கள் நாட்டினுடைய அரசியலையும், அரசாங்கத்தையும் பிடித்திருக்கும் வேறுபாடுகளைக் களைய முடியும். மாணவ உலகம் வேறுபாடுகளின்றி, அரசியலை அணுகினால், வருங்கால உலகம், தன்னுடைய நல்வாழ்வு வழியை மேலும் விரிவாக்கிக்கொள்ள முடியும். அதனால் உலகமும் தன்னை சமாதானப் பாதையில் செலுத்தி முன்னேற முடியும். இவற்றிற்காக மாணவர்கள், தங்கள், தங்கள் ஆராய்ச்சி மனப்பான்மையை, சமர்தான முறையில் செலுத்தி, உலக சமாதானத்தின் அடிப்படையை பலத்துடன் பொலிவுற்று விளங்கும்படிச் செய்ய வேண்டும். சமாதானத்தை குறிக்கோளாகக் கொண்டு முன்னேறினால் விரைவில் முன்னேற முடியும். உலக மாணவர்கள் தங்களிடையே, பண்பாட்டு பரிமாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு நாட்டின் பண்பாட்டை மற்றைய நாட்டு மக்கள் தெரிந்துகொள்வதால் நாடுகளுக்கிடையில் ஐக்கிய மனப்பான்மை ஏற்படும். நல்லெண்ணத்தை வளாத்து உறுதிப்படுத்துவது மாணவ உலகத்தின் கையில் தான் இருக்கிறது. ஆகவே எவ்வழி மாணவர் உலகமோ அவ்வழி வருங்கால உலக சமாதானம்.

வளர்க உலக சமாதானம்

E. P. மாரியப்பன்
முதலாவது இளங்கலை வகுப்பு.



அவள் !

இளமஞ்சட் கதிர்கொண்டு
இலைநுனியின் பனியோட்டும்
பளபளத்த பொற்றட்டுப்
பரிதியொளி தனில்விழித்தாள்.
வளந்தின்று படுத்திட்ட
வரப்பழிந்த பொற்பரப்பில்
இளந்தென்றல் தாலாட்டும்
விளைவயலில் 'அவள்' கண்டேன.
அடிவானப் புதுமலர்ச்சி
அதைத்தொட்டு விளையாட
துடியான தட்கொண்டு
துறையலம்பு தன்பொய்கை
சிறுகானப் புள்ளிசையில்
கண்விழித்த கமலத்தின்
பெறுமானப் புன்னகைப்பில்
மலரொளியில் 'அவள்' கண்டேன்

மா. சங்கர்,
இடைக்கலை, முதல் வகுப்பு

"இன்பலோக யாத்திரை"

"இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகியினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணியிழி தொழில்தனைப் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்"

என உணர்ச்சி வேகத்தோடு துவண்டுகிடக்கும் தமிழர் தமக்கு ஊன்றுகோல் விடுத்து எழுந்துநிற்கும் திடத்தையருளி நற்பாதை காட்டுகிறார் புரட்சிக்கவி, தேசியக் கவியென நாம் உச்சிமீதிருத்தி மெச்சிமகிழும் பாரதி. அவர் காட்டும் பாதை கல்லும் முள்ளும் கலந்து கரடுமுருடாயினதாயினும் அற்புதமாயமைந்தது. அது கொண்டு சேர்த்திடுமிடமோ எண்ணமுடியா இன்பலோகம். அவ்வின்ப லோகத்தினை அடையவேண்டின் கல்லும் முள்ளும் கலந்த பாதையின் வழி கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சுவோரல்ல யாம் என்று வீறுற்று விருப்புடன் சென்றிடல்வேண்டும். அப்படியானால்தான் நன்மை நிறைவுபொலியும் இன்பலோகத்தை அடைந்திடமுடியும். இவ்வளவு இன்பமும் கிடைத்திடும்போது கல்லாயினென், முள்ளாயினென், எதுவாயினென் கடந்தேதீருவேன் என்ற எண்ணம் எழுகிறதல்லவா நம் மனத்துள். எனவே கவி காட்டும் பாதைவழிச் சென்று இன்பலோகத்தை எட்டிப்பிடிப்போம். அதிலிருக்கும் முட்களைந்து செம்மைப் படுத்துவோம்.

"இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்" எனக் கூறுவதால் இன்னலெல்லாம் மின்னல் வேகத்தில் மறைந்திடுமே அதற்கு அஞ்சுவரோ என அறிவுறுத்துகிறார். இருள் நிலைத்து நிற்கப்போவதில்லை. ஒளி வரத் தாமதம் ஏற்படலாம். ஆனால் ஒளி வந்தேதீரும். புயலுக்குப்பின் எப்படியாவது அமைதி ஏற்படுவதுபோல் நமது துன்பத்துக்குப்பின் இன்பம் வந்தேதீரும். எனவே இன்னல் வந்தபோது அச்சமுறாது அதைத் துச்சமாக மதித்திடுக எனப் புகழ்கிறார் ஆண்மைச் சிங்கம். அதற்கு மாறாகத் துன்பம் நேர்ந்த போழ்தில் அஞ்சிப் பதைபதைத்து பாதகச்செயலையும் செய்யத்துணிவது ஆறறிவு படைத்த மனிதனுக்கு அடுக்குமா? இன்னல் என்றதும் என்னாகுமோ நமது கதி என்றிடாது அவற்றை அஞ்சாமையால் முறியடித்திட வேண்டாமா? அஞ்சினால் மிஞ்சும் இன்னல் இடர்ப்படுத்திடும். ஆகவே அஞ்சலாகாது எனக் கூறுவதற்குத்தான்,

"இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்
இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட
போதிலும்
நச்சைவாயிலே கொணர்ந்து நண்பரூட்டு போதிலும்
பச்சணிந்த கொங்குமாந்தர் கண்கள்வீசு போதிலும்
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

எனக் கூறுகிறார். அவரைப் பின்தொடர்ந்து அச்சமாம் புதர்களை அஞ்சாமையாம் ஆயுதங்களைக்கொண்டு அகற்றி அப்பாதை வழியே நமது இன்பலோக யாத்திரையைத் தொடரலாம்.

அடுத்து, "ஏழையராகியினி மண்ணிற் றுஞ்சோம்" என அறைகிறார் முயற்சியின்

சிகரம். ஏழையாக இருந்தால் செத்தொழிந்திடு என்பது கவியின் கருத்தன்று. நீ ஏழ்மையாக இருக்கவேகூடாது: எப்படியாவது உயரலாம். ஏழ்மை வியாதியைப் போக்க என்னிடமொரு மருந்திருக்கிறது. அதை அருந்து ; குணமடைவது நிச்சயம். எனவே உன் ஏழ்மையை அம்மருந்து கொண்டு மாய்த்திடு என்கிருர் கவி. அவ்வளவு திறன்படைத்த அம்மருந்து யாதெனின் அதுதான் "முயற்சி." இம்மருந்து கிடைக்காததொன்றன்று ; விலையேறப்பெற்றதன்று ; உண்ணுவதற்கரிதானதன்று. எனவேதான் முயற்சிகொள் எனக் கூறுகிருர். அந்த முயற்சி எவ்வளவு பெரிய அளவினதாயிருக்கவேண்டுமெனில் அது நம்மை "ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்," உழைத்துக் கொண்டே இருப்போம் எனக் கூறச் செய்திடவேண்டும். அத்தகைய முயற்சி தான் நம்மை உன்மத்தன், உலுத்தன், ஊதாரி, உதவாக்கரை முதலிய இழுக்குகளினின்று காத்து உழைப்பவனுய், உயர்ந்தவனுய்ச், செல்வச் சீமானுய் ஆக்கிடும். ஔவையால் கொடிதினும் கொடிதெனக் கணிக்கப்பட்ட ஏழ்மையை அகற்றிட முயற்சிகொண்டு எதெதைச் செய்யவேண்டும் எனவும் கூறுகிருர். ஏழ்மைப் பனி மலையைக் கரைத்திடக் கைத்தொழில் ஆதவன் உதித்திட வேண்டுமென்பதெண்ணியே,

> "குடைகள் செய்வோம் உழுபடைகள் செய்வோம்
> கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்
> நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்.
> ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்"

எனவும் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்வும் கூறுகிருர். எனவே ஏழ்மைமலையை அகற்றி ஆங்கோர் தொழிற்பூங்கா அமைத்து அதன் மருங்கே முயற்சி மடுகண்டு அந்த நீர்நிலையில் நீந்திச் சென்று அடுத்த கரையிற்போய் இன்ப லோகம் அடையலாம்.

"தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்" எனப் புகல்கிருர் புரட்சிவீரன். இவ்வடியைப் பாடுமுனம் கவிகாலத்தின் கோலத்தைக் கண்முன் நிறுத்துகிருர். நாடெல்லாம் லஞ்சப்பேச்சு. நகரெல்லாம் கருஞ்சந்தை நாற்றம், ஊரெல்லாம் குரோதப் படுகுழி, வீடெல்லாம் வஞ்சக வலை. இவற்றைக் கண்ணுற்ற கவி மனம் நொந்து எனது பிற்காலச் சந்ததியாவது இதுபோழ்து நடக்கும் தீமைகளைக் காணு தொழியட்டும் என எண்ணித் தீட்டுகிருர் தமது கருத்தின் தொகுப்பைப் பாட்டாக. லஞ்சம் வாங்குவதால் நாடு நலிவுறுகிறது. அக்கிரமம் பேய்க்கூச்சல் எழுப்புகிறது. கோரம் கூக்குரலிடுகிறது ; அநீதி அபிநயம் பிடிக்கிறது. கருஞ் சந்தையால் வஞ்சம் பெருகுகிறது. களவு அதிகரிக்கிறது. மனிதன் மனிதனை மாய்க்கப் பார்க்கிருன். இவற்றிற்கெல்லாம் ஒரே காரணம் தன்னலம்பேணி இழிதொழில் புரிவதுதானே. இத்தன்னலம் வளர்வதற்குக் காரணம் எல்லோரும் உற்ருரே, உறவினரே என்ற எண்ணமில்லாமைதானே. அவ்வெண்ணம் நம் மனத்துள் எழுந்தால் தன்னலம் தலை விரித்தாடுமா ? எனவே அவ்வெண்ணம் ஏற்பட்டிட

> "காக்கை குருவி எங்கள் குலம்—நீள்
> கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என எண்ணிடுவீரென வேண்டுகிருர். எல்லாரும் இறைவனின் மக்கள் என்ற உயரிய நோக்கினராய் தன்னலத் திடல்களைந்து பொதுநலக் குதிரைமீதமர்ந்து நமது பாதையின் இருமருங்கும் ஒற்றுமைச் சோலை கண்டு அதன்வழியே இன்பலோகத்துக்கு யாத்திரை சென்றிடமுடியும்.

இறுதியாக "தாய்த் திரு நாடெனிலினிக் கையை விரியோம்" எனக் கூறித் தமது வீரத்தை வெளிப்படுத்துகிருர் தமிழ்ச் சுதந் திர வீரர். சுதந்திரத்துக்கு ஈடு எதுவு மில்லை. எந்த இன்பத்திற்காகவும் சுதந் திரத்தை இழக்கக்கூடாது எனக் கூறிட

"மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின் மாண்பினை இழப்பரோ"

எனப் புகலுகிருர். பெற்றற்கரிய பெரும் சுதந்திரத்தை அன்பதால் பெறமுடியாவிட் டால் வீரத்தாலாவது பெறவேண்டும் எனக் கூறுகிருர். வாதாபியின் வாயைக் கிழித்து, புலிகேசியைப் புறமுதுகிடச் செய்து, கனக விசயன் தலையில் கல்லேற்றிக் கழுத்தை நெரித்து, மன்னுதி மன்னர்களை மண்டியிடச் செய்த தமிழரின் வீரத்தை யெண்ணிக் கைவிரித்துக் கேட்கப்போவதில்லை என் கிருர். சுதந்திரத்தை எதற்குமே ஈடாகத் தரமுடியாதென்கிருர். அதை, எதை முன் னிட்டாவது இழந்துபோனுல் அதைக் "கண்ணிரண்டு விற்றுச் சித்திரம் வாங்கு தற்கு" ஒப்பிடுகிருர். அங்ஙிலை ஏற்படாத வாறு சுதந்திரத்தை வீரத்தால்பெற்று வெற்றிப்பாடல் பாடிக் கொற்ற முழக்கம் செய்யத் தூண்டுகிருர். அடிமைவாழ்வு கூடாதென்பதற்காகப் "பூமியிலெவர்க்கும் இனி அடிமை செய்யோம்" என்கிருர். அடிமைவிலங்கை வீரத்தால் முறித்து சுதந் திரமாய்க் காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடி இன்பலோகத்தின் எல்லையைப் பிடித் திடலாம்.

இவ்வாறு துன்பமின்மை, செல்வம், நல் லறம், சமத்துவம் நிறைந்த இன்ப லோகத்தை அடைவதற்காகப் பாரதி காட் டிடும் பாதையில் பல இடுக்கண்களோடு இடறி மோதிட நேரிடுகிறது. இன்னல், ஏழ்மை, அடிமைவாழ்வு என்பன கற்களாக வும், முட்களாகவும் நின்று நம்மைத் தடுத்து நிறுத்துகின்றன. அக்கற்களையும், முட்களை யும் அச்சமின்மை, முயற்சி, பிறர்நலம் பேணல், சமத்துவம்போன்ற பாதக் குறடு களின் துணைகொண்டு கடந்து, இன்ப லோகத்துக்கு இட்டுச்செல்லும் அப்பாதை யின் வழிநடந்து, பைந்தமிழ்ச் செல்வன் பாரதியைத் தொடர்ந்து, அவன் காட்டிடும் இன்பலோகத்தினை எட்டிப் பிடித்து, நிறைந்த சுகத்தினராய்ச் செறிந்த புகழின ராய் வாழ்ந்திடுவோம்.—முற்றும்.

கிறித்தியன் மிக்கேல்ராசு,
இடைக்கலை, 2-ம் பிரிவு.



புரட்சி

விரைந்தேன் வீட்டை நோக்கிக் குலைந்தேன்
இரங்கும் நிலையினைக் கண்டு என்னிலை ?
விரையொலி கூந்தல் விரித்தவென் தாயோடு
வீங்கிய கண்ணொடு விம்முமென் தங்கை
ஏங்கி அழுதது கேட்டேன் கேட்டதும்
ஓங்கினேன் வாளோடு கையே! "நீயே
ஈங்குன் மாற்றான் தலைதனைக் கொண்டிடு
தரணியில் வாழ ஒட்டேல்" என்றப்
பொய்ப்புரட்சி யெண்ணம் என்னுளம் தன்னில்
மெய்யென நுழைந்தது மனமது மறிந்தது.
ஓடினேன் வீதியின் வழியே பகையைத்
தேடினேன் எங்கணும் வாழ்வதை முடித்திட
அக்காலை,
அறிவே உருக்கொடு வந்த தொப்ப
செறிவுறு செந்தமிழ்ச் செல்வர் ஒருவர்
ஆறுக சினம் அடங் குகவே கோபம்
கடுஞ்சின மதனால் கருத்திழந் திடாதே
கருதிய முடிப்போம் கோபந் தணித்திடு
எனவும் புரட்சி புரட்சி என்றனன்.
சிரித்தா ருரைபெறு சீரியல் பினர்தாம்
வீதிக் கடையில் வசிக்குமென் தோழன்
போதுறு மலரணி புனைகுழல் முகையெனும்
பற்கள் தேனினு மினிய செந்தமிழ்ச்
சொற்கள் செவ்விய அதரங் கொண்டவென்
அன்னை தங்கை யிவரை யிகழ்ந்தனன்
அழகிலார் அருளிலார் பண்பிலா ரென்று
அழிவைத் தேடியே கூறிய கயவன்
செந்நீர் சிந்தியே தலையிழந் திடவே ;
கன்னல் தமிழாக் கூறுவதைக் கேட்டிடு
இன்னலைத் தந்திடும் இழிவுறு கோபம்
இன்னே தொலைத்திடு என்றிட அமர்ந்தேன்.
தென்ற லுலவிடும் நாட்டவர் கூறினர்.

ஓங்குக!

புரட்சி யென்பது புதுமை காண்பதே
புரட்டித் தள்ளிடும் கொடுஞ்செய லன்று
புரட்சி புரட்சி என்றவ ருனக்கு
புத்தியைப் புகட்டிலர் புதுமைக்கு வழியை
வகுத்திலர் புரட்சி ஓங்குக! அறிந்திடு
வருந்த விடாதே மற்றவர் மனமதை;
காந்தச் சிலைபோல் கவர்ந்திடு தோழரை
உன்தோழ ரெனவே உண்மை கூறிடு
சென்றுவா வென்றுநீ திரும்பிவா புரட்சி
ஓங்குக வென்றார் ஓங்குகை வாங்கினேன்
ஓடினேன் தோழனை நோக்கிக் கூறினேன்
கவின்சேர் குறளே என்தாய் காதணி
கழுத்தணி ஒளிர்மிகு குண்டல கேசியே
வட்டுடை விரையாலி வளையா பதியே
வளர்பிறை வடிவணி சிந்தா மணியே
மாதுளைக் கன்னம் மணிமே கலையே
மாண்புறு தலையணி சாத்தன தாரம்
குங்கும நிறத்தோழில் ஓங்குமென் தங்கை
அங்கம் செந்தமிழ்ப் பாடல் அணியதாம்
பொங்கு நகைசேர் செவ்வாய் பொருளே
ஆங்குள பற்கள் பாரதி பாடல்
இனியநல் இடையணி இன்று இனிதே
இட்டிடும் தொடைதான் தொகைநூல் எட்டே
இயம்பரும் நடைதான் இராமா யணமே
அழகுறு அதரம் அழகின் சிரிப்பே
என்றதும் என்னருள் தோழன் மகிழ்ந்து
என்னை நோக்கினன் உண்மை உணர்ந்து
புரட்சி செய்தேன் பலனும் பெற்றேன்
புரட்சி ஓங்குக புதுமுறை தனிலே

ஞா. கிறித்தியன் மிக்கேல் ராசு;
இடைக்கலை இறுதி வகுப்பு

வீரமாமுனிவர் தமிழ்ச்சங்கம்

1952—'53 ஆண்டு அறிக்கை

நமது தமிழ்ச்சங்கத்தின் தோற்றுவாய்க் கூட்டம் ஆகஸ்ட் 11-ம் நாள் திங்கட்கிழமை நடைபெற்றது. நெல்லை ம. தி தா. இந்துக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் இராவ்சாகிப் கு. அருணுசலக் கவுண்டர் அவர்கள் தலைமை தாங்கினுர்கள். நமது கழகத்தின் துணைத்தலைவர் திரு. ஆ. அருளப்பன் அவர்கள் பேச்சாளரையும், தலைவரையும் கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்வித்து, அவர்களிருவருக்கும் நல்வரவு கூறி வரவேற்றுர். வண்ணுர்பேட்டை வழக்கறிஞர் திரு. கி. பட்சிராஜன், பி. ஏ. பி. எல். அவர்கள் "மாணவரும் தற்கால உலகமும்" என்னும் பொருள்குறித்து உரை நிகழ்த்துங்கால், பண்டைத்தமிழர் பண்பாட்டையும் அவர்களது சமூக வாழ்க்கையையும் தெளிவாக எடுத்துச்சொன்னுர்கள். மேலும் பேசுகையில், நம் நாட்டிலுள்ள அரசியல் கழகங்களையும், அவைகளால் மாணவர்கள் எவ்வாறு கவரப்படுகிருர்கள் என்பதையும் எடுத்துக் கூறியபின், மாணவர்கள் அத்தகைய அரசியல் கழகங்களின் வலையில் சிக்கிவிட வேண்டாம் என எச்சரிக்கையும் விடுத்தார். அவர் தனது பேச்சின் முடிவில், மாணவர்கள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் நலத்துக்காகவும் நன்கு உழைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தலைவர் தமது முடிவுரையில், வீரமாமுனிவரது தமிழ்ப்பணியின் சிறப்பை எடுத்தோதி, அவர் எழுதிய நூல்களைத்தொகுத்து வெளியிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினுர். அமைச்சர் நன்றிகூறி மாலை சூட்டக், கூட்டம் இனிது கலைந்தது.

ஆகஸ்ட் 18-ம் நாள் திங்கட்கிழமை நடைபெற்ற இரண்டாவது கூட்டத்திற்கு திரு. ஆ. அருளப்பன் அவர்கள் தலைமை தாங்கினுர்கள். "தமிழ் நாட்டில் தமிழ் மொழியே அரசியல் மொழியாதல் வேண்டும்" என்னும் பொருள்பற்றிச் சொற்போர் ஒன்று நடைபெற்றது. இப்பொருளை ஆதரித்து மூன்ரும் வகுப்பு மாணவர் திரு. சி. கணேசன் பேசினுர். அவரை ஆதரித்து நான்காம் வகுப்பு மாணவர் திரு. பி. ஜே. முத்துராஜ் பேசினுர். இவ்விருவரும், தமிழ் அரசியல் மொழியாக இருந்தால்தான் தமிழ் வளர்ச்சி மேம்பாடடையும் என்பதைப் பலவித எடுத்துக்காட்டுகளுடன் எடுத்தியம்பினர். "தமிழ் மொழி அரசியல் மொழியாதல் சாத்தியமற்றது" என்று மூன்ரும் வகுப்பு மாணவர் திரு. எம். சின்னத்தம்பி பேசினுர். அவரை ஆதரித்து நான்காவது வகுப்பு மாணவர் திரு. ஈ. கா. சோ. மகாலிங்கம் பேசினுர். இவ்விருவரும், தமிழ் மொழி அரசியல் மொழியானுல் தமிழர்கள் வெளி உலகத்துடன் தொடர்புகொள்ள இயலாது என வாதாடினர். பலர் பொருளைத் தாங்கியும், தாக்கியும் பேசியபின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில், "தமிழ் நாட்டில் தமிழ் மொழியே அரசியல் மொழியாதல் வேண்டும்" என்பதற்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்ததால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தலைவர் தமது முடிவுரையில் தமிழ் நாட்டின் அரசியல் மொழியாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை அழகாக எடுத்தியம்பினுர்கள்.

மூன்றாவது கூட்டம், ஆகஸ்ட் 25-ம் நாள், நான்காவது வகுப்பு மாணவர் திரு. கு. அரிதாசப் பாவலன் தலைமையில் நடைபெற்றது. ஆங்கில ஆசிரியர் திரு. இரா. சங்கர நாராயணன் பி. ஏ. அவர்கள், "தமிழ் மொழியில் பிற மொழிக்கலப்பு" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் தமது உரையில், தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பதற்குரிய சூழ்நிலைகளை எடுத்துரைத்து, தமிழ் மொழிக்குப் புத்துணர்ச்சியையும், சிரிளமையையும் கொடுக்கும் பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழியுடன் சேர்த்துக்கொள்ளுவதை வரவேற்றார். தலைவர் முடிவுரைக்குப்பின் அமைச்சர் நன்றிகூறக் கூட்டம் சிறப்பாய் முடிவுற்றது.

ஆகஸ்ட் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சிறப்புக்கூட்டத்திற்கு, நமது சங்கத் தலைவரும், கல்லூரித்தலைவருமாகிய, சங்கைக்குரிய கே. ஏ. சூசை, சே. ச. அவர்கள் தலைமை தாங்கினார்கள். "குடியரசு இந்தியாவின் முதல் பாராளுமன்றம்" குறித்து நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. டி. தாணுபிள்ளை, பி ஏ. அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அன்னார் தமது உரையில், மக்கள் சபையில் சட்டங்கள் நிறைவேற்றப் படும் விதங்களையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சிறந்த சொல்லாற்றலையும் எடுத்தியம்பி, காஷ்மீரின் இன்றையநிலை, தடுப்புக்காவல் சட்டம், மொழிவாரி மாகாணப் பிரிவினை, இவைகளைப்பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களின் பொதுவான கருத்துக்களையும் நன்றாக விளக்கிச் சொன்னார்கள். தலைவர் தமது முடிவுரையில் இந்தியப் பாராளுமன்ற நடவடிக்கைகள், பிறநாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்குங்கால் சிறப்பு வாய்ந்ததாகத் தோன்றுவதாகக்கூறி, மக்கள் சபை உறுப்பினர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்திக் கூறினார்கள்.

பல்கலைக்கழகச் சொல்வன்மைப் போட்டியில் கலந்துகொள்ளும்பொருட்டு இரு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அக்டோபர் 13-ம் நாள் திங்கட்கிழமை ஒரு கூட்டம் நடைபெற்றது. "தமிழ் நாட்டில் தமிழ் மூலம் பாடம் கற்பித்தல்," "இந்தியாவில் மொழிவழி மாகாணம் அமைத்தல்," "தமிழ்ப் படக்காட்சியின் இன்றைய நிலை," இவற்றுள் ஒன்றுபற்றிப் பல மாணவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவர்களுள் இரண்டாவது வகுப்பு மாணவர்களாகிய திருவாளர்கள் கு. சிவதாணு, கிறிஸ்டியன் மைக்கேல்ராஜ் இருவரும் தெரிவு செய்யப் பட்டனர்.

நமது சங்கத்தின் ஆறுவது கூட்டம், அக்டோபர் 25-ம் நாள் சனிக்கிழமை, திரு. ஆ. அருளப்பன், பி.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நமது கல்லூரி பழைய மாணவர் திரு. எம். எஸ். ஜேசுதாஸ் தங்கசாமி, எம்.ஏ.பி.டி., அவர்கள், "தமிழர் பண்பாடு" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். அவர்கள் தமது பேச்சில், தமிழ் நாட்டின் பண்பையும், பண்டைத் தமிழரின் பலதரப்பட்ட கலைகளையும், வாணிப முறைகளையும், பட்டினப்பாலை, புறநானூறு முதலிய தமிழ் இலக்கியங்களின் வாயிலாக விளக்கிக் கூறி, பண்டைத் தமிழர்களின் நற்பண்பைக் காத்து, தமிழுக்குப் புத்துணர்ச்சியும், புது ஒளியும் கொடுக்க வேண்டியது தமிழ் மாணவர்களின் கடமை என்பதை வற்புறுத்தினார்கள். தோல்வியைக் கண்டு மயக்கமோ, அச்சமோகொள்ளாது, தோல்விகளே வெற்றிக்கடிப்படை என்பதை உணர்ந்து அயராது உழைக்க வேண்டுமென்று தலைவர் தமது முடிவுரையில் அறிவுறுத்தினார்கள்.

ஏழாவது கூட்டம் சொற்போர். அக்டோபர் 27-ம் நாள் திங்கட்கிழமை நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. இரா. சங்கர நாராயணன், பி.ஏ. அவர்கள் தலைமை வகித்தார்கள். "பொதுவாகப் படக்காட்சியினால் நன்மையைவிடத் தீமையே அதிகம்" என்பது பொருள். தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய இரண்டாவது வகுப்பு மாணவர் திரு. கிறிஸ்டியன் மைக்கேல் ராஜனும், முதல் வகுப்பு மாணவர் திரு. ராஜ் விக்டோரியாவும் படக்காட்சிகளின் தாழ்ந்த கருத்துக்களையும், கீழ்த்தரமான காட்சிகளையும் எடுத்துக் காட்டுகளுடன் உணர்ச்சி ததும்ப எடுத்துக் கூறி, தங்கள் கட்சியே சரி என்று வாதாடினர். தீர்மானத்தை வெட்டிப் பேசிய இரண்டாவது வகுப்பு மாணவர் திரு. கு. சிவதாணுவும், நான்காவது வகுப்பு மாணவர் திரு. வ. கி. சிவராமனும் படக்காட்சிகள் மக்களுக்கு பலவிதங்களில் அறிவு புகட்டுகிறது எனவும், படக்காட்சிகள் பலவித நன்மைகளைச் செய்வதாகவும் கூறித் தங்கள் பக்கம் வாதித்தனர். தீர்மானத்தைத் தாங்கியும், தாக்கியும் பலர் பேசியபின் நடைபெற்ற வாக்கெடுப்பில், படக்காட்சியினால் தீமையைவிட நன்மையே அதிகம் என்பதற்கு ஆதரவாகப் பெரும்பான்மை வாக்குக் கிடைத்ததால் தீர்மானம் தோல்வியுற்றது. தலைவர் தமது முடிவுரையில் படக்காட்சியில் நன்மையும், தீமையும் கலந்திருப்பினும் நல்லன நாடுதலே நன் மக்கட்கழகு என்று தன் அபிப்பிராயத்தைக் கூறினார்கள்.

1953-ம் ஆண்டு ஜனவரி 17-ம் நாள் சனிக்கிழமை நடைபெற்ற எட்டாவது கூட்டம் சிறப்புக் கூட்டம். இக் கூட்டத்திற்கு தலைவராக இருந்து, "தமிழ்பற்றிய சில குறிப்புகள்" ("A Few Remarks on Tamil") என்னும் பொருள்பற்றி, சங். J. அருளானந்தம், S.J., அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் பேச்சின் சுருக்கமாவது; தமிழ் என்றால் அமுதம் என்று பொருள். வடமொழிக்கும், தமிழுக்கும் யாதொரு தொடர்புமில்லை. வடமொழி இலக்கணத்திற்கும், தமிழ் இலக்கணத்திற்கும் இடையே பல வித்தியாசங்கள் உண்டு. தமிழ் மொழி பன்னிரு மொழிகளின் தாய்; பதினெட்டு மில்லியன் மக்கள் பேசும் மொழி; துரானி மொழியின் பிரிவு என்று அந்நிய அறிஞரின் வாயிலாக அறிகிறோம். தமிழ் சித்தியன் மொழியினின்றும் வந்ததாகக் கால்டுவெல் கூறுகிறார். இவ்வாறு பலதரப்பட்ட ஆராய்ச்சிகளுடன் ஓர் அரிய சொல் விருந்தளித்தார்கள். திரு. ச. குரூஸ் அந்தோணி, எம்.ஏ. அவர்கள் சங்கைக்குரிய J. அருளானந்தம், S.J. அவர்களின் தமிழ்ப் பற்றைப் பாராட்டிப் பேசினார்கள்.

வெ. சேதுராமலிங்கப் பாண்டியன்
அமைச்சர்

வீரமாமுனிவர் தமிழ்ச் சங்கம்
புனித சவேரியார் கல்லூரி.

கு. சிவதாணு
துணை அமைச்சர்.

Exchanges

Alagappa Chettiar College Magazine, Karaikudi
American College Magazine, Madurai
Anderson High School Annual, Kancheepuram
Annamalai University Magazine, Annamalainagar
Bishop Heber Hall, Tambaram
Carmela, Mangalore
De Britto High School Annual, Devakottai
Excelsior, St. Berchmans' College, Changanacherry
Farook College Magazine, Feroke
Government Brennen College Magazine, Tellicherry
Government College Magazine, Kumbakonam
Holy Cross College Magazine, Trichinopoly
Loyola College Annual, Madras
Madras Christian College Magazine, Tambaram
Madura College Magazine, Madura
M. D. T. Hindu College Magazine, Tirunelveli
Metkem Mettur Chemicals, Mettur
Mrs. A. V. N. College Magazine, Vizag.
North Point Annual, Darjeeling
Pachaiyappa's College Magazine, Madras
Presidency College Magazine, Madras
Pudukottai College Magazine, Pudukottai
Queen Mary's College Magazine, Madras
Sacred Heart College Annual, Thevara
Salem College Magazine, Salem
Sanatana Dharma College Magazine, Alleppey
Sarah Tucker College Magazine, Palamcottah
Senthikumar Nadar College Magazine, Virudunagar
Sophia College Magazine, Bombay
Stella Maris College Magazine, Madras
St. Albert's College Annual, Ernakulam
St. Aloysius' College Annual, Mangalore
St. Aloysius' College High School Magazine, Mangalore
St. John's College Annual, Palamcottah
St. Joseph's College Magazine, Bangalore
St. Joseph's European High School Annual, Bangalore
St. Joseph's Indian High School Annual, Bangalore
St. Joseph's College Magazine, Trichinopoly
St. Joseph's College High School Annual, Trichinopoly
St. Mary's College Magazine, Trichur
St. Mary's High School Annual, Dindigul
St. Mary's High School Annual, Madurai
St. Philomena's College Annual, Mysore

St. Stanislaus High School Magazine, Ernakulam
St. Teresa's College Magazine, Ernakulam
St. Theresa's Congregation Colleges and Schools Annual
St. Thomas College Magazine, Trichur
St. Thomas High School Annual, Virapandianpatnam
St. Xavier's College Magazine, Bombay
St. Xavier's College Magazine, Calcutta
St. Xavier's High School Annual, Palamcottah
T. D. T. A. High School Annual, Chritianagaram
Tech-Mag., Coimbatore
The Educationist, Kozikode
The Little Flower High School Annual, Salem
The South Indian Journalist Annual
Unitas, Mangalore
University College Magazine, Trivandrum
Victoria College Magazine, Palghat
Voorhees College Magazine, Vellore
Zamorin's College Magazine, Calicut

CONNEMARA PUBLIC LIBRARY
13 AUG 1955
MADRAS

Printed at St. Joseph's Industrial School Press Tiruchirapalli—1953.